# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஒக்ரோபர்.30 - நவம்பர்.05, 2013 பக்கம் - 24 30/-



## இன்னும் உறுமும் வெள்ளை வான்

யாழ்ப்பாணத்தில் மீண்டும் திகில்

## சூதாட்டத்தில் இலங்கை




மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரு. 189 | ரு. 300 | ரு. 100 | ரு. 400 |
| ரு. 589 | ரு. 900 | ரு. 400 | ரு. 1,300 |

SLIM BRAND EXCELLENCE 2013

Sri Lanka Telecom Mobitel

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கல்வி: அடக்கு முறையும், எழுச்சியும்

இளையவன்னியன்



**ஒரு** இனத்தைக் கருவறுக்க வேண்டுமாக இருந்தால், நிலைத்திருப்பைப் கேள்விக்கிடமாக்க வேண்டுமாக இருந்தால், அடக்குமுறைக்கு உள்ளாக்க அல்லது தேசிய ஒற்றுமையைச் சிதறடிக்க வேண்டுமெனில் அந்த இனத்தின் காலசாரம், கல்வியில் கை வைப்பதே ஆதிக்க சக்திகளின் முதல் வேலையாக அமைவது என்பது வரலாறு கற்று தந்த மிக முக்கியமான பாடம். அந்தப் பாடத்துள் நடைமுறை உலகில் பாதிக்கப்படும் இனங்களுக்கான பொருத்தமான உதாரணமாகத் தமிழர்கள் பல தசாப்தமாக இருப்பதுதான் ஒரு வேதனைக்குரிய விடயமாக இருந்து வருகின்றது.

ஈழத்தமிழினத்தின் நிலைத்திருப்பை நிர்மூலமாக்கல் என்னும் நீண்ட தூர இலக்குக்காக சிறிலங்கா அடக்குமுறை ஆட்சியாளர்கள் வகுத்த மிக முக்கியமான உத்தியே தமிழ் மக்களைக் கல்வியில் நசுக்குதல் ஆகும். இதற்கு ஏற்றாற்போல பல செயற்பாடுகளை அன்று முதல் இன்றுவரை சிங்கள இனவாத அரசு தொடர்ச்சியாக செய்து வருகின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் ஒரு முறையான கல்விப் பாரம்பரியம் அவர்களுக்கு இருந்தது. அதனால் ஐரோப்பியர் ஆட்சிக்காலத்திலும் அவர்கள் தமிழ்த் தேசத்தைச் சிங்களவரிடம் தாரை வார்த்துச் சென்ற பின்னும் சரி அதிகம் படித்தவர்களர்கவும், கல்விமான்களாகவும். மருத்துவர்களாகவும், அரச உத்தியோகத்தர்களாகவும் தமிழர்கள் இருந்தார்கள். இதனை அவர்கள் தமது கல்வியினூடானதிறமையால் பெற்றிருந்தார்கள். இத்தீவின் முதல் படித்த புத்திமான் என்ற பெருமை தமிழரான சேர். பொன் இராமநாதனுக்கு கிடைத்தமை தமிழர்கள் கல்வியில் சிறந்து விளங்கினார்கள் என்பதற்கான அடையாளம்.

இவ்வாறான ஒரு சூழலிலேயே தமிழரின் மிகப் பெரும் செல்வமாக விளங்கிய கல்வியைக் கண்டு அச்சம் கொண்டு சிங்களம் அதனைச் சிதைக்கத் தொடங்கியது. அது இன்றுவரை தொடர்கிறது. அதில் முக்கியமானது பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறைமை ஆகும். இது நேரடியாகத் தமிழர் கல்வி மீது மேற்கொள்ளப்பட்ட ஒரு தாக்குதல். அதாவது திறமை அடிப்படையில் தமிழர்கள் அதிகளவாகப் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிறார்கள் என்பதை உணர்ந்த சிறிலங்கா அதில் வீழ்ச்சியை ஏற்படுத்துவதற்காகப் பரீட்சைப் புள்ளிகளை மொழிவாரி யாக தரப்படுத்தல், மாவட்ட சனத்தொகை அடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி, திறமை(40%) - மாவட்ட (60%) அடிப்படையில் அனுமதி வழங்கல் என மாறி மாறி அனுமதி கொள்கைகளை அமுலாக்கி தமிழில் கல்வி பயின்ற மாணவர்களின் அனுமதியை குறைப்பதில் அது வெற்றியும் கண்டது. அதனை இன்னமும் தக்க வைத்துக்கொண்டும் இருக்கிறது.

சிறிலங்காவின் குடியேற்றத்திட்டங்கள் தமிழர் பூமியில் அவர்களைச் சிறுபான்மையாக்கும் நோக்கம் கொண்டதால் மாவட்ட சனத்தொகைக்கேற்ப பல்கலை அனுமதி கொடுக்கும் போது அங்கேயும் தமிழர் கல்விக்கு பாரிய அடி விழுந்தது. சிங்களம் மட்டும் தனிச்சட்டம், அரச கரும மொழி ஆன போது தமிழில் கல்வி கற்போரின் நிலை கவலைக்கிடமாகியது. தமிழ் மொழி மூலம் கல்வி கற்ற தமிழர்கள் அரச சேவைக்கான ஆட்சேர்ப்பில் திட்டமிட்டு பழிவாங்கப்பட்டனர். 1980 களில் வேலையற்றோர் வீதம் சிங்களவர்கள் 29%, தமிழர்கள் 41% வேலை வாய்ப்பு வெற்றிடம் 9,965 ஆக இருந்தது. ஆனால் இதில் 9,326 சிங்களவர்களால் நிரப்பப்பட மிகுதி வெறும் 492 தான் தமிழர்களுக்கு கொடுக்கப்பட்டது. இது பாரபட்சத்துக்கும் பழிவாங்கலுக்குமான உச்ச சான்று.

தமிழ் மக்களுடைய ஆயுத போராட்டத்துக்கு அடிப்படையான காரணங்களை ஆராய்பவர்கள் அனைவரும் கூறும் முக்கிய ஒரு காரணமாகத் தமிழர் கல்வியில் ஓரங்கட்டப்பட்டமை இருந்து வருகின்றது. உண்மையும் அதுதான். அதே கனம் சிறிலங்காவின் தமிழர் மீதான யுத்தம் என்பது அவர்களின் கல்வி மீதான யுத்தமே. அதில் இரையாகியவர்கள் இளங்கல்வி தலைமுறையே. எவ்வாறாயினும் இழந்தது எல்லாம் இழந்து போக இழக்காமல் இன்றும் தமிழர்கள் தம்மோடு வைத்திருக்கின்ற ஒன்றுதான் கல்வி. முள்ளிவாய்க்கால் தமிழர்களை நிர்வாணமாக்கியது , நிர்க்கதியுமாகியது. தாங்க முடியாத அந்த இழப்பு ஏற்க முடியாத அதிர்ச்சி, எல்லை கடந்த வலி அதன் தொடர்ச்சிக்கால கல்வியில் தாக்கம் செலுத்துகிறது. ஆனாலும் தமிழ் மக்களுக்கான திடமான கல்விப் பாரம்பரியம் என்னும் அடித்தளம் இன்றும் பலமாகவே இருக்கிறது, அது மீளெழுச்சி பெற போராடிக்கொண்டு இருக்குறது. ஆகப் போராடுகிறது என்றால் அது பிரச்சினைகளைத் தடைகளை எதிர் கொள்கிறது என்றே அர்த்தம்.

உட்கட்டமைப்பு வசதி என்று பார்த்தால் இன்றும் பால மரத்துக்கு கீழ் இருந்து பாடம் படிக்க வேண்டிய சுழலே அனேக தமிழ்க் கிராமங்களில் உள்ளது. ஆசிரியர் பற்றாக்குறை அது ஒரு தீராத புற்று நோய். உண்மையில் கல்வித்தர மேம்பாடு என்பது ஆசிரியர் தெரிவு, பயிற்சி , அவர்களுடைய சமூக அந்தஸ்து வேலைச்சுழல் என்பவற்றைப் பொறுத்தது என்று சொல்லப்படுகிறது. ஆனால் தமிழர் கல்வியில் இந்தச் சுட்டிகளின் நிலை கவலைக்கிடமாகவே இருக்கிறது.

பாட நூலாக்கத்தில் சிங்கள, பௌத்த திணிப்புக்காக அவர்கள் சார்ந்ததை அப்படியே மொழி பெயர்த்து தமிழ் பாடங்களாக்குகிறார்கள். தமிழர் வரலாறு திட்டமிட்டு மறைப்படிப்புச் செய்யப்படுகிறது. அத்தோடு விநியோகம், பாடசாலை நிர்வாகம், மேற்பார்வை, கல்வித்தரம் பேணல். நிதி மற்றும் வளப் பங்கீடு எனப் பல பிரச்சினைகளை முகம் கொடுக்கிறது.

தமிழர் பிரதேசம் நோக்கிய புதிய சிங்கள குடியேற்றத் திட்டங்கள் தமிழ் மாணவர்களின் பல்கலை அனுமதியில் வீழ்ச்சியை எதிர்காலத்திலும் அதிகப்படுத்த போகிறது. மறுபுறம் இளந்தலைமுறையைக் கல்வியில் இருந்து தூரப்படுத்த சுதந்திரமான போதைப்பொருள் விநியோகம், விபச்சாரம் என்பவை அவர்கள் மீது பெரும் வலையாக விரிக்கப்படுகிறது. இதுவே தற்போதைய நிலையில் தமிழர் கல்வியின் மிகப்பெரிய எதிரியாக இருக்கிறது.

இது அறிவுசார் யுகம், அறிவே மிகப்பெரிய ஆயுதம், அறிவாளியே பலசாலி, அறிவே இந்த உலகை ஆள்கிறது. நிலம், உழைப்பு, முயற்சி, மூலதனம் என்பவற்றை விட கல்வி அறிவே இவ்வுலகின் உற்பத்திக் காரணியாகவும் இருக்கிறது. இழந்த தேசத்தை பெறுவதற்காகப் போராடும் ஒரு இனம் என்ற அடிப்படையில் இந்த உலகத்தை வெற்றி கொள்ள வேண்டுமாக இருந்தால் தமிழர்கள் அறிவால் தமது தேசியத்தைக் கட்டி எழுப்ப வேண்டும். தமிழர்களைப் பொறுத்த வரையில் அது ஒரு இலகுவான காரியமே ஏனெனில் அறிவை பெற சிறந்த வழி கல்விப்தான். தமிழர்கள் தமக்கான நீண்ட பலமான கல்வி பாரம்பரியத்தை உடையவர்கள். அதனை நவீன காலத்திற்கேற்ப பலமான கட்டமைப்பாக, பல்துறை சார் கட்டமைப்பாக, பிரயோகக் கட்டமைப்பாக, வளர்த்தெடுக்க வேண்டிய தேவை உள்ளது.

தமிழ்ச் சமூகம் ஒன்றை திடமாகப் புரிந்து கொள்ள வேண்டும். கற்காதவர்கள் ஒரு சமூகத்தின் சுமையாக உருவாகிவிட்டார்கள், கற்றோர் குழாமே உண்மையான செல்வங்களாகக் காணப்படுகிறார்கள். சிந்தனைத் தூறல்களால் சிதறடிபடாமல் சிறந்த கல்விச்சமுகத்தை உருவாக்க அரப்பணிப்புடன் உழைக்கவேண்டும். எம் மவர்கள் மாகராணிக்கு படிப்பிச்சவர்கள், நாங்கள் தான் படித்த முதல் மனிதன் என்ற பேருக்கு இந்த தீவில் சொந்தக்காரர் என்று எவ்வளவு காலந்தான் இன்றைய சந்ததிமார் தட்டப் போகிறது, அதனை விடுத்து தாமும் கல்வியில் துறைசார் சாதனை படைக்க முனைப்புக் காட்ட வேண்டும்.

தமிழ் மக்களுடைய கல்வி ரீதியான பிரச்சினை இதுவரையிலும் எந்த ஒரு தமிழ் அரசியல் தலைவர்களாலும் சரியான முறையில் கையாளப்படவில்லை அல்லது கையாளக்கூடிய திராணி உள்ள தலைவர்கள் இதுவரையிலும் வரவில்லை என்றே தோன்றுகின்றது. தமிழரசு மலர்ந்துவிட்டது என்று கூறுபவர்கள் தமது முதல் கடமைகளில் ஒன்றாகத் திட்டமிட்ட கல்வி அபிவிருத்தியை மேற்கொள்வதோடு தடைகளைக் களைய முயற்சி செய்ய வேண்டும்.

மரணத்தை வென்ற தமிழ் மக்களால் வாழ்வை வெற்றி கொள்வது ஒரு விடயமல்ல , தமிழ் மக்களுடைய இலட்சிய போராட்டம் என்பது அடுத்த கட்டத்துக்கு நகர்த்தப்பட வேண்டுமாக இருந்தால் கல்வியில் எழுச்சி கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாய தேவையாக இருக்கிறது. எந்த அளவுக்கு அறிவையும் அதனோடு அறி வார்ந்த தேசியத்தையும் இறுகப் பிடித்துக்கொள் கிறோமோ அந்த அளவுக்கு விடுதலைப் பயணத்தை விசாலமாக்கி, பலப்படுத்தி சுதந்திரத்தைப் பெற்று கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதி கிட்டாதா நிமலரூபனுக்கு ?



அக்கினிகுமாரன்

நிமலரூபன் ஒரு போராளியல்ல! அவன் என்றுமே எவருக்குமெதிராக ஆயுதமெடுத்துப் போராடியவனுமல்ல! அவன் ஒரு அரசியல் வாதியல்ல. ஆர்ப்பாட்டங்களை நடத்தியோ, உணர்ச்சி வசப்படுத்தும் உரைகளை ஆற்றியோ குழப்பங்களை விளைவித்தவனும் அல்ல! அவன் ஒரு சாதாரண இளைஞன். அதிலும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஒரு இளைஞன். அவனுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது! எந்த ஒரு நீதிமன்றத்திலும் நிறுத்தப்படவில்லை! எந்த ஒரு விசாரணை யும் நடத்தப்பட்டு சாட்சிகள் பதிவு செய்யப்படவுமில்லை. எந்த ஒரு நீதிபதியும் தீர்ப்பு வழங்கிவிடவும் இல்லை!

ஆனால் அவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டது? அது இந்தியாவில் போல் தூக்கிலிடப்பட்டல்ல. சீனாவைப் போல் துப்பாக்கியால் சுடப்பட் டல்ல. அமெரிக்காவைப் போல் மின்சாரம் பாய்ச்சப் பட்டல்ல. சவூதி அரேபியாவைப் போல் கழுத்துவெட்டப்பட்டுமல்ல.

அடித்து நொருக்கிச் சித்திரவதை செய்யப்பட்டு அவனுக்கு மரண தண்டனை வழங்கப் பட்டது. பெற்றோர் அவனைப் பார்வையிடச் சென்றபோது குற்றுயிராகக் கோமா நிலையிலும் கூட அவன் மருத்துவமனையில் கட்டிலுடன் கை, கால்கள் விலங்கிடப்பட்ட நிலையில் கிடத்தப்பட்டிருந்தான்.

கோமா நிலையில் உரிய கவனிப்பின்றி அவன் உயிரிழந்தான். எந்த ஒரு நாட்டிலும் காணப்படாத விசித்திரமான மரண தண்டனை! மனித உரிமை அமைப்புக்கள் விளக்கம் தேடினாலும் கண்டு பிடிக்க முடியாத விநோதமான மரண தண்டணை! எனவே- நிமலரூபனின் பெற்றோர் தமது மகனின் படுகொலை தொடர்பாக நீதி விசாரணை கோரி உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தனர்.

மனுவைப் பரிசீலனை செய்த பிரதம நீதியரசர் உட்பட மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகள் கொண்ட குழுவினர் மனுவைச் தள்ளுபடி செய்தனர்.

அது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு! அதில் உள்ள சரி, பிழை பற்றி எவரும் விமர்சனம் செய்ய முடியாது. அப்படி விமர்சித்தால் அது நீதிமன்றை அவமதித்த குற்றம்.

எனவே இந்தத் தீர்ப்பைப் பற்றி நாம் எதுவும் கூற விரும்பவில்லை. ஆனால் அத்தீர்ப்பு வழங்கப்பட்டமைக்கு கூறப்பட்ட இரு காரணங்கள் பொதுத்தன்மை கொண் டவை. தீர்ப்புக்கு வெளியே வந்து நிற்பவை. எதிர்கால நடவடிக்கைகள் சிலவற்றை நெறிப்படுத் தவல்லவை.

எனவே நாம் தீர்ப்பின் பக்கம் செல்லாமல், சொல்லப்பட்ட காரணங்கள் ஏற்படுத்தக்கூடிய எதிரொலிகள் பற்றி மட்டுமே உற்றுப் பார்க்க வேண்டியுள்ளது.

முதலாவது காரணம் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளின் போது இப்படியான மரணங்கள் தவிர்க்கப்பட முடியாதவை. ஆயுதப் போராட்டத்துடனோ அல்லது வன்முறை நடவடிக்கைகளுடனோ எவ்வித தொடர்பும் இல்லாத ஒருவன் பயங்கரவாதி எனக் கருதப்பட முடியுமா? அவனின் இயல்பான நடவடிக்கைகளுக்குப் பயங்கர வாத சாயம் பூசமுடியுமா?

பல தமிழ் கைதிகள் அடைக்கப் பட்டிருந்தனர். அவர்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணை என்ற பேரில் சகல விதமான சித்திரவதைகளையும் அனுபவித்தவர்களில் நிமலரூபனும் ஒருவன். அவர்களில் ஒரு பகுதியினரைத் தென்னிலங்கைச் சிறைக்கு மாற்றுவதை எதிர்த்து கைதிகள் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் இறங்கினர். அவர்களை வன்முறைப் பிரயோகத்தின் மூலம் ஓரளவு உணவு உட் கொள்ள வைக்கும் முயற்சியில் இறங்கிய இரு சிறை அதிகாரிகள் கைதிகளால் பயணக் கைதிகளாகப் பிடிக்கப் பட்டனர்.

அந்த நிலையில் பெருமளவு அதிரடிப்படையில் ஆயுதங்களுடன் இறக்கப்பட்டு கண்மூடித்தனமான தாக்குதலை மேற்கொண்டனர். தமிழ்க் கைதிகள் அனைவரும் அடித்த நொருக்கப்பட்டு கொழும்புச் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.

உயர்ந்த மதில்களால் சூழப்பட்டு வெளியார் எவருமே சாட்சிகள் இல்லாத அந்தச் சிறையில் தமிழ்க்கைதிகள் பூட்டிய பெரும் இரும்புக் கதவுகள் கொண்ட அறைக்குள் வைத்துக் கொடூரமாக தாக்கப்பட்டனர். கை, கால்கள் முறிக்கப்பட்டு மண்டைகள் உடைக்கப்பட்ட நிலையிலும் எவ்வித சிகிச்சையும் வழங்கப்படாமல் மீண்டும் மீண்டும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இது அவர்களின் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கை. இத்தாக்குதலில் படுகாயமடைந்து கோமா நிலைக்கு உட்படுத்தப்பட்ட நிமலரூபன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டான். கோமா நிலையிலும் அவன் கைகளிலும் கால்களிலும் விலங்குகள் பூட்டப்பட்டு கட்டிலுடன் பிணைக்கப்பட்டிருந்தான்.

இறுதியில் அவன் மரணமடைந்தான்!

அந்த மரணம் தொடர்பாக நீதி விசாரணை கோரி நிமலரூபனின் பெற்றோரால் உயர் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு நிராகரிக்கப்பட்டு விட்டது.

இன்று பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கைதிகளின் உயிர்வாழ்வு தொடர்பாகத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்ச நிலை தோன்றி யுள்ளது.

சிறையில் உள்ள எந்த ஒரு கைதியும் எந்த ஒரு காரணத்துக்காகவோ, காரணமின்றியோ கொல்லப் படலாம். அப்படுகொலையைப் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கை எனக்கூறி கொலையாளிகள் சட்டத்தின் படி தண்டிக்கப்படுவதிலிருந்து தப்பி விடலாம். இது மட்டுமல்ல விசாரணைகளிலிருந்த கூடத் தப்பிவிடலாம்.

எனவே பயங்கரவாதத் தடைசட சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் எந்த ஒரு தமிழ்க் கைதிக்கும் உயிர் உத்தரவாதம் இல்லை என்பது தெட்டத் தெளிவாகின்றது.

கடந்த வருட முற்பகுதியில் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் ஆயுதசாலையைக் கைப்பற்றி தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அங்கு பெரும் போர்க்களமே உருவானது.

அக்காலத்தில் மரணதண்டனைக் கைதிகள், பாதாள உலகக் கோஷ்டியினர், போதை வஸ்து வியாபாரிகள் எனப் பயங்கரக் குற்றவாளிகள் ஈடுபட்டனர்.

அதில் பல கைதிகள் கொல்லப்பட்டனர். சில சிறை அதிகாரிகளும் காயமடைந்தனர். அத்துடன் இராணுவமும் இறக்கப்பட்டு கலகம் முறியடிக்கப்பட்டது.

அந்தக் கலகம் பயங்கர குற்றவாளிகளால் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது தொடர்பான விசாரணைகளை நடத்த சிறப்பு விசாரணைக்குழு அமைக்கப்பட்டது. விசாரணைகள் இன்னும் நடைபெற்று வருகின்றன.

சிறைச்சாலையையே தங்கள் கட்டுப் பாட்டில் ஒரு நாள் முழுவதும் வைத்திருந்த பயங்கரக் கைதிகள் கொல்லப்பட்டமைக்காக விசார ணைக் குழு ஆனால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப் பட்ட நிமலரூபனின் கொலை பயங்கரவாததடுப்பு நடவடிக்கைக்குள் பதுங்கிவிட்டது.

அதாவது தமிழ்க் கைதிகளுக்கு சிறையில் கூட உயிர்ப்பாதுகாப்பு சட்டப்படி இல்லையா என்ற கேள்வி எழுகின்றது. இன ஒடுக்குமுறை ஆதிக்கம் செலுத்தாத இடமே இல்லை என்ற அளவுக்கு இலங்கையில் நிலைமை சீரழிந்துள் ளது என எவராலும் நம்பாமல் இருக்க முடியுமா?

இப்பிரச்சினை விசாரணைக்கு வருமானால் கொல்லப்பட்டவரின் உறவினர்கள் வெளி நாடுகளில் தஞ்சம் கோர வாய்ப்பாகி விடும் என்ற ஒரு எதிரொலியும் எழுந்துள்ளது.

இலங்கை அரசு சட்ட விரோதமாக வெளிநாடு சென்று தஞ்சம் கோருவதைத் தடுப்பதில் காட்டும் அக்கறைக்கு எவ் விதத்தி லும் குறைவுபடாத அக்கறையை சட்டபூர்வமாக தஞ்சம் கோருபவர்களைத் தடுப்பதிலும் கொண்டுள்ளது என்பதையே இக்கூற்று வெளிப்படுத்துகிறது.

அதாவது இலங்கை அரசு மேற்கொள்ளும் இன அடிப்படையிலான கொடுமைகளை ஏற்று வாழவேண்டும் எனவும் எங்கும் தப்பி ஓடிவிடக்கூடாது என்பதிலும் ஒரு உறுதியான கொள்கையைக் கொண்டுள்ளதையே வெளிப் படுத்துகிறது.

அதாவது இலங்கை ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் ஒரு அடிமை இனமாகவே பார்க்கப்படுகின்றனர். நிமலரூபனுக்கு எவ்வா று நீதி கிடைக்கவில்லையோ அவ்வாறே எந்த ஒரு தமிழனுக்கும் இலங்கையில் நீதி கிடைக்கப் போவதில்லை என்பதும் உண்மையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீழ்ந்து விடாத புன்னகையின் அரசியல்

## புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர்

# தமிழ்ச்செல்வன்

## பற்றிய ஒரு பதிவு

மறவன்



தமிழ்ச்செல்வனைப் பற்றியும் நினைவுக்குறிப் பொன்றை எழுத வைப்பதாக காலம் கட்டளையிட்டு விட்டது. காலத்தின் ஓட்டத்தில் மாற்றங்கள் வரும். சில மாற்றங்களை நாம் கற்பனை செய்தும் பார்ப்பதில்லை. மாற்றம் நிகழ்ந்துவிட்ட போதிலும் அந்த மாற்றத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் மனம் கிடந்து கிறுகும். அப் படிப்பட்ட மாற்றம் தான் பிரிகேடியர் தமிழ்ச்செல்வனின் மறைவு.

சபையில் புன்சிரிப்பும், எம்மிடையே கலகலத்த அதிரடிச்சிரிப்புமாக உலாவந்த தமிழ்ச்செல்வன், பிரிகேடியர் தமிழ்ச்செல்வனாக வணக்கத்திற்குரிய வனாகிவிட்டான்.

தமிழ்ச்செல்வனைப் பற்றி எதிலிருந்து தொடங்குவது?

அவனது வீரச்சாவிற்கு முந்திய பின்மாலைப் பொழுது..., அநுராதபுர எல்லாளன் நடவடிக்கையாளர் களுக்கான வீரப்பதக்கம் வழங்கும் நிகழ்வு.... தலைவர் உரையாற்றுகிறார்.

அவரது உரையில் தமிழன் சார்ந்த பெருமிதம், தமிழினம், சுதந்திரம் பெறத் தகுதியான இனமாக, வீர முள்ள இனமாக வளர்ந்துவிட்டது என்ற நிம்மதி. எல் லோரும் மகிழ்ச்சியிலும், பெருமிதத்திலும் கலந்திருந்தோம்.

உணவுக்காகக் காத்திருந்த வேளையில் நீரிழிவு நோயால்பாதிக்கப்பட்டிருந்த தமிழ்ச்செல்வன் உணவுண்ண தாமதிப்பது நல்லதல்ல எனத் தலைவர் சங்கடப்பட்டு அவசரப்படுகிறார்.

தனக்கென தனியாக அவசரமாகத் தருவிக்கப்பட்ட உணவைப் புறக்கணித்து " எமது வான்புலிகளைச் சிட்டுக்குருவிக்கு ஒப்பிடுவதா?" எனத் தலைவரின் உரையை மீள எடுத்துச் சொல்லி பெருமிதமும் பாராட்டும் இழையோட வான்புலிகளுடன் அன்பும், பம்பலுமாக தமிழ்ச்செல்வன் கேலி பேசுகிறார்.

கதைத்து - காத்திருந்து - உணவுண்ட பின்னரும் கதைத்திருந்தோம். நிகழ்வின் மகிழ்விலும், உணவின் சுவையிலும் இருந்த உரையாடல் தலைவரைப் பற்றியும், அவரது பாதுகாப்பு, ஆரோக்கியவாழ்வு என்பன பற்றியதாகவும் அமைந்து விடைபெற்ற போது நாம் அறிந்திருக்கவில்லை. அது தான் எங்களது கடைசிச் சந்திப்பு என்று

எல்லாவற்றிலும் மாற்றம் வரும் ஆனால் சிலது மாறாது. காலமும், கோலமும் நவீனமானாலும், அறிவும் ஆற்றலும் மேம்பாட்டு வளர்ந்தாலும், உடை யிலும், பேச்சிலும், மெருகு பெற்றாலும் உள்ளத்தாலும், இன்னும் பலவற்றினாலும் மாறாமலிருந்தான் தமிழ்ச் செல்வன்.

தலைவருக்கு இப்போது தமிழ்ச்செல்வன் இளவயது மெய்க்காப்பாளானோ அல்லது இளம் போர்த் தளபதியாகவோ அல்ல. அவன் அரசியல் தலை வன்.மக்களை வழிநடத்தும் மக்களின் தலைவன். ஆனால் இவனோ இப்பொழுதும் அண்ணையின் குழந்தையாகவே தன்னை நினைப்பான். தன் திரு மணத்தின் போது அண்ணை வரவேண்டும். ஆட்கள் வந்தால் அண்ணை வரமாட்டார். தமிழ்ச்செல்வனது திருமணச்செய்தியை நாம் கேள்விப்பட, அதற்கிடையில் தமிழ்ச்செல்வனது கடிதம் திருமண அழைப்பு என்றும் இல்லாது, செய்தியென்றும் இல்லாது வாழ்த்தும், ஆசி யும் வேண்டி, சேதி சொல்லும் கடிதம். மடல் கிடைத்து நாம் அங்கு போகையில் பாலா அண்ணை வீட்டில் தலைவரின் முன்னிலையில் திருமணம் முடிந்து தம் வீட்டில் இருக்கிறார்கள். மாப்பிளையும், பொம்பிளையும்.

ஒரு நாள் கடற்கரையில் கடலலை கால் தொட பேர லையின் சத்தத்தில் பயந்து போனாள் குழந்தை. " ஐயோ பெரியப்பா" என்று சொல்லி தலைவரைக் கட்டிப் பிடித்துக் கொண்டாளாம். தமிழ்ச்செல்வனின் மகள் அலை. " என்னடா உன்ரை மகள் அலை கடலலைக்குப் பயப்படுகிறாள்" என பம்பலாய் சொன்ன தலைவரின் வார்த்தை தமிழ்ச்செல்வனுக்கு வேதம். - சவால்- செய்தி சில நாள்கள் கழித்து ரேகா சென்னாள்." அலைக்கு இப்போ வீட்டில் கிணற்றடித் தொட்டியில் நீர் நிறைத்து நீச்சல் பயிற்சி நடக்குது"

உலகத்திற்குத் தமிழ்ச்செல்வன் பிடிகொடுக்காத இராசதந்திரி. கதைத்துப் பேசி வாகாக உரையாடக்கூடிய ஆற்றலுள்ள பெரிய மனிசன். ஆனால் இவனோ இந்திய இராணுவ காலத்திலும், ஆனையிறவுக் களத்திலும், இன்னும் பல களங்களிலும் சுழன்றாடிய போராளி. எம் விடுதலைக்கு வழி விடாது எம் மக்களைக் கொன்று குவிக்கும் ஆக்கிரமிப்பாளர்கள் மீது வெஞ்சினம் கொண்ட அதே போராளி.

தமிழ்ச்செல்வன் தங்கள் பக்கம் வருகிறார் என எங்காவது ஓரிடத்தில் அல்லது ஒரு முகாமில் தடல்புடல் உணவு தயாராகியிருக்கும். ஆனால் இவனோ இந்தி யன் ஆமிக்காலத்தில் அம்மை வருத்தக்காரரைச் சுக மாக்கித் தருகிற ஆச்சியிடம் - மந்துவில்- ஆச்சியிடம் - பழஞ்சோற்றுக் குழையலுக்குப் போயிருப்பான்.

முக்கிய சந்திப்பில் வெளி ஆட்கள் வந்து பேசி, பேசி முடித்து உணவுநேரம் ஆடம்பர மேசையில் அறுசுவை உணவு காத்திருக்கும். கதைக்க இனி விடயம் இல்லை யென்ற நிலையிலிருந்து சந்தர்ப்பமும் சரியாக அமைந்து விட்டால், கூழ் - அதுவும் மட்டுவில் தலைவரின் கை வண்ணத்தில் கூழ்- நினைவுக்கு வந்து ஆளை அங்கு இழுத்துப் போகும்.

ஆண்டின் முதலாம் நாள்- தன்மனதில் நினைத்த சிலவற்றை தலைவர் பகிர நினைக்க - எனக்குக் கிடைத்தது வாய்ப்பு. தலைவரிடமிருந்து காலை வேளை அழைப்பு. தலைவர் தனது எதிர்பார்ப்பு களினை. எண்ணங்களினை எடுத்துச் சொல்கிறார். உரையாடலுக்கிடையில் செய்தி, " தமிழ்ச்செல்வன் பிள்ளைகளுடன் வந்துள்ளார்" தமிழ்ச்செல்வனது மகன் ஒளிவேந்தனது பிறந்தநாள். தலைவரின் ஆசி வேண்டி பெரியப்பாவிடம் பிள்ளைகளை அழைத் [illegible] பொருத்த மான உணவில்லை. பெரியவர்களின் உணவுதான். பேச்சுவாக்கில் தமிழ்ச்செல்வன் சொல்லிவிட்டார்.

"அலைக்கு இடியப்பம் அவ்வளவு விருப்பமில்லை. சாப்பிடமாட்டாள்". ஆனால் பிள்ளையோ இடியப்பத்தை விரும்பிச் சாப்பிட்டாள். "நா ஊறு பட்டுவிடக்கூடாது" கேட்டு வாங்கிச் சாப்பிட்டாள்.

"வீட்டில் அப்பா தாற இடியப்பம் வேறை. இது பெரி யப்பா தாற நல்ல இடியப்பம்" என்று சொல்லி தலைவர் பிள்ளையைக் கொஞ்ச தமிழ்ச்செல்வனின் புன்சிரிப்பு அசட்டுச்சிரிப்பாகி, "இனி இடியப்பம் அவிக்கவும் இஞ் சைதான் பழகவேணும்" என்று சொல்லிச் சிரித்தான்.

எல்லாம் சரிதான் தலைவருக்கு விட்டுக்கொடுக் காமல் தமிழ்ச்செல்வன் போட்டிக்கு நிற்கும் வேளையும் ஒன்றுண்டு. அது கைத்துப்பாக்கிச் சூட்டுக்களம்.


தலைவர் சுடுவார். அநேகமாய் ரவைகள் பத்தும் மையத்தில் ([illegible]யம்- புள்) படும். சிலவேளை ஒன்பது அல்லது எட்டு ரவை மையத்தில்பட்டு மீதிரவை சற்று விலகிப் பட்டுவிட்டால் தொடங்கும் போட்டி.

" நீ ஒருக்கா சுட்டுப்பார்" என்று தமிழ்ச்செல்வனை அழைக்க, சிலவேளைகளில் அவன் பத்துரவை களையும் மையத்திற்குச் சுட்டு துப்பாக்கியில் பிழை யில்லை என்று நிரூபிப்பான்.

அடுத்த சுற்றில் நான் சுடுகிறேன் பார் என்று தலை வர் தயாராக, கைத்தடியைப் பின்பக்கமாக முட்டுக் கொடுத்து காலை நிலத்தில் ஊன்றித் தமிழ்ச்செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"அரசியல் தீர்வு பற்றியே பேச வந்த உங்களது முன்மொழிவு எங்கே? விக்கித்துப்போன அரச குழு - "நாங்கள் இப்போது தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டியுள்ளோம். விரைவில் தயாரித்து விடுவோம்" அதற்குத் தமிழ்ச்செல்வன் "தயாரித்ததும் வாருங்கள் பேச்சுக்குத் திகதி தருகிறோம்" என்றார். அரச குழுவைச் சர்வதேச அரங்கில் அம்பலப்படுத்தி அவர்கள் விரித்த பொறியில் அவர்களையே சிக்கவைத்தார் தமிழ்ச்செல்வன். இன்று வரை அவரெழுப்பிய கேள்விக்கு அரசு பதிலளிக்க வில்லை."**



போட்டிக்குக் கூட களைகட்டும் போட்டிஅலெக்ஸ். ஆதவன்( கடாபி) என சூட்டு விற்பன்னர்களுடன் களைகட்டும் போட்டி இருள் சூழ்ந்த பின்னரும் மின்சுழ் வெளிச்சத்தில் தொடர்வதுமாய் நடந்து முடியும் போட்டி.

தமிழ்ச்செல்வன் அடிப்படைப்பயிற்சி முகாமில் அடையாளம் காணப்பட்டதே அவனது சூட்டுத்திறனால் என்பர்.

உடற்பயிற்சி எல்லோரும் ஓடிப் பயிற்சி செய்ய, பயிற்சிப் பொல்லுடன் நடந்தே மைதானத்தை வலம் வருவார் தமிழ்ச்செல்வன். தமிழ்ச்செல்வன் பயிற்சி நிறைவு நாளன்று சூட்டுப் பயிற்சியின் போது சுடக் கொடுத்த ஒரேயொரு ரவையை மையத்திற்குச் சுட வியந்தார் பொன்னம்மான். அது குருட்டாம் போக்கில் பட்டிருக்குமோ என்று அடுத்தது கொடுக்க அதுவும் மையத்தில்பட அடுத்தடுத்து கொடுக்க அதுவும் ஒவ்வொன்றாக கொடுக்க அத்தனை ரவைகளும் மையத்தில்பட, "இனி உனக்கு ரவையில்லை ஓடடா" என பொன்னம்மான் செல்லமாய், பெருமையாய் ஓட விரட்டியதில் அடையாளம் காணப்பட்டவன் தமிழ்ச்செல்வன்.

அதன்பின்னர், பொன்னம்மான் தலைவருக்கு தமிழ்ச்செல்வனை அறிமுகம் செய்ததும், சிலகால மருத்துவப்பணிகளின் பின்னர் தலைவரின் உதவியாளராக ஆனதும் பழைய கதை.

அடிப்படைப் பயிற்சி முகாமில் செய்யாத செய்யத் தவறிய உடற்பயிற்சிகளை தலைவரின் கவனிப்பில் செய்ய வேண்டி வந்தது. இன்னொரு பம்பல் கதை. பயிற்சி முடித்து சொர்ணம், இம்ரான் ஆகியோரின் பொறுப்பிலிருந்த தலைவரின் மெய்க்காப்பாளர் அணியில் செயற்பட்டதுமாக இருந்த அவன் தலைவர் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியதும் யாழ்ப்பாணத்தில் 1987 இன் ஆரம்பத்தில் இந்தியாவிலிருந்து தலைவர் நாடு திரும்பி, வேலைகளை மேற்பார்வையிட்டு ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். யாழ் மாவட்டத்தில் மகளிர் பிரிவானது முன்னெடுக்கப்பட்டது. சர்வதேச சமாதான கற்கைகளின் இந்தக் கோட்பாடு புறந்தள்ளி விடக் கூடியதல்ல என்பது தெரியும். ஆயினும் அபிவிருத்தியைப் புறந்தள்ளி அல்லது தடுத்து விடவும் முடியாது. அப்படிச் செய்யவும் கூடாது என்பதில் தமிழ்ச்செல்வன் உறுதியாக இருந்தார்.

உலகில் யாராலும், எங்கிருந்தாயினும் தமிழ் மக்களை நோக்கிக் கொண்டுவரப்படும் அபிவிருத்தியை வரவேற்று , உள்வாங்கி தொடர் யுத்தத்தால் மக்கள் பட்ட அவலத்திற்கு சிகிச்சையாக, புத்தூக்கமாக அதை மாற்றிப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவையிருந்தது. அதே நேரம் விடுதலைப்போராட்டத்தை தோற்கடித்து விடக்கூடிய சூழ்ச்சியாக இது உருவெடுக்க விடாமல் அதனிடமிருந்து தற்காக்க வேண்டியுமிருந்தது. இந்த இரண்டுக்குமிடையில் ஒரு சமன்பாட்டைக் கண்டறிந்து அதனை நிர்வகிப்பதற்கான கட்டமைப்புக்களை உருவாக்கி அதை வெற்றிகரமாகக் கையாண்ட தமிழ்ச்செல்வன் இயல்பிலேயே ஒரு தந்திரி.

அவரது ராஜதந்திரப் பணியில் சில புள்ளிகளை இடுவது இங்கு முக்கியமானது. சந்திரிகாவின் தீர்வுப் பொதி வெளியிடப்பட்ட காலத்தில் வன்னிக்குவந்த தெற்கு ஊடகவியலாளர் ஒருவர் இவரைச் செவ்வி கண்ட போது எழுப்பிய கேள்வி, "நீங்கள் இந்தத் தீர்வுப் பொதியை ஏற்காது.நீங்கள் சமாதான அணுகுமுறையில் விருப்பமற்ற போர் நாட்டமுள்ளவர்களென்பது காரணமே தவிர, தீர்வுப் பொதி காரணமல்லவே" என்ற தொனியில் இருந்தது. அதற்கு இவர் அளித்த பதில் கொழும்பின் முகத்தையே கிழித்தது." தமிழ் மக் களால் துரோகிகளாக வர்ணிக்கப்படும் குழுக்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றன. அவையே இதை ஏற்கவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வையே இந்த அரசாங்கத்தால் முன்வைக்க முடியாத போது இந்தக் கேள்விளை நீங்கள் எங்களிடம் கேட்பது சரியல்ல".

நடந்த கடைசிப் பேச்சுவார்த்தை முறிவடைந்த பின்னான காலத்தில் ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் சர்வதேச செய்தி ஸ்தாபனத்தின் பிரபல நிருபர் ஒருவர், குதர்க்கமான கேள்வி ஒன்றைத் தொடுத்தார். அதன் தொனி புலிகளின் சமாதானத்தை போலியாகத்தான் நடத்தினார்கள். என்று திரித்து அம்பலப்படுத்தும் முயற்சியாகவே இருந்தது. அதற்கு அவர் அளித்த பதில் நீ குதர்க்கமான கேள்வியைக் கேட்கிறாய் என்பதைச் சுட்டி சபையில் நிருபரை அடங்கவைத்து, கேள்வி இது தான் " காட்டில் வாழும் சிறுத்தை தம் புள்ளிகளை மாற்றிக்கொள்ளவதில்லை என்று பழமொழி இருக்கிறதே" "நாங்கள் இங்கு மனிதர்களைப் பற்றி கதைத்துக்கொண்டிருக்கின்றோம். மிருகங்களைப் பற்றி கேள்வி எழுப்ப இது இடமல்ல" என்று வந்த பதிலில் அவர் தலைகுனிந்தார்.

ஜெனீவா -2 இறுதியாக நடந்த பேச்சுவார்த்தை. அந்தப் பேச்சுவார்த்தையின் பின் எந்த உத்தரவாதமும் இல்லாமலேயே அடுத்த பேச்சுக்கான திகதி தருமாறு சர்வதேசத்தின் பிரதிநிதியான நோர்வேயால் நிர்ப்பந்தம் விதிக்கப்படுகிறது. அதற்கு இசையாத தமிழ்ச்செல்வனை நோக்கி எரிக்சொல்கெய்ம் , " திகதி குறிக்கப்படாது விடில் பேச்சு முறிவடைந்ததாக அர்த்தமாகிவிடும். எனவே திரும்பிப் போகும் உங்களின் பயணத்தின் பாதுகாப்பை எங்களால் உத்தரவாதப்படுத்த முடியாது" என்றார். தமிழ்ச்செல்வன் "உயிர் அச்சுறுத்தல்களைக் கொடுத்து புலிகளைப் பணிய வைத்துவிடமுடியாது" என்று பதிலளித்தார்.

இறுதியில் எரிக்சொல்கெய்ம் சொன்னார் " நீங்கள் பேச்சுத் திகதி குறிக்காமல் போவது நல்லதல்ல என அமெரிக்கா ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் கருதுகிறார்" என்றார். இதற்கு தமிழ்ச்செல்வன் சொன்ன பதில் எரிக்சொல்கெய்ம்மையும், அங்கிருந்த ராஜதந்திரிகளையும் சங்கடத்தில் ஆழ்த்தியது. " நாங்கள் அமெரிக்க ஜனாதிபதிகளான ,வோஷிங்டன், ஆபிரகாம் லிங்கன்,வுட்ரோவில்சன் ஆகியோரது கருத்துக்களில் தான் கரிசனையாக உள்ளோம். ஜோர்ஜ்புஷ் இன் கருத்திலல்ல" (மேற்சொன்ன ஜனாதிபதிகள் அமெரிக்க சுதந்திரத்திற்காகவும் , சிவில் உரிமைக்காகவும் தேசிய இனத்தவர்களின் சுயநிர்ணயத்திற்காகவும் போராடியவர்கள்)

ஜெனீவா-02 பேச்சுவார்த்தை அரச தரப்புப் பேச்சுக் குழுவினர் மிகவும் புளகாங்கிதத்தோடு வருகை தந்திருந்தனர். காரணம் புலிகள் தரப்பில் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இல்லை என்பதே. மேலும் பேச்சின் நிகழ்ச்சி நிரல் முன்கூட்டியே தீர்மானிக்கப்படாமல் நடக்கப்போகும் ஒரு அசாதாரண சூழல் பேச்சு வார்த்தை இது. இதனால் தயார்படுத்திக் கொண்டுவர வாய்ப்பும் இல்லை. பிரிகேடியர் தமிழ்ச்செல்வன் இதற்குத் தலைமை தாங்கினார். அந்தப் பேச்சு மேசையில் தமிழ்ச்செல்வன் கையாண்ட உத்திதான் நியாயத்தை எங்கள் பக்கம் திருப்பி அரச தரப்பு "மேதைகளை" தலைகுனிய வைத்தது.

முதல் நாள் பேச்சில் கர்வத்தோடு வந்த அரச தரப்பைக் கதைக்கத் தூண்டி அவர்கள் கையிருப்பில் இருந்த விவாதப்பொருளைக் கக்க வைத்தது அதற்கு எதிர் விவாதம் செய்யாது அக்கருத்தில் அவர்களை நிலைபெற வைத்து, மறுநாள் அந்த விவாதத்திற்கு எதிர்வியூகம் அமைத்து அரச தரப்பை அம்பலப்பட வைத்தார். அரச தரப்பின் கருப்பொருள் அடிப்படை அரசியல் பிரச்சினை குறித்தே பேச வேண்டும். என்றிருந்தது. அதற்குச் சம்மதிக்காத புலிகள் போலி யாகவே சமாதானப் பேச்சைக் கையாளுகின்றனர் என்று விவாதித்தனர். அன்றாடப் பிரச்சினையை விடுத்து அடிப்படைப்பிரச்சினை குறித்த அரசியல் தீர்வு பற்றியே பேச வேண்டும் என்றனர். அவர்களது நோக்கம் தனியரசு இலட்சியத் தில் இருக்கும் புலிகள் அரசியல் தீர்வு குறித்துப் பேச சம்மதிக்க மாட்டார்கள். எனவே புலிகளின் போலித்தனத்தை அம்பலப்படுத் திவிட முடியும் என்பதாகவே இருந்தது.

இதனைச் சரியாகக் கணிப்பிட்ட தமிழ்ச்செல்வன் மறுநாள் "நாங்கள் அதற்குச் சம்மதிக்கிறோம் . நீங்கள் கொண்டுவந்த அரசியல்தீர்வு யோசனையை முன்வையுங்கள் பேசுவோம்" என்றார். அரச பேச்சுக் குழு சங்கடத்தில் மாட்டியது. தமிழ்ச்செல்வன் எதிர் பார்த்தது போலவே அப்படி எந்த ஒரு தீர்வு முன் மொழிவையும் அரச குழு கொண்டுவந்திருக்கவில்லை. மேலும் தமிழ்ச்செல் வன் அவர்கள்" எங்களது முன் மொழிவாக இடைக் காலத் தன்னாட்சி அதிகாரசபையை முன்வைத்துள்ளோம். அரசியல் தீர்வு பற்றியே பேச வந்த உங்களது முன் மொழிவு எங்கே? தொடர்ந்து பேசுவோம்" என்றார். விக்கித்துப்போன அரச குழு "நாங்கள் இப்போது தான் அனைத்துக் கட்சிக் கூட் டத்தைக் கூட்டியுள்ளோம். விரைவில் தயாரித்து விடு வோம்" என்றனர். அதற்குத் தமிழ்ச்செல்வன் " தயா ரித்ததும் வாருங்கள் பேச்சுக்குத் திகதி தருகிறோம்" என் றார். அரச குழுவை சர்வதேச அரங்கில் அம் பலப்படுத்தி அவர்கள் விரித்த பொறியில் அவர் களையே சிக்கவைத்தார் தமிழ்ச்செல்வன். இன்று வரை அவரெழுப்பிய கேள்விக்கு அரசு பதிலளிக்கவில்லை.

மாறாகத் தமிழ்ச் செல்வனைக் கொல்வது தான் அரசின் பதிலாக இருந்தது. இப்படியொரு வல்லமை மிக்க ஆளுமையை வீழ்த்திவிட எதிரியென்று வரும் எவருக்குத்தான் பிரியமிருக்காது. இதில் தர்மம் என்ன? தார்மீகமென்ன? நவம்பர் 2 ஆம் திகதிவெள்ளிக்கிழமை தமிழர் வீடுகளெங்கும் முகாரி இசையில் மூழ்கியிருக்க, கோத்தபாய ராஜபக்ஷ பேட்டியளித்தார்.

"இன்றுதான் நான் வாழ்வில் மிகவும் சந்தோசமாக இருக்கிறேன்" என்று. ★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒக்.30, – 05 , நவ., 2013
sudarolijaffna@gmail.com

சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 567 7609

# சினங்கொள்ள வைக்கும் சீண்டுதல்கள்

சும்மா இருக்கும் தமிழர்களை சொறிந்து உசுப்பேற்றும் வேலைகளை இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது படைத்தரப்பு.

வலி.வடக்கில் அடாத்தாகப் பிடிக்கப்பட்டு உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரிடலோடு படைத்தரப்பில் விவசாயத்துக்கும், உல்லாச விடுதிக்கும், தியேட்டருக்கும், தொழிற்சாலை களுக்கும் என அடிமைப்பட்டிருக்கும் நிலங் களில் மீண்டும் தங்களுடைய அட்டகாசத்தைப் படையினர் தொடங்கியிருக்கிறார்கள்.

உயர்பாதுகாப்பு வலயத்தில் இருக்கும் வீடு களையும் காணிகளையும் விரைவில் உரியவர் களிடம் ஒப்படைப்போம் என்று அரசு அண்மை யில் கூறியிருந்தது. ஆனால், கடந்த வாரம் அதற்கு மாறாக உயர் பாதுகாப்பு வலய வேலி களுக்கு அண்மித்திருந்த காணிகள் கனரக வாக னங்கள் மூலம் கிண்டிக் கிளறப்பட்டன. எதிர்ப் பட்ட வீடுகள் அடியோடு தரைமட்டமாக்கப்பட் டன. இந்தச் செய்தியறிந்து நடப்பதைத் தடுக்க விரைந்த நாடாளுமன்ற உறுப்பினரைப் படைத் தரப்பு எச்சரித்துள்ளது.

"எங்களுக்கு முழு அதிகாரமும் உண்டு. இங்கே உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. இந்தக் காணிகளில் எங்களுடைய உறவுகளைக் கொண்டு வந்து குடியேற்றப்போகிறோம். உங்களால் முடிந் ததைச் செய்துபாருங்கள்" என்று நாடாளுமன்ற உறுப்பினரின் முகத்துக்கு நேரே சவால் விடுமளவுக் குப் படைத்தரப்புக்குத் துணிச்சல் வந்துவிட்டது.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்குள்ள சிறப் புரிமையை மதிக்காமல் அவரை மிரட்டியதோடு மட்டுமல்லாமல், இவ்வாறு அடாத்தாகக் குடியேற் றத்தையும் செய்வோம் என்றும் கூறியிருப்பது வடக்கில் என்னதான் மாகாண அரசை தமிழர் கள் நிறுவினாலும் உண்மையில் படைத்தரப் பின் அதிகாரமே கோலோச்சுகிறது என்பதை வெளிப்படுத்தியிருக்கிறது.

இதேபோன்றுதான் நாவற்குழியிலும் அத்து மீறிக் குடியேறிய சிங்கள மக்களுக்குக் காணி களை அளவீடு செய்து கொடுத்தவர்கள் தமிழ் மக்களைப் புறக்கணித்துவிட்டார்கள். இவ் வாறு திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் அதிகாரத் தரப்பு அக்கறை காட்டி வருகிறது. ஆனால் இந்தக் குடியேற்றங்கள் தமி ழர் தரப்பைச் சீற்றங்கொள்ள வைத்து மீண்டும் அவர்களைப் போராட்ட திசைக்குத் தள்ளி விடும் என்பதை அவர்கள் உணரவில்லை போலும்.

பிரமன்

# இன்னும் உறுமும் வெள்ளை வான்

## யாழ்ப்பாணத்தில் மீண்டும் திகில்



உடுப்பிட்டி. நேரம் 8 மணி. வழக்கத்தைவிட அன்று அவன் பாடசாலைக்குப் புறப்படத் தாமத மாகிவிட்டது. பிரார்த்தனை தொடங்கிவிட்டால், இவ னைப் பிடித்து வெளியே நிற்க வைத்துவிடுவார்கள். அதனால் கால்களில் வேகத்தை உண்டு பண்ணிக் கொண்டு விரைந்து கொண்டிருந்தான். வழியில் ஒரு 'வெள்ளை நிற ஹை-ஏஸ்'. ஆனால் அவனுக்கு அது ஒரு பொருட்டாகத் தெரியவில்லை. 8.15 இற்கு இடையில் பாடசாலையை எட்டிப் பிடிப்பதே அவனது ஒரே இலக்காக இருந்தது.

ஆனால் விதி அவனை விரைய விடவில்லை. ஹை-ஏஸ் வாகனத்துக்கு அருகில் நின்ற ஒருவன் விரைந்து கொண்டிருந்த மாணவனை அணுகினான்.

"தம்பி! உன்னை அந்த அண்ணை வரட்டாம்" என்று ஹைஏஸை நோக்கிக் கை காட்டினான். தரம் எட்டில் படிக்கும் இவனுக்கு எதுவும் புரியவில்லை. "இந்த நேரத்தில் என்னை யார் வரச்சொல்வது?" என்று மனதுக்குள் எண்ணியவாறு அந்த வாகனத்தை நோக்கி நடக்கத் தொடங்கினான். வாகனத்துள் இவனது பாடசாலை கழுத்துப் பட்டியும் சீருடையும் அணிந்த இன்னொரு மாணவன் இருந்தான். சற்றே வயது கூடியவன். ஆனால் அந்த மாணவனை இவன் முன்னொருபோதும் கண்டதாக நினை வில்லை.

"என்னத்துக்கண்ணை கூப்பிட்டனீங்கள்?" என்று இந்தப் பதின்மூன்று வயதுப் பாலகன் கேட்டு முடிப்பதற்கிடையில் ஒரு முரட்டுக் கரம் அவன் பிடரியை உந்தித் தள்ளியது. அந்த வேகத்தில் வாக னத்துக்குள் போய்விழுந்தான் மாணவன். மன மெங்கும் கலவரம் புகுந்து விளையாடியது. பயத்தில் பேச்சே வரவில்லை. உடலெல்லாம் நடுங்கத் தொடங்கியது.

இவனை உள்ளே அடைந்துகொண்டு ஹைஏஸ் வாகனம் ஆளரவம் அற்ற பகுதிகள் ஊடாகப் பறந்துகொண்டிருந்தது. தான் கடத்தப்பட்டு விட்டதை அந்த மாணவன் உணர்ந்தான். ஆனால் கடத்திய வர்கள் அவனை எதுவும் கேட்கவில்லை. கைகளில் வைத்திருந்த புகைப்படங்களோடு அவனது முகத்தை ஒப்பிட்டுப் பார்த்தனர். ஆனால் திருப்தியின்மையே அவர்களிடமிருந்து வெளிப்பட்டது.

"டேய்! இவன் வேற" என்ற அர்த்தப்பட சிங்களத்தில் தமக்குள் உரையாடிக்கொண்டார்கள். அதன் பின்னர் ஏற்கெனவே உள்ளிருந்த மாணவனின் கழுத்துப் பட்டியை அவிழ்த்து இவனின் வாயை இறுகக் கட்டினார்கள். இவனது கழுத்தில் தொங்கிக்கொண்டிருந்த கழுத்துப்பட்டியையும் எடுத்து அவனது கைகளையும் பின்னால் பிணைத்தார்கள். உதவிகேட்டு ஓலமிடவோ எதிர்ப்பை வெளிப்படுத்தவோ அவனால் முடியவில்லை. தலையைத் தொங்கப் போட்டவர்களாக ஆள்கள் அற்ற இடமொன்றை வாகனதாரிகள் தேடித்திரிந்தார்கள்.

அவர்களின் கண்ணில் எள்ளங்குளம் மயானத்தை அடுத்துள்ள பற்றைவெளி தெரிந்தது. சுற்றுமுற்றும் பார்த்தார்கள், எவருமில்லை. வாகனம் தனது இயக் கத்தைச் சற்றே குறைத்துக்கொள்ள கட்டி வைக்கப்பட் டிருந்த மாணவனைத் தூக்கி பற்றைக்குள் எறிந்துவிட்டு பறந்து விட்டார்கள்.

கடைசியில் ஆட்டுக்குக் குழை வெட்டச் சென்ற ஒருவர் பற்றைக்குள் வெள்ளைத் துணி தெரிவதால் கொஞ்சம் எட்டிப் பார்க்க முனைந்தார். அப்போதுதான் முனகிக்கொண் டிருக்கும் அந்த மாணவனை அவர் காணநேர்ந்தது. பின்னர் அவரது துணையோடு வீடு சென்ற மாணவன், தான் கடத்தப்பட்ட விடயத்தை வெளிப்படுத்த அந்த விடயம் காட்டுத் தீ போல பரவத் தொடங்கியது.

விழித்துக்கொண்ட பாடசாலை நிர்வாகம் உடனடியா கப் பொலிஸில் முறைப்பாடு செய்தது. ஆனால் வாக னத்தில் இருந்த இன்னொரு மாணவன் யார் என்பது கடைசி வரை தெரியவேயில்லை. ஏனெனில் தங்களுடைய பிள்ளை காணாமற்போய்விட்டதாக இதுவரை எந்தப் பெற்றோரும் பாடசாலையில் முறையிடவில்லை. அத் தோடு வழமை போலவே பாடசாலைக்கு வரும் அத்தனை மாணவர்களும் அடுத்தநாளும் வந்ததாகவும் எவரும் வராமல் விடவில்லை என்றும் பாடசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனவே குறித்த மாணவனைப் பிடிப்பதற்கான பொறியாகவும் கடத்தல்காரர்களில் யாராவது ஒருவர் பாடசாலை மாணவனைப் போன்று சீருடை அணிந்து இருந்திருக்கலாம் என்றும் ஊகிக்கப்படுகிறது.

ஒரு காலத்தில் குடாநாட்டைக் கிறீஸ் பூதங்களும், வெள்ளை வான்களும் கலக்கியடித்தன. ஆனாலும் காலப்போக்கில் அவற்றின் நடமாட்டம் குறை வடைந்து பின்னர் முற்றாகவே இல்லாமலே போய் விட்டது. ஆனால் வடமாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் இனந்தெரியாதோரின் நடமாட்டங்களும் வெள்ளை வான்களின் உலாவுதல்களும் யாழ்ப் பாணத்தில் அதிகமாகிவிட்டன.

மானிப்பாயில் இரவு நேரக் கடமையில் இருந்த பொலிஸ்காரர் ஒருவர் இன்ந்தெரியாதவர்களால் வெட்டிக் காயப்படுத்தப்பட்டிருந்தார். ஆனால் குற்றவாளியைப் பிடிக்க வக்கில்லாத பொலிஸார், அந்தப் பகுதியைச் சூழவிருந்த அப்பாவிகளைப் பிடித்து ஆசைதீர அடித்துத் துவைத்துவிட்டார்கள். கிட்டத்தட்ட கிறீஸ்பூதப்பிரச்சினையிலும் இதே அணுகு முறையையே அவர்கள் கைக்கொண்டிருந்தார்கள். உடுப்பிட்டியில் வெள்ளை வானில் வந்தோரால் பதின்மூன்று வயது மாணவன் ஏன் கடத்தப்பட்டான் என்பது குறித்து இதுவரை எந்த விளக்கமும் எவருக்கும் கிடைக்கவில்லை. ஆனால் கிட்டத்தட்ட ஒரு எச்சரிக்கைப் பாணியிலேயே இந்தக் கடத்தல் நாடகம் நடத்தப்பட்டிருக்கிறதை ஊகிக்கமுடிகிறது.

வடமாகாணத்தில் தமக்கென ஒரு அரசு அமைந்த மகிழ்வில் இருக்கும் மக்களின் இயல்பு வாழ்வில் எப்போதும் அச்சம் ஒட்டிக்கொண்டிருக்கவேண்டும் என்பதே இத்தகைய கடத்தலாளிகளின் நோக்க மாகும். அதற்காகத்தான் எப்படியெல்லாம் அச்சுறுத்த லான சூழலை உருவாக்கமுடியுமோ அப்படியெல் லாம் முயன்று வருகிறார்கள். எனவே பொதுமக்கள் விழிப்போடு இருக்கவேண்டிய நேரம் இது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவின் நிதிநெருக்கடியும் ஆபத்தும்!




▣ நீலன்

அமெரிக்காவில் அடுத்த நிதியாண்டுக்கான செலவீனங்களுக்கு பணம் பெற முடியாமற் போனதால் பெருமளவு அரச நிறுவனங்கள் முடங்கியிருந்தும் சுமார் எட்டு இலட்சம் அரச ஊழியர்கள் வீட்டில் முடங்கியிருந்ததும் பலர் அறிந்த விடயமே.

மக்களவையில் அங்கம் வகிக்கும் இரு பிரதான கட்சிகளான ஜனநாயககட்சியும்,குடியரசுக் கட்சியும் பிரச்சினைக்குத் தீர்வாக அமையக் கூடிய சட்டமூலம் பற்றி கருத்தொற்றுமை காணத் தவறியதால் முடக்கநிலை 16 நாள்கள் நீடித்தது. இதற்குக் காரணம் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் சுகாதாரப் பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில் இவ் இரு கட்சிக்குள்ளும் ஆழமாகவே வேரூன்றிய பகைமை அல்லது ஆற்றாமையே.

இதன் நிமித்தமாக அடுத்த நிதியாண்டுக்குரிய செலவைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் போதிய அளவு பணத்தைப் பெற முடியாமல் இருந்தமை முதலாவது நெருக்கடியாகவும், அத்துடன் அமெரிக்கா அரசாங்கம் பெறக்கூடிய கடனானது உச்ச வரம்பை எட்டி, கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகும் நிலை இரண்டாவது பிரச்சினையாகவும் காணப்பட்டன. இவற்றிற்குத் தற்காலிகத் தீர்வாக அமையக் கூடியதொரு சட்ட மூலம் அமெரிக்காவின் மக்களவையில் நிறைவேற்றப்பட்டு அதனை ஜனாதிபதி ஒபாமா அங்கீகரித்த பின் 16 நாள்களாக நீடித்த முடக்க நிலை முடிவுக்கு வந்தது. இதன் காரணமாக ஜனவரி 15 ஆம் திகதி வரை அமெரிக்கா அரசாங்கத்திற்குத் தேவையான நிதியைப் பெற்று கொடுப்பதற்கும், பெப்ரவரி 7ஆம் திகதி வரை அமெரிக்காவின் திறைசேரிக் கடன் பெறுவதற்கும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

கடந்தவாரம் இருகட்சிகளும் தமக்குள் சமரசம் செய்து கொண்டு ஏதோவொரு உடன்பாட்டுக்கு வந்திருந்ததென்னமோ உண்மை தான்; இது தற்காலிக ஏற்பாடேயன்றி, நிரந்தரத் தீர்வு அல்ல. இன்னும் மூன்று மாதங்களில் இதே நிலைமை ஏற்பட்டு மீண்டும் மக்களவையில் சட்டமூலமொன்றை நிறைவேற்ற வேண்டிய தேவை எழலாம். அத்தகையதொரு சந்தர்ப்பத்தில் இரு கட்சிகளும் சுயநலத்தின் அடிப்படையில் தமக்கிடையிலுள்ள பகைமையை முன்னிறுத்தினால் மீண்டும் இதே தீவிர நெருக்கடி எழும் வாய்ப்பு உண்டு.

அமெரிக்கத் திறைசேரி கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் போகும் பட்சத்தில் அந்த நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படும். அதன் தாக்கங்கள் உலக பொருளாதாரத்தில் எதிரொலிப்பதையும் தவிர்க்க முடியாது. அமெரிக்கா நெருக்கடிகள் குறித்து உலக நாடுகள் அதிக அக்கறை கொண்டிருந்தமைக்கு இதுவும் முக்கியமானதொரு காரணம் எனலாம்.

இன்று அமெரிக்காவின் உள்வீட்டு அரசியல் இழுபறி நிலைகளைத் தாண்டி பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது எனில் அது அமெரிக்கா மக்கள் மாத்திரமன்றி ஒட்டு மொத்த உலகமும் சந்தோசப்பட வேண்டிய விடயமாக உள்ளது.

ஆனால் சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர் உட்படப் பல பொருளாதார நிபுணர்களின் கருத்துக்கள் வேறாகவுள்ளன. அமெரிக்காவின் பிரச்சினைக்கான தீர்வு குறித்து இப்போதைக்கு ஆசுவாசப்பட்டுக் கொள்வதில் தவறில்லை. ஆனால் முழு அளவில் சந்தோசப்பட்டால் அது முட்டாள்தனம் என்பதே அவர்களது கருத்தாக உள்ளது. இதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். முதற் காரணமாக அமைவது அமெரிக்காவின் அரசியல், இரண்டாவது காரணம் இன்றைய உலகின் ஆரோக்கியமற்ற பொருளாதார நிலைமைதான்.

சர்வதேச நாணய நிதியத்தின் தலைவரும் தள்ளாடிக் கொண்டிருக்கும் அமெரிக்கப் பொருளாதாரத்துக் ஸ்திரமான முறையில் நீண்டகாலம் நிதியைப் பாய்ச்சக்கூடிய நிதிக் கொள்கை அவசியம் என்பதை அவர் வலியுறுத்திச் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனி, இரண்டாவது பிரச்சினை அமெரிக்கா பற்றியது. ஒரு கடலில் மிதக்கும் பனி மலை என்ற உதாரணத்தின் அடிப்படையில் விபரிக்கலாம். இதில் பனிமலையின் சிறிய பகுதிவெளித் தெரிந்து, நீர்மட்டத்தின் கீழுள்ள மிகப் பெரிய பகுதி மறைந்திருப்பதைப் போன்றது. அமெரிக்காவின் பிரச்சினை வெளியே மறைந்திருக்கும் பெரும் பகுதியை உலகம் காணவில்லை என்றே கூறவேண்டும்.

இன்று, அமெரிக்காவின் படுகடன் 17 ட்ரில்லியன்கள் டொலர் (17,00,000) எனக் கூறப்படுகின்றது. இது அமெரிக்காவில் மாத்திரமன்றி வளர்ச்சி கண்டவையாக நாம் கருதும் பல நாடுகள்கூட கடன் சுமையால் அவதிப்படுவதை சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு கின்றது. ஜப்பானின் படுகடன் 11ட்ரில்லியன் டொலர் ஆகவும், பிரிட்டன், பிரான்ஸ், கனடா ஆகிய நாடுகளும் பெருமளவு கடன்பட்ட நாடுகளாகவே காணப்படுகின்றன.

இந்நாடுகளது கடன்தொகையே மிகப் பெரியது தான். ஆனால் அந்தத் தொகையின் மூலம் பிரச்சினையின் ஆழத்தை விபரிப்பது சாத்தியமற்றது. அது குறித்துச் சற்று ஆழமாக ஆராய்தல் வேண்டும். கடன் படுவது ஒன்றும் பிரச்சினையல்ல. அந்தக் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத அளவிற்கு போதிய வருமானம் இல்லாத நிலையில் மேன்மேலும் கடன்படுவது தான் பிரச்சினையாகும்.

ஒரு நாட்டை எடுத்துக் கொள்வோமாயின் அந்த நாட்டின் கடனை இரு வழிகளால் விபரிக்கலாம். மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் விபரிப்பது முதல் வழியாகும். துண்டு விழும் தொகையின் அடிப்படையிலும் விபரிக்கலாம். அதாவது ஒரு நாட்டின் வருமானத்தை விட செலவு எவ்வளவு அதிகமாக இருக்கிறது என்பதைக் கணித்து அதனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் விபரிப்பதே இரண்டாவது வழி.

சில நாடுகளைப் பொறுத்தவரையில் செலவை விட வருமானம் அதிகமாகும். எனவே இந்த நாடுகள் கடனை அடைத்துவிடக் கூடியதாக இருக்கும். ஆனால், இத்தகைய நிலையில் பலநாடுகள் இல்லையென்பதே கவலைக்குரிய விடயமாகும்.

அமெரிக்காவின் மொத்தப்படுகடன் அந்நாட்டின் வருடாந்த மொத்த உள்நாட்டு உற்பத்திக்குச் சமனானது. ஆனால், ஜப்பானின் படுகடனோ மொத்த உள்நாட்டு உற்பத்தியை விடவும் இரு மடங்கு அதிகமாகும். இவ்வளவு ஏன்? நிதி விபரங்களைப் பொறுப்பாகக் கையாள்வதாகக் கூறிப் பாராட்டப்படும் ஜேர்மனியின் படுகடனும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 80 சதவீதமாகக் காணப்படுகின்றது.

இவ்வாறனதொரு சூழ்நிலையில் செலவீனங்களைக் கட்டுப்படுத்தி, கூடுதலான வருமானங்களைப் பெறாவிட்டால் இந்நாடுகள் மீண்டெழ முடியாத வகையில் கடன் வெள்ளத்தில் மூழ்கி விடக்கூடிய அபாயச்சூழ்நிலை காணப்படுகின்றது.

பல நாடுகளில் கடன் மட்டம் ஆண்டாண்டு காலமாக படிப்படியாக அதிகரித்து வந்தபோதிலும் 2008 ஆம் ஆண்டு தலைதூக்கிய நிதி நெருக்கடியால் அவை கூடுதலாகக் கடன் பெற நேரிட்டது. பெரும் நஷ்டத்தால் இழுத்து மூட வேண்டிய நிலையை எதிர்கொண்ட நிதி நிறுவனங்களையும், வங்கிகளையும் காப்பாற்றுவதற்காக வழங்கப்பட்ட நிதியுதவிகளால் நிலைமை மேலும் மோசமானதென்பதைக் குறிப்பிட முடியும்.

இந்த நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் இன்னமும் ஐந்தாண்டுகளில் அமெரிக்காவின் படுகடன் 23 ட்ரில்லியனாகவும், ஜப்பானின் படுகடன் 14 ட்ரில்லியன் டொலராகவும் அதிகரிக்கக் கூடுமென சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளதாக பி.பி.சி. இணையத்தளத்தில் வெளியானதொரு ஆய்வுக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தனிமனிதனாக இருந்தாலென்ன, நாடாக இருந்தாலென்ன அதீத படுகடன் என்பது மிகவும் கொடுமையான பிரச்சினைதான். தனிமனிதனின் கடனால் ஒரு குடும்பத்தில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு நிம்மதி சீர்குலைவதை நமது சமூகத்தில் கண்டுள்ளோம். அதே கடன், அமெரிக்காவில் ஏற்படுத்தியது என்பதைக் கடந்த சில நாட்களாக எம்மால் காணக்கூடியதாக இருந்தது.

இன்று தனிமனிதன், தனிநாடு என்ற நிலையைத் தாண்டி ஒட்டு மொத்த உலகமும் கடன் நெருக்கடியால் அவதிப்படக்கூடிய அபாயம் குறித்து சர்வதேச நாயணய நிதியம் எதிர்வு கூறியுள்ளது. கவனத்திற் கொள்ள வேண்டியது அவசியத்திலும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோருக்கான புதிய பகுதி!

சுபிதி

# காதலர் மட்டும்...

## காதலில் நீங்கள் எப்படி?
## நிறங்கள் சொல்லும் உண்மைகள்

வர்ணங்கள் மனிதர்களின் குணத்தை பிரதிபலிக்குமாம். ஒருவருக்கு பிடித்த நிறத்தைக் கொண்டு அவருடைய குணத்தை கண்டுபிடித்து விடலாம் என்கின்றனர் உளவியலாளர். காதலில் நீங்கள் எப்படி என்பதைக் கூட உங்களுக்குப் பிடித்த நிறத்தை வைத்துக் கண்டுபிடித்து விடலாமாம்.

**சந்தோஷம் தரும் மஞ்சள்**

மஞ்சள் நிறப் பிரியர்களின் காதல் ஆசைகள் அளவுக்கு மீறியதாக இருக்கும். அத்தனை ஆசைகளையும் இவர்களது காதல் இணையால் நிறைவேற்ற முடியாது. அதனால் இந்த நிற மனிதர்களின் காதலுக்கு ஜோடி கிடைப்பது கஷ்டம். காதலுக்காக உயிரைக்கூட கொடுப்பேன் என்பார்கள். கல்யாண வாழ்க்கை என்று வந்துவிட்டால், தனது ஜோடியை எல்லா விதத்திலும் சந்தோஷப்படுத்துவார்கள்.

**நினைத்ததை முடிக்கும் சிவப்பு**

சிவப்பு வர்ணத்தை விரும்புபவர்கள் காதலில் அளவிட முடியாத ஆசைகளைக் கொண்டிருப்பார்கள். இவர் விரும்பும் ஜோடிக்கும் பிடித்த நிறம் சிவப்பு என்றால், இவர்கள் வாழ்க்கையை திகட்டத் திகட்ட அனுபவிப்பார்கள். ஆனால் காதல் விஷயத்தில் இவர்களின் பிடிவாதக் குணம், சில நேரங்களில் மிகப்பெரிய சிக்கலை உருவாக்கிவிடும். இவர்கள் ஆசைப்பட்டதை அடையாமல் விடமாட்டார்கள்.

**கணக்கற்ற காதல் 'இளஞ்சிவப்பு (பிங்க்)**

கணக்கற்ற காதல் கனவுகள் கொண்டவர்களாக இருப்பார்கள். காதல் விஷயங்களை படிப்பதிலும், அதை செயல்படுத்திப்பார்த்து உண்மையா, பொய்யா என்று கண்டறிவதிலும் ஆர்வம் உள்ளவர்கள். 'இளஞ்சிவப்பு' நிறத்தை விரும்பும் பெண்கள் தனித்துவம் பெற்றவர்களாக இருப்பார்கள். ஆண்களை எளிதில் நம்பி ஏமாந்துவிட மாட்டார்கள்.

**காதலில் திளைக்கும் பச்சை**

பச்சையை விரும்பும் பெண்களின் மனதில் என்ன இருக்கிறது என்பதை அறிவது கடினம். இவர்கள் அதிகம் பேசமாட்டார்கள். காதல் உணர்வுகளையும் எளிதாக வெளிப்படுத்தமாட்டார்கள். ஆனால் இந்த நிறத்தை விரும்பும் பெண்களிடம் காதல் உணர்வுகள் அதிகம் இருக்கும்.

காதலரே கணவர் ஆனாலும் காலம் முழுக்க அவரோடு காதல் கொள்ளத் துடிப்பார்கள்.

**புதுமையை விரும்பும் நீலநிறம்**

நீல நிறத்தை விரும்பும் பெண்கள் நாலைந்து ஆண்களை ஆராய்ந்து, இறுதியில் அதில் ஒருவரை தேர்வு செய்து காதலிப்பார்கள். இந்த நிறத்தை விரும்புகிறவர்களிடம் காதல் உணர்வு அதிகமிருக்கும். நீல நிறத்திற்குரிய ஆண்களிடமும் இதே இயல்புகள் இருக்கும்.

**சுயநலவாதியான ஊதா**

காதல் என்றாலும், கல்யாணம் என்றாலும் தனது எதிர் காலத்திற்கு அதன் மூலம் எவ்வளவு கிடைக்கும் என்று கணக்கு போடும் சுயநலவாதிகள். அதனால் இந்த நிறத்தை விரும்புகிறவர்களுக்கு காதல் மட்டுமல்ல, கல்யாணமும் தள்ளிப்போய்க்கொண்டே இருக்கும்.

**தத்துவம் பேசும் 'செம்மஞ்சள்' (ஒரேஞ்ச்)**

இவர்களுக்கு கடவுள் நம்பிக்கை அதிகம். காதல் இவர்களுக்கு சுட்டுப்போட்டாலும் வராது. இந்த நிறத்தை விரும்பும் ஆண்களை, பெண்கள் சாமியார் என்பார்கள்.

**மன அழுத்தம் தரும் கறுப்பு**

கறுப்பு நிறத்தை விரும்புபவர்கள் யாரிடமும் மனம்விட்டுப் பேசமாட்டார்கள். இறுக்கமான மனிதர்களாக இருப்பதால் காதல் இவர்களுக்கு பெரும்பாலும் கைகூடாது. மன அழுத்தம் இவர்களிடம் அதிகம் உண்டு.

**காதலை வெறுக்கும் வெள்ளை**

காதலாவது கத்தரிக்காயாவது என்று எப்போதும் காதலுக்கு எதிராகவே பேசுவார்கள். காதலிப்பவர்களை தூற்றவும் செய்வார்கள். ஆனால் குடும்ப வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள்.

ஆண்கள் தங்கள் காதலியையும், பெண்கள் தங்கள் காதலனையும் கவர என்னென்ன செய்யலாம் என்று யோசிப்பார்கள். காதலில் சிக்கிவிட்டால் ஒருவனின் நடை, உடை, பாவனை, குணம் என எல்லாமே ஒரு மாற்றத்துக்கு உள்ளாகும். இது அவனின் காதலியின் மனம்கவர அவன் எடுக்கும் முயற்சி. இதில் எந்தத் தவறும் இல்லை, ஆனால் காதல் வந்த தொடக்கத்தில் காதலிக்காக எல்லாவற்றையும் மாற்றிக்கொண்டு சில நாள்கள் கழிந்ததும் இதுபோன்ற விஷயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருந்தால் அதுவே விபரீதம் ஆகிவிடும்.



★ காதலர்களுக்குள் என்னதான் புரிதல் இருந்தாலும், அவ்வப்போது சிறு ஆச்சிரியங்களும், பரிசுப் பொருள்களும் அந்த உறவிற்கு நீண்ட நாட்கள் உயிரூட்டும்.

★ காதலருக்குச் சிறிய பரிசு கொடுத்தாலும், புதுமையான முறையில் கொடுங்கள். உதாரணத்திற்கு ஒரு பூச்செண்டில் 12 ரோஜாக்கள் இருந்தால், அதில் 11 சிவப்பு ரோஜாக்கள் மற்றும் ஒரேயொரு வெள்ளை ரோஜாவை வைத்துக் கொடுத்து, அந்த வெள்ளை ரோஜாவைப் போல் நீ தனித்துவம் மிகுந்தவர் என கூறுங்கள்.

## காதலுக்கு உயிரூட்டும் வழிமுறைகள்....

★ காதலருக்குப் பிறந்தநாள் என்றால், அவருக்கு பிறந்தநாள் வாழ்த்து அனுப்பும்போது, காதலரின் பெற்றோருக்கு நன்றி என்று எழுதி ஒரு பூச்செண்டை அனுப்புங்கள்.

★ இயன்றவரை ஒன்றாக நேரம் செலவழிக்கப் பாருங்கள்

★ உங்களின் துணையை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்யத் தயங்காதீர்கள்.

★ ஒரு விஷயத்தைப் பற்றி முடிவு செய்யும் முன் உங்களின் காதலரின் எண்ணம் என்னவென்று தெரிந்துகொண்டு செயல்படுங்கள்.

★ வருங்காலத்தைப் பற்றி இருவரும் சேர்ந்தே முடிவு செய்யுங்கள்.

★ ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து, மற்றவரின் எண்ணத்தை மதித்து, அன்பைப் பகிர்ந்து கொண்டால் இன்றைய காதலர்கள், காலம் முடியும் வரையிலும் காதலர்கள் தான்.

## காதல் பரிசு:
## உங்களுக்கும் பரிசு

உங்கள் வாழ்வில் அல்லது உங் களுக்குத் தெரிந்தவர்களின் வாழ்வில் காதல் பரிசுகள் பற்றிய சுவாரசியமான சம்பவங்கள் நடந்திருக்கலாம். அவற்றை 100 சொற்களுக்கு மேற்படாமல் எமக்கு எழுதி அனுப்புங்கள்.

தரமானவை வாரந் தோறும் இந்தப் பகுதியில் பிரசுரமாவதோடு. உங்களுக்கு ஆச்சரியமளிக்கும் பரிசுகளும் காத்திருக்கின்றன.



✍ அனுப்ப வேண்டிய முகவரி:
காதல் பரிசு: உங்களுக்கும் பரிசு
சுடர் ஒளி
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றவர்கள் வாரநாள்களில் 021 567 7609 என்ற எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு துரிதமாக பரிசினைப் பெற்றுக்கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திசை மாறிய பயணங்கள்

செ. கலாவாணி
சாவகச்சேரி.



> வீட்டின் மத்தியில் வருணின் பெற்றோர் வெள்ளை நிறத் துணியால் போர்த்தப்பட்டுக் கிடத்தியிருந்தார்கள். வருணும் ஆர்த்தியும் உணர்விழந்து விழும் வரையில் அழுதார்கள்.

அடிவானம் சிவந்த அந்திப் பொழு தில் கடற்கரை மணலில் கடல லைகள் கால் நனைத்து சில்மிஷம் செய்யவும், அச்சமாக அடித்துக் கொண்டிருந்த அலைகளை அன்று தான் முதன் முதலில் பார்ப்பவனைப் போலவும், கடல் நீரைக் கரையில் இருந்த வாறே கண்களால் பருகிக் கொண்டிருந்தான் வருண். தலை துவட்டிக் கொள்ளாமல் ஊர்வலம் போகும் மேகங் களையும்,தூரிகையில்லாமலேயே தூரத்து வானிற்கு நீண்ட காலமாகவே நீல நிறமான வர்ணத்தினை அடித்துக் கொண்டிருக்கும் கட லலைகளையும் பார்த்து இரசிப்பது எல்லாம் அவனுக்குப் புதிதான தொன்றல்ல. அவனது சிந்த னைப் பறவை கட்டவிழ்த்து மெல்ல மெல்ல கடந்த காலத்தை நோக்கிப் பறக்கத் தொடங் கியது.

எழில் கொஞ்சும் இந்து சமுத்திர மிதிகல்லின் வடபகுதியிலே, வனப்பு மிக்க கிராமம் ஒன்றி லே தான் வருண் பிறந்தான். தகப்பனார் சுந்தரமூர்த்தி கிராம உத்தியோகத் தராகப் பணிபுரிபவர். தாய் சுபத்திரா வீட்டுப்பணி செய்பவள். கண்ணின் மணி போன்ற தங்கை ஆர்த்தி அக் கிராமத்தி லுள்ள பாடசாலையிலேயே தரம் பத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தாள். வருண் கல்விப் பொதுத் தாரா தர உயர்தரத்தினை நகரத்திலுள்ள பாடசாலை யொன்றில் கற்றுக் கொண்டிருந்தான். இந்தக் குடும்பம் துன்பம் என்பதனைக் கனவில் கூட எண்ணிப் பார்க்காது அவர் களு டைய வாழ்க் கைச் சக்கரம் இனிதே உருண்டு கொண்டிருந்தது. எல்லோருடனுமே சகஜ மாகவும், அன்பாகவும் பழகும் சுந்தரமூர்த்தி, குடும்ப நலனை கருத்தில் கொண்டு ஓய்வு நேரங்களில் விவசாயத்திலும் ஈடுபட்டு வந்தார்.

அன்று.... பங்குனி மாதம் இருபதாம் தேதி. ஆமாம். வருணனின் கண்களில் இருந்து இரத் தக் கண்ணீரைச் சொரிய வைத்த நாள். அயலிலு ள்ள நகரத்திற்கு திருமண வைபவம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக வருணணின் பெற்றோர் சென்றி ருந்தனர். வருணும் ஆர்த்தியும் பாடசாலை முடித்து வீட்டிற்கு வரும் போது வீட்டின் முன் ஒரே சனக் கூட்டம்நிறைந்திருந்தது.வீட்டு வாசலை அண் மித்த போது வருணின் கண்களினையே நம்ப முடிய வில்லை. தான் காண்பது கனவோ? என்று கூட ஒரு கணம் சிந்தித்தான். வீட்டின்மத்தியில்வருணின்பெற்றோர் வெள்ளை நிறத் துணியால் போர்த் தப்பட்டுக் கிடத்தியிருந்தார்கள். வருணும் ஆர்த்தியும் உணர்விழந்து விழும் வரையில் அழுதார்கள். பெற்றோர் நகரத்திற்குச்சென்ற வேளை யில் யாரோ இனம் தெரியாதவர்கள் துப்பாக்கி யால் தமது வேட்டுக்களைத் தீர்த்து விட்டுச் சென்றி ருந்தனர். பெற்றோரின் இறுதிக் கிரியைகள் முடிந்தவுடன், தமது கடமையும் முடிந்து விட்ட தென்று உணர்ந்த வர்கள் போல் உறவினர்களும் தத்தம் வீடுகளுக்குச் சென்று விட்டனர். தனித்து விடப்பட்ட வருணும் ஆர்த்தியும் அநாதரவாக நின்றனர். பெற்றோரைக் கொலை செய்யும் அளவிற்கு அவர்கள் யாரையுமே பகைத்துக் கொண்டதும் கிடையாது. சில வேளை களில் அவர்கள் மற்றவர் களுடன் சகஜமாக பழகுவதே அவர்களுக்கு ஆபத்தாக முடிந்திருக்கலாம். அவர்கள் இப்படிப் பழகுவதை பொறுக்காத யாரோ இக் கொடுமையான காரியத்தினைச் செய் திருக்கின்றார்கள். வருணின் மனதிலே தீராத துன்ப வடுக்கள் எரித்துக் கொண்டிருந்த போதிலும் தனக்காக அன்றித் தன் தங்கைக் காகாவாவது வாழத் தலைப்பட்டான்.

தன் தங்கை ஆர்த்தியை நன்றாகப் படிப் பித்து, ஓர்நல்லகுணமானஇடத்தில் திருமணம் முடித்துக் கொடுப்பதே அவன் வாழ் வின் இலட்சியமாக மாறியது. அதற்காக தன்னையே தியாகம் செய்து மெழுகாக உருகினான். அதன் நிமித்தம், தன் படிப்பினையே இடையில் நிறுத்தினான். தந்தை முதலிலேயே கஷ்டப்பட்டு உழைத்து சம்பாதித்து வைத்த பணம் அவனுக்கு மிகவும் கை கொடுத்தது.ஆனால் இக்கிராமத்தி லேயே தொடர்ந்து வாழ்க்கையை நடாத்துவது என்பது சாத்தியம் அற்ற தொன்றாகவே காணப் பட்டது. அந்தக் கிராமத்தில் வீட்டில் இருக்கும் போதெல்லாம் தம் பெற்றோரு டன் சிரித்துப் பேசி விளையாடிய அந்த இன்ப நினைவுகள் அணு அணு வாக வாட்டிச் சித்திரவதை செய்தன. அதனால் அந்தக் கிராமத்தினை விட்டு வெளியூர் ஒன்றிற்குச் செல்ல முடிவெடுத்தான். தாம் வசித்து வந்த வீட்டினையும் வயல் நிலங்களையும் பல்வேறு சிரமங்களின் மத்தியிலும் குறைந்த விலையில் விற்று விட்டே நண்பன் ஒருவனின் உதவியுடன் குடியேறினான்கிராமத்திலே பரந்து விரிந்த இடத்திலே சுகமாக வாழ்ந்து பழகிய அவர்களுக்கு அந்த நெருக்க டியான வீடு ஆரம்பத்தில் கஷ்டமானதாகவே இருந் தது. அத்துடன் அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவிற் கேற்ப கொழும்பில் வாழ்க் கையினை நடத்துவது என்பது இலகு வான காரியமும் அல்ல. இதனால் வருண் வேலைக் குச் செல்லத் தீர்மானித்தான். நண்பனின் சிபாரிசின் பேரில் கணனி நிறுவனமொன்றில் வேலைக்குச் சேர்ந்தான்.

ஆர்த்தி உயர்தரத்தில் கலைத்துறையில் கல்வி கற்று மூன்று பாடங்களிலும் அதி திறமைச் சித்தியினைப் பெற்று பல்கலைக்கழகத்தில் சட்டத் துறையில் கற்றுக்கொண்டிருந்தாள். தன் தங்கைக்காகவே கடவுள் தன்னை இன்னும் உயிரோடு வாழ வைத்துக் கொண்டி ருக்கிறார் என மனப்பூர்வமாக நம்பினான். இதற்காக வருண் திருமண வயதினை அடைந்திருந்தும் அதன் சிந்தனையின்றி தியாகத்துடன் வாழ்ந்து வந்தான். அவனுடைய நண்பன் எத்தனையோ பெண்களின் குறிப்புக் கள் கொண்டு வந்து கொடுத்த போதிலும் அவன் முற் றாக மறுத்து விட்டான். அவனுடைய பெற்றோர் உயி ரோடு இருந்திருந்தால் தன் தங்கையை எவ்வாறு கண்கலங்காமல் பார்த்திருப்பார்களோ அதை விடப் பல மடங்கு மேலாகத் தங்கையைக் கவனித்துக் கொண் டான் அவனது இலட்சியப்பாதையில் எத்தனை சவால்கள் வந்தாலும் தகர்த்தெறியத் தயாராகி விட்டான். தங்கை பட்டப் படிப்பினை முடித்து ஒரு வக்கீலாக வந்து தன் சொந் தக் காலிலே நிற்கும்போது அவளிற்கு நல்ல இடத்தில் திருமணம் முடித்துக் கொடுக்க வேண்டும். அதன் பின் வேண்டுமானால் தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற முடிவோடு இருக்கின்றான். அவனின் திறமை யான உழைப்பு அவனை ஓர் உயர்ந்த நிலைக்கு கொண்டு சென்று விட்டிருந்தது. பல கல்விமான்கள் கூட அவனிடம் சந்தேகங் களைக் கேட்டுத் தெளியும் அளவிற்கு அவன் கணனித் துறையில் வல்லுநராக மிளிர்ந் தான்.

திடீரெனத் தோன்றிய உணர்வின் காரண மாக கால்கள் சில்லிட்டு விறைத்துப் போயிருக்க நிஜ உலகிற்கு வந்தான். அப்போதுதான் அதிக நேரம் கடல் நீரில் கால்களை வைத்திருந்ததை உணர்ந்தான். பறவைகள் தத்தம் குஞ்சுகளுக்கு இரைகளினைத் காவிய வண்ணம் தமது கூடுகளை நோக்கிப் பறந்து கொண்டிருந்தன. கதிரவனை மெல்ல மெல்ல கடல் விழுங்கிக் கொண்டி ருந்தது. பறவைகளுக்கே உரித்தான இன்னிசை ஒலிகள் காதினை நிறைத் தது. ஐந்தறிவு படைத்த அவற்றிற்கே தம் குஞ்சுகள் மீது இவ்வளவு பாசம் இருக்கும் போது ஆறறிவுள்ள தனக்கு தங்கை மீது இவ்வளவு பாசம் இருப்பதில் ஆச்சரியம் எதுவும் இல்லையே என நினைத்துக் கொண்டன. மின்மினிகள் வானில் மெல்ல மெல் லக் கண் சிமிட்டத் தொடங்கின. நிலவு மங்கை நாணத் துடன் புன்முறுவலித்துக் கொண்டிருந்தாள். கடற் கரையில் ஜோடியாக பலர் ஆங்காங்கே அமர்ந்தி ருந்தனர். கடற்கரை மணலில் பல்லாயிரக் கணக் கான கால் தடங்கள் பதிந்திருந்தன. அவை ஒவ்வொன் றும் ஒவ்வொரு திசைகளிலே பயணித்திருந்தன. வருண் நெஞ்சிலே பாரத்துடன் இதயம் கனக்க மண லை தட்டிவிட்டு எழுந்து வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாகும் போது . தொலைவில் அவன் தங்கை ஆர்த்தி தன்னைத் தேடிக் கொண்டு வேகமாக வருவது தெரிந்தது வருண் தனது இலட்சியத்தினை மீண்டும் ஒரு தடவை நினைவு கூர்ந்து கொண்டு தன் தங்கையை நோக்கி தனது பயணத்தினை தொடர்கின்றான். தொலைவில் எரிந்து கொண்டிருந்த விளக்குகள் அவனது வெற்றியை உறுதி செய்வது போல் கண்சிமிட்டின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது மக்களுக்கான அறிவித்தல்

## பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் உரிமமளிக்கப்பட்ட நிறுவனங்கள்

(15.10.2013 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

### உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அக்சிஸ் பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. அமானா பாங்க் லிமிடெட்
4. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
5. இந்தியன் பாங்க்
6. இலங்கை வங்கி
7. எம்சிபி பாங்க் லிமிடெட்
8. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
9. ஹபிப் பாங்க் லிமிடெட்
10. கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
11. சம்பத் பாங்க் பிஎல்சி
12. சிற்றி பாங்க் என்ஏ
13. செலான் பாங்க் பிஎல்சி
14. டீஎவ்சீசீ வர்தன பாங்க் பிஎல்சி
15. டொயிச் பாங்க் ஏஜி
16. த ஹொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
17. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
18. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
19. பப்ளிக் பாங்க் பெர்காட்
20. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
21. மக்கள் வங்கி
22. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்
24. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா

### உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பீஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சங்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

### உரிமம் பெற்ற நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இந்திரா பினான்ஸ் லிமிடெட்
6. ஈ.ரி.ஐ பினான்ஸ் லிமிடெட்
7. எம்சிஎஸ்எல் பினான்ஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்
8. எல் பீ பினான்ஸ் பிஎல்சி
9. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
12. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
13. ஓரியன்ட் பினான்ஸ் பிஎல்சி
14 கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
15. கப்பிட்டல் எலையன்ஸ் பினான்ஸ் பிஎல்சி
16. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
17. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
18. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
19. சிலோவ் பினான்ஸ் பிஎல்சி
20. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
21. சிட்டி பினான்ஸ் கோப்பிரேசன் லிமிடெட்
22. சியபத பினான்ஸ் லிமிடெட்
23. சிற்றிசன்ஸ் டிவலொப்மென்ட் பிசினஸ் பினான்ஸ பிஎல்சி
24. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
25. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
27. சொவ்றலொயிக் பினான்ஸ் பிஎல்சி
28. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
29. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
30. த ஸ்ரான்டட் கிறடிற் பினான்ஸ் லிமிடெட்
31. தேசோதய டெவலப்மென்ட் பினான்ஸ் கம்பனி லிமிடெட்
32. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
33. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி
34. பார்ட்லீட் பினான்ஸ் பிஎல்சி
35. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி
36. பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் லிமிடெட்
37. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
38. பீப்பிள்ஸ் மர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
39. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
40. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
41. மெல்ஸ்டா ரீகல் பினான்ஸ் லிமிடெட்
42. யூ பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்
43. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
44. ரிச்சர்ட் பீரிஸ் ஆர்பிகோ பினான்ஸ் லிமிடெட்
45. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
46. வெலிபல பினான்ஸ் பிஎல்சி
47. ஸ்வர்ணமகால் பினான்ஷியல் ஸர்விஸஸ் பிஎல்சி
48. ஜோர்ஜ் ஸ்டுவர்ட் பினான்ஸ் பிஎல்சி

*இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவரினால் முகாமைத்துவம் செய்யப்படுவதுடன் மீள்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. அதேவேளை, வைப்புக்களைத் திரட்டுதல் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

➢ மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.

➢ மேலுள்ள ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

**இலங்கை மத்திய வங்கி**

வங்கிகள் - தொ.பேசி.: 2477100, 2477120, 2477129, 2398539 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

நிதிக் கம்பனிகள் - தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdsnbfi@cbsl.lk







### அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

**தன் தகுதி உணர்ந்து செயற்பட்டு, உரிய நன்மை பெறும், மேஷ ராசிக்காரர்களே!**

பிறரது விவகாரங்களில், கவனம் கொள்ளாமல் சொந்தப் பணிகளில் ஈடுபடுவது, நன்மை பெற உதவும். உடன் பிறந்தவர்களின் ஆதரவு பலமாக கிடைக்கும். குடும்பத்தேவைகளை, சிக்கன பணச்செலவில் மேற்கொள்வது நலம் தரும். புத்திரர் பிடிவாத குணத்துடன் செயற்படுவர். பொறுமையுடன் வழி நடத்துவீர்கள். உடல் நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணையின் ஆறுதல் வார்த்தை, நம்பிக்கை தரும்.




### கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

**நல்ல எண்ணங்களை, மனதில் நாளும் வளர்த்திடும், ரிஷப ராசிக்காரர்களே!**

மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்ட பணிகளை, எளிதாக நிறைவேற்றுவீர்கள். பண வரவும், நன்மையும் அதிகரிக்கும். உடன் பிறந்தவர்களுக்கு, இயன்ற அளவில் உதவுவீர்கள். புத்திரர் படிப்பில் சிறந்து வர நன்கு உதவுவீர்கள். எதிர்மறையாக கருதியவர்களில் சிலர், அன்பு எண்ணத்துடன் பழகுவர். இல்லறத்துணை கருத்து, ஒற்றுமையுடன் குடும்ப பணிகளை மேற்கொள்வர்.




### மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**மாறுபட்ட கருத்துக்களை, துணிவுடன் தவிர்த்திடும், மிதுன ராசிக்காரர்களே!**

மனஉறுதியுடன் வெற்றி கொள்வீர்கள். பணவசதிக்கேற்ப செலவுகளை திட்டமிடுவீர்கள். உடன் பிறந்தவர்களுக்கான மங்கல நிகழ்ச்சி நடத்த, அனுகூலம் உருவாகும். வாகன பயன்பாடு, இனிதாக அமையும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து கண்டிப்பதில், நிதானம் பின்பற்றவும். உடல் நல ஆரோக்கியம் சீராக, காலமுறை உணவு பழக்கம், தகுந்த ஓய்வு அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரித்து மனதில் நிம்மதியை உருவாக்கும்.




### புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

**நல்லொழுக்கத்தை, விருப்பமுடன் பின்பற்றி வாழும், கடக ராசிக்காரர்களே!**

அதிகமாக உங்களை புகழ்ந்து பேசுபவரிடம், கவனமுடன் பழக வேண்டும். வாகன பராமரிப்பு பணச்செலவு அதிகரிக்கும். குடும்பத்தின் தேவை நிறைவேற்ற, கொஞ்சம் பணக்கடன் பெறுகிற நிலை ஏற்படலாம். சொத்து ஆவணம் கவனமுடன் பாதுகாக்கவும். இல்லறத்துணை வழிசார்ந்த உறவினர், உரிய மதிப்பு, மரியாதை தருவர். தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் பெற கூடுதல் அளவில் பணிபுரிவது அவசியம்.




### மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்

**மனஉறுதியுடன் வாழ்வில் சிரமம் சரி செய்கின்ற, சிம்மராசிக்காரர்களே!**

வாழ்வில் பெறவேண்டிய முக்கியமான நன்மைகளைப் பெற, உத்வேக மனதுடன் செயற்படுவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். பெருமை தரும் செயல்களில் ஈடுபடுவர். விவகார பேச்சுக்களில், சமரச தீர்வு கிடைக்கும். இல்லறத்துணை விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். புதியவர்களின் வரவினால், தொழிலில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். உத்தியோகத்தர் சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு, வெகுமதி பெறுவர்.




### உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்

**தன்னிடம் பழகுபவர்களை, சமமாக கருதுகின்ற, கன்னி ராசிக்காரர்களே!**

மனக்கவலை, சோம்பல் குணம் அகற்றுவதால் மட்டுமே, பணிகளில் எதிர்பார்த்த நன்மை கிடைக்கும். நன்கு பழகியவர்களிடமும் நிதானித்து பேசுவது நல்லது. வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு நடைமுறை பின்பற்ற வேண்டும். புத்திரரின் விருப்பம், ஓரளவு நிறைவேற்றுவீர்கள். பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்லக்கூடாது. இல்லறத்துணையின் ஆலோசனை, உங்கள் மனதில் நம்பிக்கை ஒளியை உருவாக்கும்.




### சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

**சொல்லையும், செயலையும் வசீகரமாக உருவாக்கும், துலாம் ராசிக்காரர்களே!**

மனதில் நம்பிக்கையுடன் செயற்பட்டு, வாழ்வில் கூடுதல் வளம்பெற, தேவையான பணிகளை நிறைவேற்றுவீர்கள். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சமூக நிகழ்வுகளில் கலந்து கொள்கிற ஆர்வம் வளரும். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரரின் மனக்குறை சரி செய்வதால், குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். எதிரியால் உருவாகிற இடையூறு, செயல் இழக்கும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர்.




### விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை

**நல்ல காரியங்களுக்கு, பணம் தாராளமாக செலவிடும், விருச்சிக ராசிக்காரர்களே!**

செயல்களில் குளறுபடி வராமல் தவிர்க்க முன்யோசனையுடன், ஈடுபடவேண்டும். ஆடம்பர செலவுகள் உருவாகி, சேமிப்பு பணம் சிறிது குறையும். உடன் பிறந்தவர்களின் கருத்துக்களை, கவனத்தில் கொள்வீர்கள். பூர்வீக சொத்தில் பெறுகிற பயன்கள், மனதில் நம்பிக்கை தரும். உடல்நல ஆரோக்கியம் சீராக, தகுந்த ஓய்வு, மருத்துவ சிகிச்சை உதவும். இல்லறத்துணை குடும்ப பொறுப்புக்களை உணர்ந்து, உதவிகரமாக செயற்படுவார்.




### மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்

**அடுத்தவர் நலன் சிறக்க, இயன்ற உதவி புரியும், தனுசு ராசிக்காரர்களே!**

மனதில் மகிழ்ச்சியும், செயல்களில் கூடுதல் நம்பிக்கையும் உருவாகும். வாழ்வில் அதிக நன்மை பெற, புதியவர்களின் நட்பு, உதவி கிடைக்கும். இனிய வார்த்தை பேசி, உங்கள் மீதான நன்மதிப்பை பாதுகாப்பீர்கள். வீடு, வாகனம் புதிதாக வாங்குகிற திட்டம், சிலருக்கு நிறைவேறும். புத்திரரின் சேர்க்கை சகவாசம் அறிந்து, நல்வழி நடத்துவது அவசியம். கடந்த நாள்களில், எதிர்மறை செயல் என, உணரப்பட்டவை, அனுகூலம் தருவதாக மாறும்.




### உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்

**இறை பக்தியில் கூடுதல் ஆர்வமுள்ள, மகர ராசிக்காரர்களே!**

கடந்த வாரங்களில், ஆர்வமுடன் செய்த பணிகளுக்கு, உரிய பலன் கிடைப்பதில் தாமதம் இருக்கும். எதிர்கால நலனை கவனத்தில் கொண்டு செயற்படுவதால், வாழ்வியல் நடைமுறை சீராக அமைந்திடும். நண்பரிடம் சில விஷயங்கள் பற்றி பேசுவீர்கள். புதிய தீர்வு கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு நடத்தி, நிம்மதி தருகிற மனநிலை பெறுவீர்கள். உடல்நல ஆரோக்கியம் சீராக, சத்து நிறைந்த உணவு உண்பதும், தகுந்த ஓய்வும் அவசியமாகும். இல்லறத்துணை, கனிவான வார்த்தை பேசி, அன்பு பாராட்டுவார். தொழிலில் உள்ள அனுகூலத் தன்மைகளை அக்கறையுடன் பாதுகாப்பீர்கள்.




### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்

**சமூகப் பணி புரிவதில், விருப்பம் நிறைந்த, கும்ப ராசிக்காரர்களே!**

உங்களின் சிறு முயற்சியும், அதிக அளவிலான நன்மையை பெற்றுத் தரும். வாகனத்தில் பராமரிப்பு பணி அவசியமாகும். புத்திரரின் அறிவுத்திறன் மிகுந்த செயல்களை பார்த்து, வியப்பு அடைவீர்கள். எதிர்மறையாக செயற்பட்டவரும், உங்களிடம் மறைமுகமாக உதவி பெற முயற்சி செய்வர். இல்லறத்துணையின் கருத்துக்கு உரிய மதிப்பு தருவதால் மட்டுமே, குடும்ப ஒற்றுமை சீராகும். தொழில், வியாபார நடைமுறையின் தாக்கம் உணர்ந்து, கூடுதல் மூலதனம் செய்வீர்கள்.




### பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி

**வாக்குறுதி தருவதில், நிதானம் பின்பற்றுகின்ற, மீன ராசிக்காரர்களே!**

மனதில் உருவாகிற குழப்பமான சிந்தனைகளை, உங்கள் நலம் விரும்புபவரின் ஆலோசனை, உதவியால் சரிசெய்வது அவசியம். பணப்பரிவர்த்தனையில் சிக்கனம், பாதுகாப்பு பின்பற்ற வேண்டும். நீண்ட தூர வாகனப்பயணம் தவிர்ப்பதால், உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். புத்திரர், உங்களின் சொல்லை மதித்து நடப்பர். இல்லறத்துணை குடும்ப நலன் பாதுகாப்பதில், அக்கறை கொள்வர். தொழிலில் உருவாகிற இடையூறு தாமதமின்றி சரி செய்வதால், உற்பத்தி, விற்பனையில் சராசரி நிலையை அடையலாம். பணியாளர்கள், பொறுப்புணர்வுடன் செயல்படுவதால் மட்டுமே, நிர்வாகத்திடம் பெற்ற நற்பெயரை பாதுகாக்க இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

தொகுப்பு : வரு

# விஸ்டனும் சர்ச்சையும்


the wisden cricketer

'கிரிக்கெட்டின் பைபிள்' என அழைக்கப்படும் 'விஸ்டன்' சஞ்சிகையின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி அச்சஞ்சிகை உலக பதினொருவர் அணியொன்றைத் தெரிவு செய்துள்ளது. அதில், தெரிவு செய்யப்பட்டிருக்கும் வீரர்கள் தொடர்பில் சமூக வலைத் தளங்களில் கடுமையான வாதப்பிரதிவாதங்கள் கிரிக்கெட் இரசிகர்களால் முன்வைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றன. தகுதியானவர்கள் பலர் வெளியிலிருக்க, தகுதியில் குறைந்த சிலர் பட்டியலில் உள்ளீர்க்கப் பட்டிருப்பதே இந்தச் சர்ச்சைக்குரிய காரணம். சேர்க்கப் படாதவர்களில் முக்கியமானவர் இலங்கையின் உலக சாதனை சுழல்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன்.

விஸ்டனால் அறிவிக்கப்பட்ட அணியில், ஆரம் பத் துடுப்பாட்ட வீரர்களாக இங்கிலாந்தைச் சேர்ந்த ஜக் ஹொப்ஸ், டபிள்யு.ஜி.கிரேஸ் ஆகியோர் உள்ளனர். இதில் கிரேஸ் 22 டெஸ்ட் போட்டிகளில் மட்டுமே பங்குபற்றியிருக்கிறார். 3 ஆவது இடத்தில் சேர் டொனால்ட் பிரட்மன் சேர்க்கப்பட்டுள்ளதோடு, 4 ஆவது இலக்கத்தில் சச்சின் டெண்டுல்கர் அறிவிக்கப்பட்டுள் ளார். 5ஆவது இடத்தில் சேர் விவியன் றிச்சர்ட்ஸ் (மே.தீ) அறிவிக்கப்பட்டுள்ளதோடு, 6ஆவது இடத்தில் கரி சோபர்ஸ் (மே.தீ) சகலதுறை வீரராகச் சேர்க்கப் பட்டுள்ளார். 7ஆவது இடத்தில் விக்கெட் காப்பாளர் அலன் நொட் (இங்கிலாந்து) சேர்க்கப்பட்டுள்ளார். வேகப் பந்து வீச்சாளர்களாக வசீம் அக்ரம், மல்கொம் மார்ஷல், சிட்னி பார்ன்ஸ் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மிக முக்கியமானதாக, சுழற்பந்து வீச்சாளராக முத் தையா முரளிதரனின் போட்டியாளரான ஷேன் வோர்ண் பட்டியலிடப்பட்டுள்ளார்.

வெவ்வேறு காலப்பகுதிகளில், வெவ்வேறு விதிகளின் கீழ், விளையாடிய வீரர்களைச் சரியான விதத்தில் ஒருபோதும் ஒப்பிட முடியாது. ஆனாலும், விஸ்டன் அறிவித்துள்ள வீரர்களின் பெறுபேறுகளைப் பார்க்கும் போது, அவர்களின் தரப்படுத்தல் புரிந்து கொள்ள முடியாததாக இருப்பதுடன், நடுநிலையானதா? என்ற கேள்வியும் எழுகின்றது. இந்திய வீரர் சுனில் கவாஸ்கரை விட (125 போட்டிகளில் 51.12 சராசரி) கிரேஸ் எவ்வாறு சிறந்தவர்? விக்கெட் காப்பாளராக அடம் கில்கிறிஸ்ட், குமார் சங்கக்கார ஆகியோரை விட அலன் நொட் எவ்வாறு சிறந்தவர்? முரளியை விட ஷேன் வோர்ண் எவ்வாறு சிறந்தவர்? எனப் பல வாறான கேள்விகள் எழுகின்றன.

இந்தப் பட்டியலில் இங்கிலாந்தின் முன்னாள் வீரர்கள் நால்வர் இடம்பெற்றிருப்பதால், இது இங்கிலாந் தின் முன்னாள் வீரர்களைக் கௌரவிப்பதற்கு தயார்ப் படுத்தப்பட்ட பட்டியல் அல்லது எதிர்வரும் ஆஷஸ் தொடருக்கான விளம்பரம் என்ற ரீதியில் விமர்சனங் கள் முன் வைக்கப்படுகின்றன. இதனைவிட, "இங் கிலாந்து கிரிக்கெட்டில் அதிக தாக்கத்தைச் செலுத்திய உலகப் பதினொருவர்" என்று விஸ்டன் பட்டியலை அறிவித்திருக்கலாம்.



# கொடைவள்ளல் இஷாந்

அவுஸ்திரேலிய அணிக்கெதிரான மூன்றா வது ஒருநாள் போட்டியின் 48ஆவது ஓவரை வீசிய இஷாந் சர்மாவை 'வாரி வழங்கிய கொடைவள்ளல்' என்ற ரீதியில் மிக மட்டமான விமர்சனங்களை இந்திய ஊடகங்கள் முன்வைத்து வருகின்றன. சாதித்தவர் களைத் தலையில் வைத்துக் கொண்டாடுவதும், தோற்றவர்களைத் தரையில் போட்டு நசுக்குவதும், இந்தியக் கிரிக்கெட் இரசிகர்களுக்கும், ஊடகங்களுக்கும் புதிதில்லையே! அதன்படி, வழக்கம் போல கச்சிதமாகத் தமது தொழிலைச் செய்து, இஷாந் சாமாவின் கிரிக்கெட் வாழ்வுக்கும் முற்றுப்புள்ளி வைக்க நினைக்கிறது ஒரு கூட்டம். இதில் டோனியின் விமர்சனமும் சேர்ந்து கொண்டது தான் ஆச்சரியம்.

'கப்டன் கூல்' எனச் செல்லமாக அழைக்கப்படும் டோனி, ஆடுகளத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கோபமோ, பரபரப்போ அடைவதில்லை. இருந்தும், அவரையும் கோபப்பட வைத்திருக்கிறார் இஷாந். சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் பந்துவீச்சாளர்கள் தங்களது பலம் அறிந்து, அதற்கேற்ப திட்டம் வகுத்து செயல்பட வேண்டும். இவர்களுக்கு எல்லாவற்றையும் 'ஸ்புன் வைத்து ஊட்டுவது போல சொல்லித்தர முடியாது' என்ற டோனியின் கருத்து கவனிக்க வைக்கிறது. கிரிக்கெட் டைப் பொறுத்தவரை ஒரு ஓவரில்.. ஏன்? ஒரு பந்து கூட போட்டியின் போக்கை தி[illegible]ச மாற்றிவிடும். இது டோனிக்குத் தெரியாததல்ல. சில மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மேற்கிந்திய தீவுகள் முத்தரப்பு தொடரின் இறுதிப்போட்டி உள்ளிட்ட பல போட்டிகளில் டோனியே இவ்வாறான கைங்கரியங்களைச் செய்து இந்திய அணியை வெற்றி பெறச் செய்திருக்கிறார்.

இந்தியா, 360 என்ற இலக்கைத் விரட்டி அடித்தால், இந்தியா துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களைத் துவம்சம் செய்கின்றார்கள், டோனி இறுதி ஓவர்களில் விளாசினால், இவனல்லவா வீரன் என மிகைப்படுத்தி எழுதும் இந்திய ஊடகங்களும், இரசிகர்களும், ஏனைய அணிகள் இந்தியாவை அடித்து துவம்சம் செய்யும் சந்தர்ப்பங்களில், அதை யாராவது ஒரு பந்துவீச்சாளரின் சொதப்பல் என அவரை மட்டும் ஒதுக்கி ஏனையவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். இது, இப்பொழுது மட்டுமல்ல, பல வருடங்களாகவே இடம்பெற்று வரும் ஒரு விடயம். அகார்கர், நேஹ்ரா, முனாப் பட்டேல், ஸ்ரீசாந்த் வரிசையில் நேற்று இசாந்த் சர்மா! நாளை யாரோ?

தற்போது, இந்திய அணியில் நட்சத்திரப் பந்து வீச்சாளர்கள் குறைவு அல்லது இல்லை என்பதற்காகப் பந்துவீச்சாளர்களுக்குச் சிறிதளவு கூட சாதகம் இல்லாத ஆடுகளங்களை அமைத்து விட்டுத் துடுப்பாட்ட வீரர்களைக் கொண்டாடுவதும், பந்துவீச்சாளர்களை கேவலப்படுத்துவதும் அற்பத்தனமானது. இரசிகர்களை கவர்வதற்கு கேவலமான புற்றரை ஆடுகளங்களை அமைத்து துடுப்பாட்டம்தான் கிரிக்கட் என்கின்ற மாயையை இந்திய கிரிக்கட் மைதானங்கள் நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கும் வரை இன்னும் பல இந்திய வேகப்பந்து வீச்சாளர்கள் அசிங்கப்படத்தான் போகிறார்கள்.

# ஜெரார்டு 100



இங்கிலாந்து பிரிமியா லீக் தொடரில் லிவர்பூல் அணித்தலை வர் ஸ்டீவன் ஜெரார்டு, பிரிமியர் கால்பந்து அரங்கில் தனது 100 ஆவது கோல் அடித்து சாதனை படைத்தார். நியூகேசில், லிவர்பூல் அணிகள் மோதிய பரபரப்பான இப்போட்டி, ஆட்டநேர முடிவில் 2-2 என்ற கோல் கணக்கில் சமனிலையில் முடிவுற்றது. இப்போட்டியின் 42 ஆவது நிமிடத்தில் கிடைத்த தண்டனை உதையை பயன் படுத்திய ஜெரார்டு, அதனைக் கோலாக மாற்றினார். இதன்மூலம், பிரிமியர் கால்பந்து அரங்கில் தனது 100 ஆவது கோலை அடித்தார்.

சர்வதேச போட்டியில் இங்கிலாந்து அணிக்காக விளையாடி வரும் ஜெரார்டு, 1998ஆம் ஆண்டு முதல் லிவர்பூல் அணிக்காகக் பிரிமியரர் கால்பந்து தொடரில் விளையாடி வருகிறார். இதுவரை 448 போட்டியில் 100 கோல் அடித்துள்ளார். இதன் மூலம் பிரிமியர் கால்பந்து அரங்கில் 100 கோல் அடித்த 24வது வீரர் என்ற பெருமை பெற்றார்.

இந்தப்பட்டியலில் ப்ளெக்போன் றோவாஸ் மற்றும் நிவ்காஸ்டில் யுனைட்டட் ஆகிய இரு அணிகளுக்காகவும் விளையாடிய அலன் ஷீயரா (260 கோல்கள்) முதலாவதாக இருக்கின்றார். 2ஆவது இடத்தில் அன்ரூ ஹோலும் (188 கோல்கள்), 3ஆவது இடத்தில் த்யேரி ஹென்றியும் (175 கோல்கள்) இருக்கின்றார்கள். இங்கிலாந்தின் நட்சத்திர வீரர் வெய்ன் ரூனி 6ஆவது இடத்தில் (159 கோல்கள்) உள்ளார்.

இவர்களுடன் இங்கிலாந்து வீரர்களான பிராங் லம்போட், ஜேர்மய்ன் டெபோ, டரன் பென்ட் ஆகியோரும் பிரிமியர் போட்டிகளில் 100 கோல்களுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# அசத்தும் ஆர்யா



தான் சம்பாதிக்கும் பணத்தினை காணி வியாபாரத்தில் முதலீடு செய்து அசத்தி வருகிறாராம் ஆர்யா. ஆரம்பம் படத்துக்காக முதலில் ஆர்யாவுக்கு நான்கு கோடி சம்பளம் பேசப்பட்டது. அதன்பின் தனக்கு வில்லத்தனமான என்று சொல்லி ஐந்தரை கோடிக்கு அடம்பிடித்தார் ஆர்யா. பின்னர் நான்கரை கோடி கொடுக்கப்பட்டது.

அந்தப் பணத்தை அப்படியே காணி வியாபாரத்தில் முதலீடாகப் போட்டுள்ளாராம் ஆர்யா. கேரளாவில் கொச்சின் அருகில் இருக்கும் இடங்களுக்கு மதிப்பு அதிகமாம். ஆறு மாதத்துக்கு முன்னால் ஒரு கோடிக்கு வாங்கிய நிலம் இப்போது நான்கு கோடிக்கு விலை போகிறதாம்.அதனால் தமிழ்நாட்டில் சம்பாதிக்கும் பணத்தை கொச்சினில் முதலீடு செய்கிறாராம் ஆர்யா.

# களத்தில் தனுஷ் - வெற்றிமாறன்

தேசிய விருது பெற்ற தனுஷ் - வெற்றிமாறன் வெற்றிக் கூட்டணியில் மூன்றாவது படம் உருவாகவிருக்கிறது. 'ஆடுகளம்' படத்திற்கு பிறகு சிம்புவை வைத்து வடசென்னை என்ற படத்தை இயக்கு வதாகக் கூறினார் வெற்றிமாறன். ஆனால் சில காரணத்தினால் அப்படம் நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. இந்தநிலையில் மீண்டும் 3 ஆவது முறையாக தனுஷுடன் இணைந்து பணியாற்றவுள்ளார் இயக்குநர் வெற்றிமாறன். இன்னும் பெயரிடப்படாத இந்தப்படத்தைத் தயாநிதி அழகிரி தயாரிக்கிறார். இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக 'வழக்கு எண்' மனிஷா யாதவ் நடிக்கவுள்ளார். அடுத்த ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கும் இப்படத்தின் திரைக்கதையை அமைக்கும் பணி தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. மேலும் இப் படத்தைப் பற்றிய ஏனைய தகவல்கள் டிசெம்பரில் அறிவிக்கப்படுமாம்.

ஏற்கெனவே தனுஷ் - வெற்றிமாறன் கூட்டணியில் வெளியான 'பொல்லாதவன்', 'ஆடுகளம்' ஆகிய படங்கள் இரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றவை என்பது குறிப்பிடத்தக்கது.

# வீரத்துடன் மோதுமா



அஜித்தின் நட்பைப் பெரிதாக மதிப்பதால் 'வீரம்' ப
படத்தை மோதவிட விரும்பவில்லையாம் வெங்கட் பி
'மங்காத்தா'வை தொடர்ந்து வெங்கட் பிரபு கார்த்தி
'பிரியாணி'.'மங்காத்தா' படப்பிடிப்பின்போது அஜி
யாணி சமைத்து பரிமாறியதால் என்னவோ வெங்கட்
அதுவே பெயராகிவிட்டது. 'பிரியாணி' ரம்லானுக்கே
பட்டது. ஆனால் ரம்லானுக்கு வர வேண்டிய 'பிரிய
யாகுமென்று தெரியவில்லை. அஜித்தின் 'வீரம்' ம
படங்கள் பொங்கல் ஜல்லிகட்டில் களமிறங்குகின்றன
படம் பொங்கலுக்கு வெளியாகுமா என்ற கேள்விகள்
ஏனெனில் அஜித்தின் நட்பால் 'பிரியாணி' யை வீர
வில்லையாம் வெங்கட்பிரபு. ஆனால் படக்குழுவே
கலுக்கு வெளியிட வேண்டும் என்ற தீர்மா[illegible]தில் உ

# வைகைப் புயலின் வரவு

மீண்டும் அசத்தலாக தமிழ் சினிமாவில் தனது அடுத்த இன்னிங்ஸை ஆரம்பிக்கிறார் நகைச்சுவைப் புயல் வடிவேலு. விஜய்யுடன் நடித்த 'காவலன்' படத்துக்குப் பிறகு வேறு புதிய படங்களில் நடிக்கவில்லை. அதற்குப் பிறகு வெளியான 'மம்பட்டியான்', 'மறுபடியும் ஒரு காதல்' போன்றவை அவர் நீண்ட நாள்களுக்கு முன்பு ஒப்புக் கொண்டு நடித்தவை.

எனவே கிட்டத்தட்ட 3 ஆண்டுகள் இடைவெளிவிட்டு 'நஜகஜ்ஜால புஜபல தெனாலிராமன்' படத்தில் நடிக்கிறார் வடிவேலு.

'போட்டா போட்டி' என்ற படத்தை இயக்கிய யுவராஜ் இப்படத்தை இயக்குகிறார். கல்பாத்தி அகோரம் பிரமாண்ட முறையில் தயாரிக்கிறார். படத்தில் இவருக்கு ஜோடியாக நடிக்கிறார் மீனாட்சி தீக்ஷித்.இப்படத்தில் வடிவேலுவின் நகைச்சுவைப் படங்களை முதல் முறையாக பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளார் வடிவேலுவின் மக்கள் தொடர்பு அதிகாரி.

# கலக்கும் ஸ்ரேயா



'ஜில்லா' படத்திற்காக ஸ்ரேயா கோஷ
ஒன்றைப் பாடியுள்ளார் விஜய். சூப்பர் குட்
தயாரிக்கும் இந்தப் படத்தில் விஜய்க்கு ஜே
நடிக்கிறார்.துப்பாக்கிக்காக 'கூகுள்
'வாங்கண்ணா வணக்கங்கண்ணா' பாடல்கள
அடுத்து ஜில்லாவுக்காகவும் ஒரு பாட
இணைந்து பாடியுள்ளார். இந்தப் பாட
எழுதியிருக்கிறார்.டி.இமான் இசை அ
படப்பிடிப்பு தற்போது விறுவிற
அறிமுக இயக்குநர் நேசன் இயக்கி வரும் இ

# சமந்தாவின் வைர மோதிரம்

சமீபகாலமாக இடது கை விரலில் அழகிய வைர மோதிரத்துடன் வளைய வருகிறாராம் சமந்தா.'பாணா காத்தாடியில்' அறிமுகமாகி இன்று வரை இரசிகர்களின் மனதில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்துக்கொண்டுள்ளார் சமந்தா.இடையில் சித்தார்த்துடன் காதல், இரகசியத் திருமணம் என்று செய்திகள் வந்தாலும் அவற்றையெல்லாம் காதில் போட்டுக்கொள்ளாமல் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக வலம் வருகின்றார்.

தற்போது தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் கொடி கட்டி பறந்து வரும் இவர் சமீபகாலமாக அழகிய மோதிரம் ஒன்றைத் தனது இடது கையில் அணிந்துள்ளாராம்.ஆனால் மோதிரம் பற்றி கேள்வி எழுப்பினால் மௌனமொழி புரிகிறாராம்.நிச்சயமாக அது குடும்ப உறுப்பினர்கள் கொடுத்த அன்பளிப்பாக இராது என்றும், ஒருவேளை அன்புக் காதலரின் காதல் பரிசாகவோ அல்லது நிச்சயதார்த்த மோதிரமாகவோ இருக்கலாம் எனவும் தகவல்கள் பரவி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சுடர் ஒளி / 30, ஒக்ரோபர் - 05 நவ

சய்து
நலில்
டது.
தரை
கோடி
டது.
டாகப்
க்கும்
ஒரு
விலை
தை
யா.



## ஹன்சிகாவின் ஹீரோ

தெலுங்கில் புதுப்படம் ஒன்றில் நடிக்கத் தயாராகியுள்ளார் ஹன்சிகா மோத்வானி.

ஹன்சிகாவைப் பொறுத்த வரையில் 2013 அமர்க்களமான ஆண்டு என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் 'ஒரு கல் ஒரு கண்ணாடி', 'தீயா வேலை செய்யணும் குமாரு', 'சிங்கம் 2' என வரிசையாக வெற்றிப் படங்களை கொடுத்து வந்தவர் இப்போது தெலுங்கிலும் தீவிரமாக நடிக்கத் தொடங்கிவிட்டார். தெலுங்கின் முன்னணி நடிகர் ரவிதேஜாவுடன் ஒரு படத்தில் ஜோடி சேர்ந்துள்ளார்.

இந்தப் படத்தை ரவிதேஜா நடித்த பலுபு, டான் சீனு, மிஸ்டர் பெர்ஃபெக்ட் படங்களுக்கு கதை எழுதிய கே.எஸ்.ரவீந்திரா என்கிற பாபி இயக்குகிறார். பிரமாண்ட தயாரிப்பாக உருவாக இருக்கும் இந்தப் படத்தை வை.வி.எஸ்.சௌத்ரி தயாரிக்கிறார். இன்னும் பெயரிடப்படாத இந்தப் படத்தின் படப்பிடிப்பு நவம்பரில் தொடங்கவுள்ளது.

உரு
தை
த்தி
ந்து
பாதி
தவ
ஷய
றிய
ரம்'
டு.





## ...ரமா பிரியாணி?

'வீரம்' படத்துடன் தனது 'பிரியாணி'
வங்கட் பிரபு.
கார்த்தியை வைத்து இயக்கும் படம்
ாது அஜித், படக்குழுவினருக்கு பிரி
வெங்கட் பிரபுவின் அடுத்த படத்திற்கு
லானுக்கே வரும் என்று எதிர்பார்க்கப்
ய 'பிரியாணி' தீபாவளியிலும் வெளி
'வீரம்' மற்றும் விஜய் யின் 'ஜில்லா'
துகின்றன.இந்தநிலையில் 'பிரியாணி'
கள்விகள் எழுந்த வண்ணம் உள் என.
' யை வீரத்துடன் மோதவிட விரும்ப
டக்குழுவோ பிரியாணியைப் பொங்
தில் உ...தாம்.

## ...ரேயா கோஷல்

ரயா கோஷலுடன் இணைந்து பாடல்
சூப்பர் குட் பிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரி
ஜய்க்கு ஜோடியாக காஜல் அகர்வால்
க 'கூகுள் கூகுள்', தலைவாவுக்காக
பாடல்களைப் பாடி அசத்திய விஜய்
ஒரு பாடலை, ஸ்ரேயா கோஷலுடன்
இந்தப் பாடலை கவியரசு வைரமுத்து
இசை அமைக்கும் இந்தப் படத்தின்
து விறுவிறுப்பாக நடந்து வருகிறது.
வரும் இந்தப் படம் தைப் பொங்கல்
அன்று வெளியாகவுள்ளது.



## மீண்டும் விஷால் - லட்சுமி மேனன்

'பாண்டிய நாடு படத்தில்' இணைந்து நடித்த விஷாலும், லட்சுமி மேனனும் அடுத்த படத்திலும் ஜோடி சேரவுள்ளனர்.

சுசீந்திரன் இயக்கத்தில் விஷால், லட்சுமி மேனன் நடித்துள்ள திரைப்படம் 'பாண்டிய நாடு'. வருகின்ற தீபாவளி 'சரவெடி'யில் வெடிப்பதற்கு தயாராகவுள்ள இப்படத்தில் இவர்களின் நடிப்பு நன்றாக அமைந்ததால் மீண்டும் ஜோடி சேர்ந்துள்ளனர். 'தீராத விளையாட்டுப்பிள்ளை', சமர் என விஷாலை வைத்து இரண்டு படங்களை இயக்கிய இயக்குநரான திரு தான் இந்தப் படத்தையும் இயக்க இருக்கிறார். இந்தப் படத்தை விஷால் தனது சொந்த நிறுவனத்தின் மூலம் தயாரிக்கவுள்ளார்.




## விடைபெற்றார் ரிச்சா

தமிழில் 'மயக்கம் என்ன' படத்தில் தனுஷுக்கு ஜோடியாக அறிமுகமானவர் ரிச்சா. தொடர்ந்து சிம்புவுக்கு ஜோடியாக 'ஒஸ்தி' படத்தில் நடித்தார். இரண்டுமே பெரிய இயக்குநர்கள், முன்னணி நடிகர்களின் படங்கள்தான். ஆனால் அந்தப்படங்கள் கைகொடுக்கவில்லை. கூடவே இரசிகர்களும் ரிச்சாவுக்கு ஆதரவுக்கரம் நீட்டவில்லை. தெலுங்கில் இந்த வருடம் அவர் நடித்துள்ள ஒரே படம் 'பாய்'. இந் நிலையில், ரிச்சா தானாகவே முன்வந்து சினிமாவை விட்டு விலகுவதாக அறிவித்திருப்பது கொஞ்சம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதுகுறித்து அவர் கூறுகையில், நான் சினிமாவை விட்டு விலகுவது பலருக்கு அதிர்ச்சி அளிக்கும் என்று எனக்குத்தெரியும். ஆனால் நடிப்பா, படிப்பா என்ற கேள்வி வரும்போது என் எதிர்கால வாழ்க்கையை தீர்மானிக்கும் படிப்புதான் முக்கியம் என தோன்றுகிறது.அதனால் இடையில் நிறுத்திய படிப்பைத் தொடர அமெரிக்கா செல்கிறேன். எனது பெற்றோர்கள், நண்பர்களுடன் எனது பழைய வாழ்க்கையை ஆரம்பிக்க இருக்கிறேன் - எனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் உண்மை போல் இருக்கும் தகவல்கள் வழமையாக நம்பத் தகுந்தனவாக இருப்பதில்லை!



## ரூ.30,000 மட்டுமே கொண்டு உலகளவில் பிரசித்தி பெற்ற நிறுவனத்துடன் இணைந்து மேலும் பணம் சம்பாதிக்கக் கூடிய அரிய வாய்ப்பு!

வீட்டிலிருந்து கொண்டே உங்கள் வசதிப்படி வேலை செய்து மாதமொன்றிற்கு ரூ.25,000 க்கு மேலான பணத்தைச் சம்பாதிக்கலாம்.

வேலை விபரம்: உலகளவில் பிரசித்த பெற்ற நிறுவனம் ஒன்றில் ஒரு தொகையான பிரத்தியேகப் பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வதற்காக அனுமதிக்கப்பட்ட பிரதிநிதி.

தகைமைகள்: க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் 3 பாடங்களில் சாதாரண சித்தி. வேலை முன் அனுபவம் தேவையில்லை.

பொருட்களின் விற்பனையை விருத்தி செய்வது மற்றும் இந்த பிரத்தியேக நிறுவனத்துடன் இணைய உங்கள் நண்பர்களை அறிமுகப்படுத்துதல் மூலமாக நீங்கள் மேலும் சம்பாதிக்க முடியும்.

மேற்கூறப்பட்ட தகவல் ஒரு உதாரணமாகும்!
பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்கள் பல வடிவங்களில் உங்கள் வழியில் வரலாம்.

**அவை உங்களை ஏமாற்றுபவை மட்டுமல்ல அவை உங்கள் குடும்பங்களின் மகிழ்ச்சி மற்றும் நிம்மதியையும் அழிக்கின்றன! நன்மையான மற்றும் பாதுகாப்பான வாய்ப்புக்களைத் தெரிந்தெடுத்து கஷ்டப்பட்டுச் சம்பாதித்த உங்கள் பணத்தைப் பாதுகாருங்கள்!**

### பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களின் அடிப்படை அம்சங்கள் உள்ளடக்குபவை

- பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பொழுது அல்லது பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரிக்கும் பொழுது உயர்ந்தவொரு வருமானம் கிடைக்கும் என உறுதிமொழி வழங்குதல்.
- நம்பமுடியாத உயர் வருமானங்கள் மற்றும் ஏனைய நன்மைகள் பற்றிய தவறான உறுதிமொழிகளை அடிக்கடி மேற்கொள்ளுதல்.
- திட்டத்தின் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களுக்குத் திடமான சந்தைக் கேள்வியோ மற்றும் இரண்டாந்தரச் சந்தையோ இல்லாதிருத்தல்.
- பொருட்களுக்கு உத்தரவாதங்களோ அல்லது விற்பனைக்குப் பிந்திய பணிகளோ வழங்கப்படுவதில்லை.
- திட்டத்திலிருந்தான வருமானம் பங்குபற்றுபவரின் விற்பனை அளவைப் பொறுத்தில்லாமல் அவன்/ அவள் கொண்டுவரும் புதிய பங்குபற்றுநர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வேறுபடுதல்.
- பொதுவாக உயர்ந்த நுழைவுக் கட்டணத்தைக் கொண்டிருத்தல்.
- பங்குபற்றுநர் ஒருவர் திட்டத்திலிருந்து விலகிச் செல்லும் போது விற்பனை செய்யப்படாத மிகுதிப் பொருட்களை மீண்டும் வாங்கும் கொள்கை இல்லாதிருத்தல்.
- பொருட்களை விற்பனை செய்வதில் சிறிதளவு கவனத்தைக் கொண்டிருப்பதுடன் மேலும் புதிய பங்குபற்றுநர்களைச் சேர்ப்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருத்தல்.
- மிகுந்த வருமானம் கொண்ட பேரம்பேசுதல் மூலம் புதிய பங்குபற்றுநர்களை அவசரமாகத் திட்டத்தில் சேர்ப்பதுடன் பங்குபற்றுநர்களை இரண்டாந்தரம் சிந்திப்பதற்குக் கால அவகாசம் வழங்காமல் இருத்தல்.
- திட்டத்தில் சேருவதற்கான வழமையான அழைப்பு, சிறிதளவு அல்லது முன்அனுபவம் அற்ற அல்லது தகைமைகள் தேவைப்படாத இலகுவானதொரு வேலையாக இருத்தல்.
- பொதுவாகத் திட்டத்தில் சேருவதற்கான கோரிக்கையைப் பெருமளவு உதாசீனம் செய்யமுடியாத நம்பிக்கையுள்ள ஒரு நண்பன் அல்லது குடும்ப அங்கத்தவர் ஒருவர் தான் உங்களைத் திட்டத்தில் இணைப்பதற்கு முயற்சி செய்பவராக இருத்தல்.
- திட்டம் தொடர்பான தகவல்கள், அதன் இருப்பிடம், தொடர்பு கொள்ளும் விபரங்கள் என்பவற்றைப் பொதுவாக அடையமுடியாதிருத்தல்.

குறிப்பு: பிரமிட் கட்டமைப்புக்களைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டங்களைத் தொடங்குதல் மற்றும் பங்குபற்றுதல் என்பன சட்ட விரோதமானதாகும். ஒருவர் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் கடூழியச் சிறைத்தண்டனை மற்றும்/ அல்லது அபராதம் என்பவற்றிற்கு உட்படுத்தப்படுவார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 2477100, 2477120, 2477129, 2398539 தொலைநகல்: 2477711
மின்னஞ்சல்: banksup@cbsl.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தைகளின் பதற்றம்

எதற்கும் அடம் பிடிக்கும் குழந்தைகள். கேட்டது கிடைக்காவிட்டால் மனஅழுத்தத்துக்கு ஆளாகிறார்கள். 6, 7 வயதிலேயே, 'நான் ரென்ஷனாக இருக்கின்றேன்' என்று சொல்லி மிரள வைக்கிறார்கள். இதற்குத் தீர்வு காண்பது எப்படி? குழந்தைகளை மனஅழுத்தத்தில் இருந்து பாதுகாப்பது எப்படி?

தாங்கள் சொல்வதை குழந்தை அப்படியே கேட்க வேண்டும் என பெற்றோர் நினைப்பது தவறு. அடித்து துன்புறுத்துதல், குழந்தைகளிடம் பாரபட்சம் காட்டுதல், பள்ளியில் அதிக பாடச்சுமை உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குழந்தைகளை உளவியல் சிக்கலுக்கு ஆளாக்குகிறது. இதன் விளைவாகச் சில குழந்தைகள் வழக்கத்துக்கு மாறாக அமைதியாகி விடுகின்றனர்.

சில குழந்தைகளிடம் அடம் பிடித்தல், எதிர்த்து பேசுதல், பெரியவர்களை மதிக்காமல் நடத்தல் போன்ற மாற்றங்களைப் பார்க்க முடியும். அடுத்த கட்டமாக திருடுதல், பொய் சொல்லுதல் மற்றும் கொலை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடவும் வாய்ப்புள்ளது. உளவியல் சிக்கல் காரணமாக குழந்தைகளின் கற்றல் திறன் பாதிக்கப்படும். சரியாகச் சாப்பிடாத காரணத்தால் சத்துக் குறைபாடு, நோய் எதிர்ப்புச் சக்தி குறைதல் மற்றும் சோர்வும் காணப்படும். தூக்கம் வராமல் தவித்தல், கெட்ட கனவுகள், படுக்கையில் சிறுநீர் கழித்தல் ஆகியவையும் உண்டாகும். இவை மனஅழுத்தம், பதற்றத்தை குழந்தைகளிடம் ஏற்படுத்தும்.

பெற்றோர்தான் அவர்களின் முன்மாதிரி. அவர்கள் தங்களுக்குள் பிரச்சினை வரும் போது குழந்தைகளையே நீதிபதியாக்கித் தீர்வு கேட்கலாம். நமது பிள்ளைகளை எந்தளவு மதிக்கிறோம் என்பதை உணர்த்த இது ஒரு வழி. சுதந்திரமான சூழல் வீட்டில் நிலவினால் அவர்களும் தங்களது விருப்பம், பிரச்னைகளைத் தயக்கம் இன்றி பெற்றோரிடம் சொல்வார்கள். இந்த முறையில் குழந்தைகளுக்கு ஏற்படும் சின்ன சின்ன டென்ஷன்களை எளிதில் சரி செய்து விடலாம். பெற்றோர் தங்களது விருப்பத்தை குழந்தைகள் மீது திணிப்பது குறைவு. வீட்டிலும், பள்ளியிலும் மன அழுத்தத்தை சந்திப்பதன் காரணமாக அவர்கள் கற்றல் திறன் குறைகிறது. எனவே முறையான உளவள ஆலோசனை மற்றும் நடத்தை மாற்றங்கள் மட்டுமே இதற்கு சரியான தீர்வாக அமையும்.

## புதுயுகத்தைத் தேடி......

மகளிர் பக்கம்

தொகுப்பு: ஸ்ருதி

# இளம் ரென்னிஸ் வீராங்கனை அசரென்கா

மகளிர் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனையாக அசத்தி வருகிறார். பெலாரஸ் நாட்டை சேர்ந்த இவர், அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ், ரஷ்யாவின் மரியா ஷரபோவா, குவித்தோவா (செக்.) ஆகியோரின் கடும் போட்டியை சமாளித்து முன்னீலையில் நீடித்து வருகிறார். இந்த ஆண்டு 4 கிராண்ட் ஸ்லாம் போட்டிகளிலும் சம்பியன் பட்டம் வென்று சாதனை படைப்பார் என்ற எதிர்பார்ப்பும் உள்ளது.

அசரென்கா இரண்டு கலப்பு இரட்டையர் பெருவெற்றித் தொடர் பட்டங்களைப் பெற்றுள்ளார். 2007 ஆம் ஆண்டில் யு .எஸ்.ஓப்பனில் மாக்ஸ் மிர்ன்யியுடனும் 2008 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓப்பனில் பாப் பிரியனுடனும் இந்த வெற்றிகளைப் பெற்றுள்ளார். 2012ஆம் ஆண்டு ஆஸ்திரேலிய ஓப்பனில் இறுதியாட்டத்தில் மரியா சரப்போவாவை 6:3, 6:0 என்ற நேர்சுற்றில் வென்று பெருவெற்றித் தொடர் ஒன்றில் தனது முதலாவது வெற்றியைப் பெற்றுள்ளார். இந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றதன் மூலம் இவர் டென்னிஸ் பெண்களுக்கான உலகத் தர வரிசையில் முதலாம் இடத்தைப் பிடித்துள்ளார். 2013ம் ஆண்டும் இவர் ஆஸ்திரேலிய ஓப்பனை வென்றார்.

ஜூலை மாதம் 31ஆம் திகதி 1989ஆம் ஆண்டு பிறந்த இவர் தனது 15 வயதில் பயிற்சிக்காக மின்ஸ்க், பெலாருஸ் இல் இருந்து ஸ்காட்ஸ்டேல், அரிசோனா, அமெரிக்காவுக்கு சென்றார். இங்கு அவருக்கு அவரது அம்மாவின் ஒரு நண்பர் தேசிய ஹாக்கி லீக் பந்து தடுப்பாளரான நிகோலாய் காபி புலின் மற்றும் அவரது மனைவி மூலம் உதவி கிடைத்தது. 2012 ஆம் ஆண்டு அவர் மொனாக்கோ சென்றார். பின் னர் 2013 ஆகஸ்ட் மாதம் அவர் லாஸ் ஏஞ்சல்ஸ், கலிபோர்னியா வில் ஒரு புதிய வீட்டை வாங்கினார். அசரென்கா பெலாரஷ்யன், ரஷியன், மற்றும் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசக் கூடியவர்களாவர் மற்றும் பிரெஞ்சு மற்றும் உக்ரேனிய மொழி யிலும் ஓரளவு பேசுவார். விளையாட்டில் அசரென்காவின் தொடர்ச்சியான முன்னேற்றங்கள் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.



# பெண்களும் உரிமைகளும்

கல்வி நிலையங்களில், அரசு அலுவலகங்கள், வங்கிகள், வாழ்நாள் காப்பீட்டுக் கழகங்களில், கனரகத் தொழில் அல்லாத தொழிற்சாலைகளில், சிறுதொழில் நிறுவனங்களில், நவீனத் தொழில் நுட்பத் துறைகளில் பெண்கள் கணிசமான அளவு பணிபுரிந்து வருகிறார்கள். காவல்துறையில் சாதாரண காவலர் பதவியிலிருந்து உயர் பதவி வரையிலும் பெண்கள் பணியாற்றுகிறார்கள். போக்கு வரத்துத் துறையிலும் நடத்துநராக, ஓட்டுநராக அடியெடுத்து வைத்துள்ளார்கள்.

இப்படிப் பல துறைகளிலும் பெண்கள் பணியாற்றத் தற்போது தடையேதும் இல்லை என்பதோடு, விதிவிலக்காகச் சில நிறுவனங்கள் நீங்கலாக இதர தனியார் நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள் ஆகிய அனைத்திலும் சம வேலைக்குச் சம ஊதியம் என்பது உறுதி செய்யப்பட்டு, ஒரே நிலையில் பணிபுரியும் ஆணுக்கும், பெண்ணுக்கும் ஒரே மாதிரியான ஊதியம் மற்றும் உரிமைகள், சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

இருந்தும், இன்றும் சமூகத்தில் பெண்கள் குறித்த கருத்து நிலை யில் மட்டும் பெரிய மாற்றம் ஏதும் நிகழ்ந்து விடவில்லை. இன்னமும் மணக் கொடை கொடுமைகள், பெண் சிசுக் கொலைகள், பெண்களுக்கு பாலியல் வன்முறைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. குடும்ப வேலைகள் அனைத்தும் பெண்கள் மீதே சுமத்தப்படு கின்றன. அளவான குடும்பத்துக்குப் பெரும்பாலும் பெண்களே கருத்தடை நடவடிக்கைகளுக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். புதிய கருத்தடை சோதனை முயற்சிகளும் பெரும்பாலும் பெண்கள் மீதே நிகழ்த்தப்படுகின்றன. குடும்பத்தில் ஆணின் அதிகாரமே மேலோங்கி இருக்கிறது. குடும்ப நிர்வாகம் மற்றும் அது சார்ந்த முடிவுகள் அனைத்தும் ஆண்களாலேயே, ஆணை மையப்படுத்தியே தீர்மானிக்கப் படுகின்றன. இவ்வாறு, எந்த ஒரு செயலிலும் பெண் அடிமைப் படுத்தப்படுகிறாள். பெண்களின் சமூகத் தகுநிலை தாழ்ந்தே கிடக்கிறது. பெண்ணை இரண்டாந்தரக் குடியாகக் கருதும் போக்கே இன்னமும் தொடர்கிறது.

அதாவது, பெண்கள் எல்லா நிலைகளிலும் ஆண்களுக்கு நிகராகப் பணி புரிந்தும் ஆண்களுக்கு நிகராகப் பொருளீட்டியும் வந்த போதிலும், குடும்பத்தில், சமூக நிலையில், பொது வாழ்வில் இன்னமும் ஆண்களுக்கு நிகரான சமத்துவம், உரிமைகள் வழங்கப்படாத, பெறப் படாத நிலையே நீடித்து வருகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சூதாட்டத்தில் இலங்கை



—ஹரன்



மக்களை வெளிநாடுகளுக்கு விற்று தன் பொக்கெற்றை நிரப்புவதையே மஹிந்த அரசு தனது பிரதான வேலைத்திட்டமாக அரசு முன்னெடுத்து வருகின்றது. உலகிலேயே அதிக அமைச்சர்களைக் கொண்ட நாடாக கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் பதிவு செய்யப்படுமளவுக்கு அது ஊழல்களாலும் தேவையற்ற செலவீனங்களாலும் வீங்கிப் பெருத்துப் போயுள்ளது. இத்தகைய கண்மூடித்தனமான செலவுகளால் வெறுமையாகிப் போன கஜானாவை நிரப்ப பல்வேறு கீழ்த்தரமான செயற்பாடுகளில் மறைமுகமாகவும் நேரடியாகவும் இறங்கவும் இலங்கை அரசு தயாராகவேயிருக்கிறது.

வாழ்க்கைச்செலவு அதிகரிப்பாலும் அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வாலும் ஏழைகள் வாழ முடியாத தேசமாக மாறியிருக்கிறது இலங்கை. இத்தகைய திருநாட்டில் பணக்காரர்களுக்கும் சுற்றுலாப் பயணிகளுக்கும் இலங்கையின் வளங்களை சுரண்டிக் கொடுக்கும் வேலையை நமது அரசு கச்சிதமாகச் செய்துகொண்டிருக்கிறது. பூகோள அரசியல் நடத்தும் கண்கொத்திப் பாம்புகளான வெளிநாடுகளும் நாட்டைத் தாரைவார்க்கும் செயற்பாடுகளில் அரசு முனைப்போடு இறங்கியிருக்கிறது. தனியார் பல்கலைக்கழகங்களை உருவாக்கி இலவசக் கல்விக்கு சாவுமணி அடித்த அதிகாரம், தற்போது களியாட்டங்களையும் சூதாட்டங்களையும் சட்ட பூர்வமாக அங்கீகரித்து கல்லாவை நிரப்பும் நடவடிக்கையிலும், தனது வங்குரோத்து நிலைகளை மூடிமறைக்கும் செயற்பாடுகளிலும் குதித்துள்ளது.

வெளிநாட்டு விமானக்கொள்வனவு தொடக்கம் உள்நாட்டு அரிசி ஏற்றுமதி வரை ஊழல்களிலும் கைதேர்ந்த கூட்டாளிகளை கைவசம் வைத்துக் கொண்டு எப்படி நாட்டை அபிவிருத்தி செய்யலாம் என்று விளக்கம் கொடுக்கிறது அரசு. " படிப்பது தேவாரம் இடிப்பது சிவன் கோயில்" என்ற கதையாக சொல்வது ஒன்று செய்வது இன்னொன்றாகவே இருக்கிறது.

தற்போது மிகப்பெரும் சர்ச்சையலைகளை இலங்கைத் தேசத்தில் ஏற்படுத்தியிருக்கிறது கஸினோ விவகாரம். கிரவுண் கஸினோ நிறுவனத்தின் ஏற்பாட்டில் கொழும்பில் டி.ஜே.விஜயவர்த்தன மாவத்தையில் அமையவிருக்கும் 194 அறைகளையும் பல்வேறு சூதாட்ட விளையாட்டுக் கூடங்களையும் தன்னகத்தே கொண்டதுமான கஸினோ சூதாட்ட விடுதியால் இலங்கையே கொதித்துப்போயிருக்கிறது. இந்த கஸினோ சூதாட்ட மையத்திற்கான வரிவிலக்கு, சட்ட அங்கீகாரம் ஆகியவற்றை தங்கள் கைகளாலேயே பெற்றுக்கொடுத்த பெருமையைப் பெருமையை அடைவதற்கும் சூதாட்ட உருவாக்கத்திற்காகவும் துடியாகத் துடிக்கின்றனர் மஹிந்த வாதிகள். அமைச்சர் மஹிந்தயாப்ப அபேவர்த்தன தொடக்கம் உயர்கல்வி அமைச்சர் எஸ். பி.திஸநாயக்க வரை அமைச்சரவை குழு ஒன்றே இதற்கான நேரடியாக விளம்பர வேலைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிகிறது.

கஸினோக்களின் உருவாக்கத்தின்மூலம் அந்நியச் செலாவணியைப் பெறலாம், சுற்றுலாத்துறையை மேம்படுத்தலாம். ஒன்றரை மில்லியனாகவுள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அடுத்த ஆண்டு இரண்டரை மில்லியனாக அதிகரிக்கலாம். இவ்வாறு பல கதைகளைக் கூறிப் பொருளாதார வறட்சியில் தாகமெடுக்கும் மக்களுக்கு கானல்நீரினைப் போன்ற வெளித்தோற்றத்தை காட்டி நம்ப வைக்கும் செயற்பாடுகளில் அமைச்சரவைக் குழு சூதாட்டத்துக்கு ஆதரவு தேடும் முயற்சியில் நேரடியாகவே இறங்கியிருக்கிறது.

நாட்டில் என்ன செய்வதென்றாலும் பௌத்த பீடங்களுக்குச் சென்று ஆசீர்வாதமும் ஆணையும் பெற்றே தங்கள் செயற்பாடுகளை முன்னெடுப்பது அதிகாரபீடத்தின் மரபு. ஆனால் கஸினோ உருவாக்கத்தில் மட்டும் மதத் தலைவர்களின் கோரிக்கைகளையும் ஆலோசனைகளையும் முற்றாகப் புறந்தள்ளி எப்படியும் கஸினோ மையங்களை இலங்கையில் அமைத்தே தீருவது என்ற கொள்கையில் உடும்புப் பிடியாக விடாப்பிடியாக நிற்கிறது அரசு.

சீனாவின் மெக்கோவ தீவு ஆஸ்திரேலியாவின் மெல்பேர்ண் மற்றும் பேர்த் நகரங்களில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள இந்த கஸினோ சூதாட்ட மையத்தை இலங்கையில் நிறுவுவது ஜேம்ஸ் பார்க்கருக்கு வேண்டுமானால் நன்மையளிக்கக்கூடும். ஆனால் இலங்கை அரசிற்கு அதனால் என்ன நன்மை வந்துவிடப்போகிறது என்பது தான் விடை காண முடியாத கேள்வி. போதைப் பொருள் வர்த்தகம் தொடக்கம் சாதாரண சிகரட் விற்பனை வரை எல்லாவற்றுக்குமான விற்பனைகள் வரிகளை இலக்காகக் கொண்டே இலங்கையில் நடத்தப்பட்டு வருகின்றன. இந்நிலையில் எந்தவித வரிகளும் கிடைக்காது என அரச அமைச்சரே முரசறிவித்து தெரிவிக்கும் போது கஸினோவை இலங்கையில் நிறுவுவதால் இலங்கைக்கு என்ன நன்மை ஏற்படப்போகிறது என்ற கேள்வி தவிர்க்கமுடியாமல் எழுகின்றது.

இலங்கையின் சட்ட அமைப்புகளின்படி இத்தகைய களியாட்டங்களும் இலங்கையில் முற்றாகத் தடைசெய்யப்பட்ட விடயங்கள். களியாட்டங்களில் ஈடுபட்டார்கள் என்று பலர் தற்போது சிறைவாசத்தையும் அனுபவித்து வருகின்றனர். விடுதிகள், மசாஜ் சென்ரர்கள் என்ற பெயரில் நடத்தப்பட்ட பல விடுதிகள் உண்மையில் விபசார விடுதிகளாக இயங்கியமை கண்டுபிடிக்கப்பட்டு சீல் வைக்கப்படும் சம்பவங்கள் இலங்கையின் மூலை முடுக்கெங்கும் இடம்பெற்று வருகின்றன.

இத்தகைய சூழமைவில் சூதாட்ட விடுதிகளுக்கும் களியாட்ட மையங்களுக்கும் சட்ட அங்கீகாரத்தையும் வரிவிலக்கலையும் வழங்குவது நாட்டை குட்டிச்சுவராக்குவதற்கு ஒப்பானது. எதிர்காலத்தில் அந்நியச் செலாவணியை அதிகரிக்கவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்வதற்கும் விபசாரத்துக்குக்கூட சட்டபூர்வ அங்கீகாரத்தையும் வரிவிலக்கையும் அளித்து, வீதிகள் தோறும் விபசார விடுதிகளைத் திறந்தாலும் ஆச்சரியப்பட முடியாது. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும். இப்போது பிணம் மட்டுமல்ல பிணந்தின்னிகளும் பணத்துக்காக எதுவும் செய்யத் தயாராகிவிட்டதையே சூதாட்டச் சட்டம் சொல்லி நிற்கிறது. இந்தச் சூதாட்ட மைய உருவாக்கத்தை நியாயப்படுத்தியிருப்போர் பட்டியலில் முன்னணியில் திகழ்கிறார் இலங்கையின் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க.

“அமெரிக்காவில் நானும் இத்தகைய கஸினோ விடுதிக்கு சென்று சூதாடியுள்ளேன். அப்போது எனக்கு இரண்டு டொலர் மட்டுமே செலவாகியது. எனவே இந்த கஸினோ விடுதிகளால் நாட்டுக்கு ஆபத்து என்ற செய்திகளில் எந்த உண்மையும் இல்லை" என்று அவர் சூதாட்ட விடுதிகளுக்கு விளம்பரம்செய்கிறார். அத்துடன் இத்தகைய விளையாட்டுக்களில் வெளிநாட்டுச் சுற்றுலாப்பயணிகளை தவிர இலங்கையர் யாரும் கலந்து கொள்ளக்கூடாது என சட்டம் வந்தால் அது நன்மையளிக்கும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்திருக்கிறார். என்றாலும் உண்மையில் சூதாட்டத்தில் ஈடுபடப்போவது இலங்கை திருநாட்டின் பிரஜைகளே. இது அதிகம் பாதிப்பை ஏற்படுத்தப்போவது இலங்கையின் கலாசார விழுமியக் கட்டமைப்புக்களில்தான் என்பதை அமைச்சர் அறியாமல் கதைக்கிறார். இருவரின்சம்மதத்துடனேவிடுதிகளில்ஆணும் பெண்ணும் தங்கியிருப்பது விபசாரம் ஆகாது என விபசாரத்துக்கு வியாக்கியானம் கொடுக்கும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களை கைவசம் வைத்திருக்கும் இந்த அரசில் அமைச்சரவையில் இத்தகைய வெட்டித்தனமான பேச்சுக்கள் யதார்த்தத்துக்குஒவ்வாதவையே.

இலங்கையில் அப்பாவி மக்களின் வாழ்க்கைச் செலவுகள் பலமடங்காக அதிகரித்து இருக்கின்றன. தண்ணீர் தொடக்கம் எரிபொருள் வரை எல்லாவற்றுக்கும் போராட்டம் நடத்தியே மக்கள் எல்லாவற்றையும் பெற்றுக்கொள்ள வேண்டிய யதார்த்த சூழலில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இலங்கையின் வடக்கு கிழக்கில் போருக்குப் பின்னரான மீள்கட்டுமானத்துக்கு நிதியில்லை என கைவிரிக்கும் வங்குரோத்து நிலையில் இலங்கை அரசு பயணித்துக் கொண்டிருக்கிறது. வாழ்க்கைச் சுமை மக்களின் கழுத்தை நெரிக்கும் அளவுக்கு கொடூர நிலைமையாக மாறியிருக்கிறது. தொழில் வாய்ப்புகளைத் தேடி உயிரைப் பனயம் வைத்து ஆஸ்திரேலியாவுக்குப் போவோரின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதே நேரம் ஆஸ்திரேலியாவின் பண முதலைக்குச் சிவப்புக் கம்பளம் விரித்துக் காத்திருக்கிறது அரசு. வெளிநாடுகளிடமிருந்து பெறப்பட்ட கோடிக்கணக்கான கடன்களை வழங்கமுடியாததாலேயே இலங்கையின் அனைத்து வளங்களையும் குத்தகைக்கு விட்டு பிழைப்பு நடத்த மஹிந்த அரசு தள்ளப்பட்டு இருக்கிறது. எனினும் அதற்காக வெளிநாட்டு சுற்றுலாத்துறை அபிவிருத்திக்கான ஆடம்பர விடுதிகளும் களியாட்ட மையங்களும் தேவைதானா? இதனால் பெறப்படும் அந்நியச் செலவாணியை நாட்டின் அபிவிருத்திக்கு பயன்படுத்தலாம் என்ற நியாயப்படுத்தல்கள் இருக்கின்ற போதிலும் நாட்டின் கலாசாரம் பண்பாடு விழுமியம் என்பவற்றை சீரழித்துக் கட்டியெழுப்பப்படும் அபிவிருத்தி தேவைதானா என்ற கேள்வியை அரசு தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டும். நாட்டின் அந்நியச் செவாவாணிக்காக இந்தியாவின் மும்பை நகரில் இருப்பதை போன்று சிவப்பு விளக்குப் பகுதிகளையும் அரசு வரிவிலக்குடன் கொழும்பின் மையப்பகுதியில் நிறுவ அனுமதியளிக்கப் போகிறதா? என்பதே பலரின் கேள்வியாக இருக்கிறது. எனினும் அறம் பிழைத்து பிணம் ஆட்சி செய்யும் நாட்டில் பணத்துக்காக எதுவும் எப்போதும் நடந்தேறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளண்யன்



# இருளின் கதவைத் திறந்தவன் 24

உலகுக்கெல்லாம் ஜனநாயகம், மனித நேயம், நீதி, நியாயம் என்பன பற்றியெல்லாம் பாடம் எடுத்துவிட்டு, தான் மட்டும் பச்சிளம் பாலகர்களையும், ஊடகவியலாளர்களையும் தெரிந்தே கொன்றுவிட்டு, 'அட! அப்படியொரு சம்பவம் நடக்கவேயில்லையே!' என்று எல்லோருக்கும் நாடகமாடிக்கொண்டிருந்த அமெரிக்காவின் திரையை சமகாலக்கொலைகள் ஒளிக்காட்சிகளின் தொகுப்பு கிழித்தெறிந்தது. எந்தவித அதாரங்களுமற்று தோன்றிய அமெரிக்காவின் நிஜமுகத்தைப் பார்த்து எல்லோரும் அதிர்ந்து போயினர்.

அமெரிக்க உயரதிகாரிகளின் முகத்தில் ஈயாடவில்லை. உலகத்தின் எல்லாத்திசைகளில் இருந்தும் வருகின்ற கேள்விகளுக்கு என்ன பதிலைச் சொல்வது?' என்று தெரியாமல் அவர்கள் கையைப் பிசைந்து கொண்டார்கள். சி.ஐ.ஏயின் தலைமைப் பீடத்தில் அவசர கூட்டம் அன்று காலையில் ஒழுங்குசெய்யப்பட்டது. யூலியனைச் சரிவரக் கண்காணிக்க சி.ஐ.ஏ தவறிவிட்டது என்ற உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டு. அதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரிகள் கடுமையாகக் கண்டிக்கப்பட்டனர். நடந்ததைப்பற்றி விவாதிப்பதை விடுத்து அடுத்து என்னசெய்யவேண்டும் என நாள்முழுதும் அங்கு ஆராயப்பட்டது. 'யூலியன் தும்மினால் கூட அதுபற்றி உடனடியாக தலைமைப்பீடத்துக்கு அறிவிக்கும் வகையில்' சி.ஐ.ஏயின் சிறப்புக் கண்காணிப்பு நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டது. அத்துடன் முள்ளை முள்ளால் எடுப்பது போன்று யூலியனை அவனது வழியிலேயே சென்று வீழ்த்தவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன. இனி யூலியன் அமெரிக்காவைப்பற்றி எந்தவொரு இரகசியத்தையும் வெளியிடாமல் செய்யவேண்டும்' என்பதே அங்கு கூடியவர்களின் ஒருமித்த நோக்கமாக இருந்தது.

கலவரம் தோய்ந்த முகத்துடன் சி.ஐ.ஏ அலுவலகத்தில் விவாதம் நடந்துகொண்டிருந்த சமயத்தில் யூலியன் பாராட்டு மழையில் நனைந்து திக்குமுக்காடிக் கொண்டிருந்தான். ஒரேநாளில் அவனைத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடின ஊடகங்கள். 'எப்படி இந்த வெற்றி சாத்தியமாயிற்று?' என எல்லோரும் யூலியனைத் துளைத்தெடுத்தனர். எல்லோருக்கும் யூலியனின் புன்னகை ஒன்றே பதில். இதுநாள் வரையும் எந்த ஊடகங்கள் யூலியனை சி.ஐ.ஏயின் கையாள் என முத்திரை குத்தி, தானே ஹக்கிங் செய்து தகவல்களைக் களவாடிவிட்டு தகவலாளிகள் தந்ததாக யூலியன் கதைவிடுவதாக வாய்கிழியக் கத்தினவோ அதே ஊடகங்கள்தான் இப்போது யூலியனை வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தன. இந்தப்போற்றுதல், தூற்றுதல் எல்லாம் சிலகாலத்துக்குத்தான் என்பது அசாஞ்சேக்குத் தெரியும். புகழ்மழையில் நனைந்து கொண்டிருக்காமல் உருப்படியாக ஏதாவது செய்வோம் என நினைத்து தனக்கு வந்த பாராட்டுக்களையெல்லாம் ஒரு ஓரமாக வைத்துவிட்டு அடுத்தகட்டத் தாக்குதல் குறித்து யோசிக்கத் தொடங்கினான்.

இந்நிலையில் யூலியன் மீதான கண்காணிப்பை சி.ஐ.ஏ இறுக்கமாக்கியிருப்பதாக அவனுக்குத் தகவல் எட்டியது. என்னதான் காற்று நுழைய முடியாத கண்காணிப்பாக இருந்தாலும் அதை எப்படி உடைப்பதென்பது அவனுக்குச் சாதாரணமான விடயம் என்பதால் அந்தச் செய்தி குறித்து யூலியன் அலட்டிக்கொள்ளவில்லை. ஆனாலும் அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையும் ஆபத்தில் மாட்டிவிடும் என்பதால் தனது சகாக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு யூலியன் பணித்தான். ஜேர்மனியில் தியோடரைப் போல வேறு எவரும் மாட்டிவிடக்கூடாது என்பதற்காக தற்காலிகமாக அவர்கள் தன்னுடன் தொடர்புகொள்ள வேண்டாமெனவும் யூலியன் கூறினான்.

யூலியன் எதிர்பார்த்த திசையிலேயே சி.ஐ.ஏ நகர்ந்தது. யூலியனுக்கு நெருக்கமானவர்கள் வீடுகளில் வருமானவரிச் சோதனை என்ற பெயரில் தீவிரமான தேடுதல் நடத்தப்பட்டது. அவர்களின் கணினிகள் துடைத்து வழிக்கப்பட்டது போலத் துருவப்பட்டன. வங்கிக் கணக்குகள் மீளாய்வு செய்யப்பட்டன. தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக் கேட்கப்பட்டன. எங்கும் ஏமாற்றமே அவர்களுக்குப் பரிசானது. ஒரு துரும்புகூடக் கிடைக்கவில்லை. தேடிதேடிச் சோர்ந்து போனதுதான் மிச்சம். என்னதான் செய்தாலும் விக்கிலீக்ஸை வீழ்த்த ஒரு தடயமும் கிடைக்காது என சி.ஐ.ஏ நினைத்த வேளையில்தான் அவர்களுக்கு அதிர்ஷ்டம் கதவைத் தட்டியது.

நுணல் ஒன்று தன் வாயாலேயே மாபெரும் ஆபத்தில் வீழ்ந்தது. விக்கிலீக்ஸ"க்கு எதிரான அமெரிக்காவின் இரத்தமில்லா யுத்தத்தில் அது ஈட்டிய வரலாற்று வெற்றி. ஆனால் அந்த வெற்றி அமெரிக்காவின் உளவு நடவடிக்கைகளால் கிடைத்ததல்ல. தன்னிலை மறந்த மனிதனொருவனின் உளறலால் அமெரிக்காவின் புறப்படலையில் அடித்த' அதிர்ஷடமே அது. 2010 மே மர்தம் யூலியனின் ஆராதனைக்குரிய நாயகன் அமெரிக்காவின் வேட்டைப் பற்களுக்குள் வசமாகச் சிக்கிக் கொண்டான். அந்தத் துயரநிகழ்வு எப்படி நேர்ந்தது?

(திரைகள் இன்னும் திறக்கும்)

## ஹாய்!

### செல்லப்பா!! எழுதுவது..



அண்மைய தேர்தலில் படுதோல்வியடைந்த பக்கம் சார்ந்திருந்து, பரப்புரையும், ஊக்கமும் ஊக்கபானமும் வழங்கி வாக்காளர்களைக் கவர்ந்திழுத்த ஒருவர், வெற்றி பெற்றவர்கள் பக்கம் தற்போது சாய்ந்து விட்டார். இது பற்றி அவரிடம் சாடை மாடையாக் கேட்டபொழுது, "தான் அந்தப் பக்கம் இருந்தாற்றான் இந்தப் பக்கம் அமோகமாக வெற்றிபெற நேர்ந்ததாகத் தெரிவித்தார்.

தான் சார்ந்த பக்கத்தை வீழ்த்தவேண்டுமென்ற வீறாப்பிலேயே பலர் திரண்டு எழுந்து வந்து வாக்களித்து இந்தப் பக்கத்தை வெற்றியடையச் செய்துள்ளனர். ஆகவே இவர்களின் வெற்றியில், தமது பங்களிப்பு உள்ளதால், இவர்களுடன் இணைந்து கொள்வதில் எதுவித மனச் சஞ்சலமும் தான் அடையவில்லை என்று கூறி மீசையை முறுக்கினார். மீசையில் மண்பட்டிருக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவுப் பயணம்

ராஜ்சிவா

## நிஜமா? 4

## இன்னமும் விலகாத மர்மங்கள்

ஈகிள் இறங்கும் போது மிகப்பெரிய அளவில் காற்றமுத்தம் கொடுக்கப்பட்டதால், சந்திரனின் தரையில் உள்ள அனைத்துமே சிதறியடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் படங்களைப் பார்க்கும் போது அங்கு அப்படி ஒன்று நடந்ததாகத் தெரியவே இல்லை. மாறாக, ஆம்ஸ்ரோங் வைத்த முதல் காலடி மட்டும் மண்ணில் புதைந்தது போல சந்திரனில் படிந்திருந்தது. அந்தக் காலடி படியக் கூடிய மண்ணைக் கூட ஈகிள் சிதறடிக்கப் பண்ணியிருக்குமல்லாவா?

சந்திரனில் மனிதர்கள் நடந்ததாகச் சொல்லும் வீடியோக் காட்சிகளில், மெதுவாகப் பாய்ந்து பாய்ந்து செல்வது போன்ற காட்சிகள் காணப்படும். இதற்குக் காரணம் சந்திரனின் ஈர்ப்பு விசை, புவியின் ஈர்ப்பு விசையின் ஆறில் ஒரு பங்கு குறைவாக இருப்பதுதான். ஆனால் இந்த இயக்கத்தைச் சரியாகச் கவனித்தால், சாதாரணமாகப் பூமியில் மனிதனின் இயக்கத்தில் இரண்டரை பங்கு மட்டுமே குறைவாகக் காணப்படுகிறது. உண்மையில் ஆறில் ஒரு பங்காக அது இருந்திருக்க வேண்டும். ஆனால், இந்த வீடியோக் காட்சியை பூமியிலேயே படமாக்கி, 'ஸ்லோ மோசன்' முறையில் குறைத்து நமக்குத் தொலைக் காட்சிகள் மூலம் காட்டியிருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.



ஒரே படத்தில் காணப்படும் இரண்டு பொருள்களின் நிழல்கள் வேறு வேறு கோணங்களில் தரையில் விழுகின்றன. சந்திரனுக்கு ஒளி சூரியனில் இருந்துதான் வருகிறது. ஒரே சூரியனில் இருந்து வரும் ஒளியால் எப்படி இரண்டு கோணங்களில் நிழல்கள் தோன்ற முடியும்? செயற்கையாகப் படம் எடுக்கும் போது, இரண்டு ஒளிவிளக்குகள் பயன்படுத்தப்பட்டால் மட்டுமே இது சாத்தியம். கொடுத்திருக்கும் படத்தை நீங்கள் அவதானித்துப் பார்த்தால் இதை நீங்கள் புரிந்து கொள்வீர்கள். முக்கியமாகச் சொல்லப்படும் குற்றச்சாட்டுக்களில் இதுவும் ஒன்று.

அப்போலோ 12 சந்திரனில் இறங்கிய போது எடுக்கப்பட்ட படம் ஒன்றில் இருந்த கற்பாறையில் ஆங்கில 'சி' எழுத்து குறிப்பிடப் பட்டிருந்தது. சந்திரனில் எப்படி ஆங்கில எழுத்து என்ற கேள்விகள் அனைவரையுமே முகஞ்சுழிக்க வைத்தது. ஆனால் ஆச்சரியப்படும் வகையில் நாஸாவினால் அதற்குப் பின்னர் வெளியிடப்பட்ட அந்தப் படத்தில், ஆங்கில எழுத்து லாகவமாக அழிக்கப்பட்டிருந்தது. முதலில் ஆங்கில எழுத்து இருந்தது எப்படி? பின்னர் அது மறைந்தது ஏன். இதுவும் மனிதன் சந்திரனுக்குச் சென்றது பொய்யென்பதற்கு முக்கிய ஆதாரமான சாட்சியாக எதிர்பாளர்களால் எடுத்து வைக்கப்படுகிறது.

வேறு வேறு இரண்டு அப்போலோ சமபவங்களில் எடுக்கப்பட்ட இரண்டு படங்களில், மலைகள் போன்ற ஒரே பின்புலக் காட்சிகள் (Background) இருக்கின்றன. ஆனால் தரை மட்டும் வேறாக இருக்கிறது. இதுவும் மிக மோசமாக விமர்சிக் கப்பட்ட ஒரு குற்றச்சாட்டாகும்.

சந்திரனில் பகல் நேரங்களில் வெப்பநிலை 120 பாகைக்கும் அதிகமானது. ஆனால், சந்திரனுக்குச் சென்றவர்கள் அந்த வெப்பநிலையை எப்படித் தாங்கினார்கள் என்ற கேள்வி முக்கிய மானது. காரணம் அந்த அளவுக்கு அதிகமான வெப்பநிலை அது. இது பற்றிப் பத்திரிகையாளர்கள் கேட்டபோது, அதற்குப் பதில் கொடுத்த சந்திரப் பயணிகள், "நாங்கள் மிகப்பெரிய பற்றரகளைக் கொண்டு சென்றோம், அவற்றின் மூலம் குளிர்பதன அமைப்பு எங்கள் ஆடைக்குள் ஏற்படுத்தப்பட்டிருந்தது' 'என்றும் சொன்னார்கள். 1969 ஆம் ஆண்டு ஏசி வசதிக்கான பற்றரிகளை றொக்கெட்டில் கொண்டு சென்றார்கள் என்று சொல்லப்பட்ட பதிலை யாரும் நம்பத் தயாராக இருக்கவில்லை. அப்படிச் சில நாள்களுக்குத் தேவையான பற்றரிகள் எத்தனையாக இருந்திருக்கும்?

*(மர்மங்கள் தொடரும்)*

# சிந்தியுங்கள் - வெளிப்படுத்துங்கள்

உங்கள் யோசனையைக் 'கண்டுபிடிப்பு' என்று அறிவித்து - அதற்குக் காப்புரிமைபெற்று, கோடீஸ்வரர் ஆனார் ஒருவர். வாழ்நாள் முழுவதும் அவருக்குப் பங்குப் பணம் வந்து கொண்டு இருந்தது. இது பற்றி உங்களுக்குத் தெரிந்திருக்கும்.

தனக்குத் தோன்றுகின்ற யோசனைக்கு காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்பாளர் ஒருபுறம். ஆனால் தங்களுக்குத் தோன்றுகின்ற யோசனைகளுக்குக் காப்புரிமை பெறாதவர்கள், இலட்சக் கணக்கில் இருக்கலாம். என்றாலும் பலர் தங்கள் யோசனைகளைப் பற்றித் தொடர்ந்து சிந்தித்தனர். அவற்றை எழுதி வைத்தனர். பிறகு வெளிப்படுத்தினர்.

உற்பத்திப் பொருள்கள்- மூலப் பொருள்கள் - சேவைகள் - முறைகள்- அமைப்புக்கள்- புதிய முயற்சிகள்- திட்டங்கள் ஆக எந்தத் துறைகளில் எல்லாம் மேம்பாடு தேவையோ, அவற்றைப்பற்றி எல்லாம் தங்கள் யோசனைகளைத் தெரிவித்தனர். அதன் வாயிலாக அப்படி யோசனை தெரிவித்தவர்களை நிர்வாகம் கவனத்தில் எடுத்துக் கொண்டது. அவர்கள் பெரும் வருவாய் தருகின்ற பதவிக்கு உயர்த்தப்பட்டனர். யோசனை கூறிய தற்கான றொக்கப் பரிசுகள் அளிக்கப்பட்டன. உருப்படியான யோசனைகளை வெளிப்படுத்தியதன் வாயிலாக அவர்களின் மதிப்பு உயர்ந்தது. இந்தச் சுலபமான வழியின் மூலமாக அவர்கள் சீக்கிரம் செல்வந்தரானார்கள்.

முற்றிலும் புதுமையான வேறு எவரும் கண்டுபிடிக்காத ஒருயோசனை என்றால், அதனால் மிகப் பெரிய விளைவுகள் ஏற்படும் என்றால், சட்டபூர்வமான அம்சங்களைத் தாக்குப் பிடிக்கத் தக்கதாக அந்தக் கண்டுபிடிப்பு இருக்குமாணால், அதற்கு காப்புரிமை பெற்றுக் கொள்ளலாம். இவ்வாறு காப்புரிமை பெறுவது அதிக காலத்தையும் பணத்தையும் விழுங்கிவிடும். ஏனென்றால் உங்களுடைய யோசனையைப் போன்றே வேறு சிலரும் சில கண்டுபிடிப்புக்களைச் சமர்ப்பித்து, அவற்றுக்குக் காப்புரிமை மிரட்டல்கள் வரலாம். சட்ட ரீதியாக வழக்குகள் போட்டு உங்களை அலைக்கழிக்கலாம்.

காப்புரிமை பெற்றுத் தருவதற்கென்று அத்துறையில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். உங்களுடைய கண்டுபிடிப்பைப் பதிவு செய்வதற்குப் போதுமான காரணங்கள் இருக்குமானால், சட்டபூர்வமான உங்கள் கண்டுபிடிப்பைப் பதிவு செய்ய எல்லாம் சரியாக இருக்குமானால் நீங்கள் அத்துறையில் பயிற்சி பெற்ற வழக்கறிஞர் வாயிலாகக் காப்புரிமையைப் பதிவு செய்யலாம்.

நாம் இங்கு சுருக்கமாக இதை மறுபடியும் நினைவு கொள்வோம். இதன் நோக்கம் உங்களைச் செல்வந்தர் ஆக்குவது தான். மேலும் பயன்மிக்கவராக உங்களை ஆக்குவது. மேலும் உங்களை அதிக மதிப்பு மிக்கவராக ஆக்குவது. கூறப்பட்டுள்ள வெற்றிக்கான நிரூபிக்கப்பட்ட வழிகளை நாங்கள் மேற்கொள்ளுமாறு செய்வது.

அதற்காக நீங்கள் திடீர் நிபுணர் ஆக வேண்டுமென்றோ இதில் எந்த வழிமுறையும் கூறவில்லை. இதில் கற்பிக்கப்பட்டுள்ள வழிமுறைகள் எல்லாம் சுலபமானவை. நிச்சயமானவை. பல இலட்சக்கணக்கான மனிதர்கள் உங்களைப் போன்றவர்கள் இந்த வழிமுறையின் வாயிலாகவே சீக்கிரம் செல்வந்தராகியிருக்கிறார்கள்.

ஏதோ ஒரு அற்புதத்தைக் கண்டுபிடித்து, அதற்குக் காப்புரிமை பெற்று, ஒரே இரவில் கோடீஸ்வரர் ஆகிவிடலாம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துவது இதன் நோக்கம் அல்ல; இதன் நோக்கம் என்னவென்றால்,

1. சிந்தியுங்கள்
2. எழுதி வையுங்கள்
3. வெளிப்படுத்துங்கள்

- என்று உங்களை ஊக்கப்படுத்துவதே இதன் நோக்கம். உற்பத்திப் பொருள்களை- மூலப் பொருள்களை- புதிய முயற்சிகளை- திட்டங்களை- இவ்வாறு உங்களுடைய சொந்த உலகில் உள்ள எதையும் எல்லாவற்றையும் மேம்படுத்திட சிந்தியுங்கள்- எழுதி வையுங்கள்- வெளிப்படுத்துங்கள். அதன் மூலம் நீங்கள் முன்பைக்காட்டிலும் பயன்மிக்கவராக ஆவீர்கள். அதன் வாயிலாக மேலும் மதிப்பு மிக்கவராக மாறுவீர்கள். நீங்கள் சீக்கிரம் செல்வந்தராகி விடுவீர்கள்.

உங்கள் யோசனைகளை வெளிப்படுத்துவதன் வாயிலாகவே மேலே சொன்ன முன்னேற்றம் அனைத்தும் உங்களுக்கு கிட்டும். நீங்கள் தெரிவிக்கும் யோசனைகளுக்கு - இவ்வளவு பணம் வேண்டும் என்று உரத்த குரலில் கேட்டு வாதம் செய்யாதீர்கள். இப்படி நடந்து கொண்டால் உங்களுக்குப் பணம் கிடைப்பதை விட - உங்களுக்கு எதிர்புத் தான் வளரும்.

நீங்கள் தெரிவிக்கும் யோசனைக்கு விலை வைக்காதீர்கள்.

**சுடர் ஒளி வாசகர்களே**

குடத்தில் இட்ட விளக்காக
உங்களுக்குள் மறைந்து கிடக்கும்
படைப்புத் திறன்களைக் குன்றின்
மேல் தீபமாக்கிட சுடர் ஒளி
காத்திருக்கிறது.


சிறுகதை, கவிதை, கட்டுரை,
துணுக்குகள், எதுவானாலும்
அனுப்பிவையுங்கள். தரமானவை
பிரசுரிக்கப்படும்.

படைப்புக்களை அனுப்பவேண்டிய
முகவரி:
**சுடர் ஒளி,**
**இல.361 கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் உலகம்




கிறீச்' என்ற சத்தத்தோடு கதவு மெதுவாகத் திறந்துகொண்டது. அறையினுள் இளவரசர்கள் கண்ட காட்சியை அவர்களாலேயே நம்ப முடியவில்லை. அறையினுள் ஒரு அழகிய இளவரசி சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தாள். அவளது அலறல் தான் இதுவரை அந்தப் பிரதேசமெங்கும் பரவியிருக்கிறது. இளவரசியைச் சங்கிலியில் இருந்து விடுவிக்க இந்திரவர்மன் முயன்றபோது, அவளது கையைப் பிடித்துத் தடுத்தான் சந்திரவர்மன்.

''இந்திரா! சில வேளைகளில் இதுவும் மந்திரக் கிழவியின் மாய வேலைகளில் ஒன்றாக இருக்கலாம். எதற்கும் எச்சரிக்கையோடு செயற்படுவது நல்லது'' என்று இந்திரவர்மனுக்கு அறிவுரையும் கூறினான். ''சந்திரவர்மா! வெளியே இரு இராட்சதர்களும் உரையாடியதை நீயும் தானே கேட்டுக்கொண்டிருந்தாய். இந்த மாயத்தீவிலேயே மந்திரக் கிழவி இல்லாதபோது நம்மை வீழ்த்துவதற்கு அவள் மாய வேலை எதுவும் செய்ய முடியாது'' என்றான் இந்திரவர்மன். இவ்வாறு இளவரசர்கள் இருவரும் உரையாடிக் கொண்டிருந்தபோது, கட்டப்பட்டிருந்த இளவரசியின் குரல் குறுக்கிட்டது. "தயவுசெய்து விரைவாக என்னை விடுவியுங்கள். மந்திரக் கிழவி எந்நேரமும் இங்கு வரக்கூடும்" என்றாள் இளவரசி. அதன் பின் இந்திரவர்மன் சற்றும் தாமதிக்காது தனது வாளால் சங்கிலியை அறுத்து இளவரசியை விடுவித்தான். நன்றிப் பெருக்குடன் இந்திரவர்மனின் கரங்களை இளவரசி பற்றிக் கொண்டாள்.

மாயத்தீவில் ஓர் அழகிய இளவரசியைக் கண்டதும், அவளை விடுவித்ததும் நன்றிப் பெருக்கோடு இளவரசி இந்திரவர்மனின் கைகளைப் பற்றிக் கொண்டதும் சந்திரவர்மனுக்கு ஒரு கனவு போலவே தோன்றியது. கண் இமைக்கும் நொடிக்குள் இவையெல்லாம் நடந்து விட்டன. இளவரசியிடமிருந்து தன் கரங்களை விடுவித்துக்கொண்ட இந்திரவர்மன் "பெண்ணே! நீ யார்? எதற்காக இங்கே சிறைப்பட்டிருக்கிறாய்?'' என்று இளவரசியை நோக்கிக் கேள்விக் கணைகளைத் தொடுத்தான். ஆனால் அவனின் கேள்விகளுக்கு பதில் ஏதும் சொல்ல முடியாதவளாய் விக்கி, விக்கி அழத் தொடங்கினாள். அவள் அழுது முடிப்பதற்குள் எஞ்சியிருந்த ஏனைய இரு அறைகளையும் திறந்து பார்த்துவிட்டு சந்திரவர்மன் சோர்வுடன் நடந்து வந்தான்.

*(மந்திரக் கிழவி வருவாள்...)*

# கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்

*மாணவ, மாணவியரே! கூப்பனுக்குள் உள்ள கேள்விக்கு என்ன விடை என்று தெரியுமா? தெரிந்தால் உடனே எழுதி கூப்பனைக் கத்தரித்து 14.11.2013 இற்கு முன்னர் அனுப்பிவையுங்கள். சரியான விடை எழுதியோரில் ஒருவருக்கு 1000 ரூபா பணப்பரிசு காத்திருக்கிறது.*

*(வெற்றி பெற்றவர்களின் புகைப்படங்களும் பிரசுரிக்கப்படும். ஆகவே விரும்பியோர் புகைப்படங்களையும் இணைத்து அனுப்பலாம்).*

**கேள்வி:-**

இந்தியாவில் ஒரிசா மாநிலத்தைத் தாக்கிச் சேதப்படுத்திய புயலின் பெயர் என்ன?

பதில்:- ..........................................................................

பெயர் :- ..........................................................................
தரம் :- ..........................................................................
பாடசாலை :- ..........................................................................

**✍ அனுப்ப வேண்டிய முகவரி:**
**கேள்வி ஒன்று: பரிசு ஆயிரம்.**
சுடர் ஒளி
**361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

**10**

**கேள்வி ஒன்று; பரிசு ஆயிரம் - 08**

*சரியான விடை* - **அலி ஸெய்டன்**

*இந்தப் போட்டியில் ஏராளமான மாணவர்கள் ஆர்வத்தோடு பங்கு பற்றியிருந்தார்கள். அவர்களில் 1000 ரூபா பரிசினைப் பெறுவதற்காக குலுக்கல் மூலம் வெற்றியீட்டிய அதிர்ஷ்டசாலி -*

## அஜிமல் எம்.சஸ்மின்

தரம் -7. தி/கோணேஸ்வரா இந்துக் கல்லூரி.

**பாராட்டுப் பெறுவோர்:-**

01. எஸ்.பிரியதர்ஷன். தரம் - 8. யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.
02. அ.சிர்[illegible]ஜன். தரம் - 12. யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
03. இ.நிருத்திகா. தரம் - 3. யாழ்ப்பாணக் கல்லூரி. வட்டுக்கோட்டை
04. கு.அபிநாஷ். தரம் -4. யா/மகாஜனக் கல்லூரி. தெல்லிப்பழை.
05. அ.பாத்திமா நசூஹா. தரம் - 7. தி/சென்.மேரிஸ் கல்லூரி.

# அறிந்துகொள்வோம்



*பலவகை வாத்துக்களில் மர வாத்து தான் மிகப்பெரியது. இதன் இறக்கைகள் வெள்ளையாக இருக்கும். ஆண் வாத்து 2.7 கிலோ எடை இருக்கும். பெண் வாத்து 2.0 கிலோ வரை இருக்கும். இந்த வகை வாத்துக்களின் உடல் மின்னும் கறுப்பு அல்லது பிறவுண் நிறத்தில் இருக்கும். தலை வெள்ளையாக இருக்கும். அதில் அடர்த்தியாக கறும் புள்ளி இருக்கும். சுற்றுப்புற சூழ்நிலையைப் பொறுத்து இதன் வர்ணம் மாறும். இதன் வலுவான கால்கள் மஞ்சள் நிறத்திலும், கண்கள் பளிச்சென ஆரஞ்சு நிறத்திலும் இருக்கும்.*

*கடந்த அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் இந்த வகை வாத்துக்கள் அசாம், பர்மாவில் மிகவும் பரவலாகக் காணப்பட்டன. இப்போது சில குறிப்பிட்ட இடங்களில் மட்டும் ஒன்று, இரண்டு காணப்படு கின்றன. சதுப்பு நிலக் காடுகளை அழிப்பதால் அழிந்து வரும் உயிரினங்களில் இதுதான் முதன்மையானதாக உள்ளது.*




**ஒரு** ஊரில் தீனா என்பவன் இருந்தான். அவன் உடல்வலிமை இல்லாதவன். உடல்வலிமை இல்லா விட்டாலும் அறிவாளி. அவனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தனர். அவர்களுக்கு உடற் பயிற்சி செய்வதில் மிகுந்த ஆர்வம் உண்டு. சிலம்பு ஆட்டம், குஸ்திச் சண்டை, எடை தூக்குதல் முதலியவற்றை முறையுடன் பயின்று வந்தனர். தீனா பாவம் வேடிக்கை பார்ப்பதைத் தவிர எந்த கருவிகளையும் அவனால் தூக்க முடியவில்லை. இதனால் நண்பர்கள் அவனை, 'நோஞ்சான்' என்று கேலி செய்து மகிழ்ந்தனர்.

ஒருநாள் மாலை வேளை, தீனா கடையில் இருந்த பொருள்களை மூடைகளாக்கி ஒரு சிறு வண்டியில் வைத்து மிகவும் கஷ்டப்பட்டு இழுத்து வந்து கொண்டிருந்தான். அவன் வந்து கொண்டிருந்த வழியில் ஒரு பெரிய மேடு இருந்தது. அந்த மேட்டின் மேல் வண்டியை இழுப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. என்ன செய்வதென்று யோசித்தான். யாராவது வருகிறார்களா.... என்று வண்டியை நிறுத்தி விட்டு மேட்டின் மேல் ஏறிப்பார்த்தான்.

அப்போது அவனுடைய மூன்று நண்பர்களும் வந்து கொண்டிருந்தனர். உடனே, தீனாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. கீழே இறங்கி, தான் வைத்திருந்த கயிற்றின் ஒரு முனையை வண்டியில் கட்டினான். மற்றொரு முனையை கையில் எடுத்துக் கொண்டு, மேட்டின் மேல் ஏறி நண்பர்களைப் பார்த்து, 'விளையாடலாம் வாருங்கள். நீங்கள் மூவரும் ஒரு பக்கம் இழுங்கள், நான் எதிர்ப்புறமாக இழுக்கிறேன்'என்றான். அந்த மூன்று நண்பர்களும், 'கொல்' என்று சிரித்துவிட்டனர். உடனே தீனா, 'சிரிப்பு இருக்கட்டும் இழுங்கள்' என்றான். மூவரும் கயிற்றை இழுத்தனர். தீனா முழுப் பலத்துடன் எதிர்ப்பக்கம் இழுப்பது போல நடித்தான். மூவருக்கும் இழுப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. போயும், போயும் இவனிடம் தோற்றுவிடப் போகிறோமே... என்ற பயத்துடன் முழுப் பலம் கொண்டு இழுத்தனர். தீனா சிறிது சிறிதாகக் கயிற்றை விட்டுக் கொண்டே இருந்தான். 'சபாஷ்... பையன் நகர்கிறான்' என்று மூவரும் வேகமாக இழுத்தனர். அதற்குள் வண்டியைப் பாதிக்கு மேல் இழுத்து விட்டனர். கடைசியாக வண்டி முழுவதும் மேலே வந்ததைக் கண்ட பின்பே மூவருக்கும் விஷயம் புரிந்தது. தீனா வயிறு வலிக்கசிரித்தான். மூவரும் முகத்தில் அசடுவழிய நின்றுகொண்டிருந்தனர். இதன் மூலம் என்ன தெரிகிறது?

உடல் வலிமை மட்டும் இருந்தால் போதாது, அறிவும், புத்திசாலித்தனமும் இருக்க வேண்டும். அப்போதுதான் எதையும் சாதிக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடேல் பாலசிங்கம்

# சுதந்திர வேட்கை

விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு **7**

அவருடைய வாழ்க்கையின் இந்த அத்தியாயத்தில், அவர் முகம் கொடுத்த சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் அவருடைய சகிப்புத் தன்மையின் எல்லைக்கு, அவரை இழுத்துச் சென்றிருக்கின்றன. தர்மம், நல்லறம் ஆகியவை வெறும் நூல்களிலிருந்து அகழ்ந்து எடுக்கப்படும் வார்த்தைகள் அல்ல. வலிந்து ஊட்டப்படுபவனவும் அல்ல. மாறாக, அவை எமது உயிர் வாழ்வின் மூலாதாரமாக எழுபவை. எண்ணமும், செயலும் ஒத்திசைவும் கண்ட திறனாற்றல் அவை என் பதை அவர் பட்டறிந்து, உணர்ந்து தேறினார். அவருடைய மனைவி, ஐந்து ஆண்டுகாலமாக உயிரைத்தக்க வைக்கும் வெளியிணைக் குருதிச் சுத்திகரிப்பு இயந்திரத்தில், கூடுதலான காலம் வீட்டிலே அழுந்திய பின், காலமானார். தாங்கொணா மன நெருக்குவாரத்திற்குப் பாலா உள்ளான இந்தக் காலகட்டத்திலேதான், தமது ஆயுட் கண்டமும் அதுவே என்ற கொடுமை அவர் முகத்தில் உறைத்தது. நீரிழிவு நோய் பாலாவுக்கு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதன் பின்னர், சுயதேடல்களின் விளைவாகவும், உள்ளார்ந்த புலன்களின் கூர்மைப் படுத்தப்பட்ட ஒரு பிரதிபலிப்பாகவும் முகிழ்ந்து, புடமிடப்பட்ட ஒரு புதுமைப் பிறவியாக அவர் மாறினார். இத்தகைய ஓர் ஆன்மீகரையே எனது துணைவராகப் பெற வேண்டும் என்ற தேடலில் நான் ஈடுபட்டுக் கொண்டிருந்தேன். ஆனாலும் நான் சந்தித்த அந்த மனிதரை, என் கணவராகிவிட்ட அந்த மனிதரை வெறும் வார்த்தைகளால் வர்ணிக்க விரும்பும் நான் அவரை ஒரு "உண்மையான மனிதப் பிறவி" என்பேன். நான் மணக்க இருப்பவரிடம் என்னென்ன குணாம்சங்கள் இருக்க வேண்டும் என்று காத்திருந்தேனோ, அவை எல்லாம் பாலாவிடம் பொதிந்து இருந்தன. முதிர்ச்சி; விவேகம்; மனோபலம்; இனி, இவற்றிலும் மோலாய் பரிவு. விவேகம் எனும் போது ஒரு புத்திஜீவியை நான் எதிர்பார்க்கவில்லை. மனோபலம் எனும் போது ஒரு பயில்வானாகவோ, சண்டியனாகவோ இருக்க வேண்டும் என்று எதிர் பார்க்கவில்லை. நான் எதிர்பார்த்த சீலங் களோடு உள்ள அந்த அசாதாரண மனி தரைச் சந்திக்க நம்பிக்கையோடு காத்திருந்தேன். அவர் அடக்கமுள்ளவராக இருக்க வேண்டும். உறுதியான கொள்கைப்பிடிப்பு இருக்க வேண்டும். ஆனால் மமதை இருக்கக்கூடாது. தயாள குணமும், பெருமையும் இருக்கவேண்டும்; ஆனால் அகங்காரம் கூடாது. இனி சுயநலவாதியாகவோ, முன்யோசனையற்றவராகவோ இருக்கக் கூடாது. இந்தப் புருஷலட்சணங்கள் பொருந்தியவரைத்தான் பல ஆண்டுகளுக்கு முன் சந்தித்தேன். அவரை முதலில் சந்தித்த ஓரிரு வாரங்களிலேயே பாலாதான் என்னுடையவர் என்பதைப் புரிந்து கொண்டேன். சாதாரண அன்றாட முறைகள் தொடர்பாக, இனி பணம் சேமிப்பது தொடர்பாக, சாதாரண ஆட்கள் பொதுவாகப் புரியும் காரியங்களில் அவர்அக்கறை இல்லாமல் இருந்ததற்கு - அவருடைய ஆன்மீகப் பண்புகளே காரணமாக இருந்திருக்க வேண்டும். பொருளியல் பாதுகாப்பு மட்டில் அவர் பற்று இல்லாமல் இருந்ததால், கையில் காசு இல்லாக் கையறு நிலைக்கு, இயல்பாகவே நாம் தள்ளப்படவும் நேர்ந்தது. ஆனால் எம்மிடமிருந்த சொற்பப் பணத்தோடு பாலா எப்படியோ சமாளித்தார். இல்லை! நிலைமையைச் சமாளித்தோம் எனலாம். அன்றாடச் சமாளிப்பேதான். ஆனால் ஒருவரை ஒருவர் நேசித்த நிலையில் மகிழ்ச்சியோடு வாழ்ந்தோம்.

வாழ்வு, சத்தியம் ஆகியவற்றை தமது மனதிலே தோற்றுவித்த கேள்விகளுக்கு விடை தேடும் முயற்சியில், மேற்குலக தத்துவ மரபுகள் பொதிந்த பெருந்தொகை நூல்களைப் பாலா படித்தார். அவருடைய ஆன்மீக ஈடுபாட்டைச் சமப்படுத்திய ஒருமுக்கிய செல்வாக்காக மாக்சியமும், நவமாக்சியமும் அமைந்தன. பாலா நன்கு கற்றுத் தேர்ந்த துறைகளே அவை. ஆனால், இவை தொடர்பாகப் பிரத்தியேகக் கருத்துக்களையும், விமர்சனங்களையும் அவர் கொண்டிருந்தார். அந்தக் கோபுர அறிவு ஜீவிக ளின் தத்துவங்களை அவர் நிராகரித்தார். அவ் வாறே, புரிந்துகொள்ள முடியாத பூடகமான கருத்துருவங்களையும் மனித ஆற்றல்களால் சாதிக்க இயலாத விடயங்கள் பற்றிக் கூறும் சிந்தனை வடிவங்களையும் அவர் நிராகரித்தார். மாறாகத் தத்துவம் உலகை மாற்றியமைக்க வேண்டும் என்ற மாக்சிய தத்துவ சிந்தனைக் கீற்று அவருக்குப் பிடித்திருந்தது.

மானுட சமுதாயத்தை ஓர் உயர்நிலைக்கு முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று கூறும் இந்த எதிரும், புதிருமான தத்துவ எண்ணக்கருக்களின் இடைப்பட்ட ஒரு நுண்ணிய பாதையைப் பாலா கடைப்பிடித் தார் என்றே கூறுவேன். ஒருபுறம் மானுட சமுதாயத்தின் அவசிய தேவையான தனியாளின் அகநிலை மாற்றத்தை முதன்மைப் படுத்தும் கீழைத்தேய தத்துவ ஞானம். மறுபுறம் சோசலிச சிந்தனை; கூட்டு முயற்சி மூலம் அரசியற் செயற்பாட்டை இது வலியுறுத்துவது, மனித வாழ்க்கையில் உண்மையான நிலைமாற்றத்திற்கு வழிசமைத்துக் கொடுக்கும் மூல பலத்தைக் கொண்டது இது. புரட்சிகர அரசியலில் நாம் ஈடுபடுவதற்கு முந்திய ஓர் காலகட்டத்தில், மானுட மேம்பாட்டை வலியுறுத்தும் அகநிலை, புறநிலை சார்ந்த தத்துவ தரிசனங்களைப் புணர்த்திப் பார்க்க பாலா முயன்றார். இதன் வெளிப் பாடே அவருடைய கலாநிதி ஆய்வு முயற்சி. இதில் மாக்சின் சமூக தத்துவத்தையும் சிக் மண்ட் பிராய்டின் உளவியல் தரிசனத்தையும் இணைத்து இழைக்க முயன்றார். ஆனால் அவருடைய இனத்தின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் தேவைகள் அவருடைய ஆய்விலும் கற்பித்தலிலும் அடிக்கடி தலையிட்டுக் கொண்டிருந்தன.



அந்தத் தருணத்திலேயே, ஒன்றில் அறிவியல் ஓய்வு வாழ்க்கையை அல்லது புரட்சிப்போக்கு அரசியலை அவர் தேர்ந்து எடுக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. தமது மக்களின் போராட்டம் நியாயமானது என்றும் அதற்கு ஊழியம் புரிவதே தர்மம் என்றும் அவர் கருதியதால், புரட்சிப்போக்கு அரசியலையே அவர் தேர்ந் தெடுந்தார்.

முற்போக்கும், முதிர்ச்சியும் பொதிந்த இத்தகையை ஆளுமையாளரையே நான் நேசித்தேன். என்னிடமிருந்த முதிர்ச்சியின்மை, முழுமையின்மை ஆகியவற்றைக் குறை நிரப்பவும், பாலாவின் பக்குவம் எனக்கு உதவியது. பின் நோக்கிப் பார்க்கும் போது இப்போது ஒன் றைக் காண் கின்றேன். எனது நுண்ணிய உள் உணர்வுகளையும், மனோநிலையையும் பொருத்த மான வார்த்தைகளில் வடிக்க பாலா உதவினார் என்பேன். அவருடைய ஆழ்ந்த அறி வும், நேரடி அனுபவமும், உளப்பகுப்பாய்வுத் திறனறிவும் எனக்குள்ளே தடைகளால் அமுக்கப்பட்டு, வெளிப்படாதிருந்த உணர்வுகளைச் சீண்டி, அறிவு வடிவம் பெற உதவின.

காலப்போக்கில், எனது வாழ்வில் முதற் தடவையாக, எனக்குள்ளே கரைந்து உறைந்திருந்த ஒரு இருண்டபக்கத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டவும் சமூக வாழ்வில் முழு ஈடுபாட்டோடு, ஆழமாக ஈடுபடவும் என்னால் இயலுமாயிற்று.

(பதிவு தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போனவர்களின் வருகை



தொடர் கதை

15

● தொல்புரம்
சி. கதிர்காமநாதன்

சைக்கிளில் மனுசியை வைத்து உழக்கிக் கொண்டு போனேன். வாசுகி வீடு விளக்குகளும், பாட்டுச் சத்தமுமாக அமர்க்களமாய் இருந்தது. மதில்கள், தூண்கள் எல்லாம் வர்ண விளக்குகளால் ஒளி வீசின. பிளாஸ்ரிக் கதிரைகள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

நட்ட நடுவில் மேடையொன்று தயார் செய்து வைத்திருந்தார்கள். அதில் சில இசைக்கருவிகளும், வைக்கப்பட்டிருந்தன.

உறவினர்கள் கொஞ்சம் கொஞ்சமாக வரத் தொடங்கியிருந்தார்கள். குளிர்பானங்கள், சிற்றுண்டிகள் துரிதமாகப் பரிமாறப்பட்டன. வீட்டு வாசலின் முன்பாக பல 'தினுசான் வாகனங்கள்' வெளிநாட்டில் இருந்து வந்தவர்களை இறக்கிவிட்டு, இளைப்பாறிக் கொண்டிருந்தன.

நானும் மனுசியும் ஒவ்வொரு திக்காகப் போய்விட்டோம். பல மாதங்களின் பின் பல நண்பர்களை, உறவினர்களை நேரில் கண்டு உறவாடிக் கொள்ள முடிந்தது. அநேகர் வெளிநாட்டில் இருக்கும் எனது மகனைப் பற்றி விசாரித்தார்கள். 'நீங்களுமேன் இஞ்சையிருப்பான்' என்று வழி சொன்னார்கள்.

இந்த அமளியோடு இன்னொரு பக்கத்தில 'வாலிபப் பட்டாளங்கள்' தங்களுக்கே உரித்தான பாணியில் அட்டகாசமாய் சிரித்து கும்மாளமடித்துக் கொண்டிருந்தார்கள். குறுக்கும் நெடுக்குமாக ஆட்கள் நடந்துபோக 'சென்ற்' வாசனை தூக்கியடித்தது.

திடீரென மேடையில் வைக்கப்பட்டிருந்த வாத்தியக் கருவிகள் உயிர் பெறத் தொடங்கின. வாத்தியம் வாசித்தவர்களில் ஒருவன்- வாசுகியின்- ரகு மாமாவின் மூத்த புதல்வன் என்று சொன்னார்கள்.

அவன் தன்னை மறந்து வாசித்துக் கொண்டிருந்தான்.

வீட்டின் உள்ளேயிருந்த பெண்கள், ஆண்கள் சிறுவர்கள் எல்லோரும் வெளியே வந்து இவர்களை வேடிக்கை பார்க்கத் தொடங்கினார்கள்.

பிறந்த நாள் விழா சூடு பிடிக்கத் தொடங்கியது. வாத்தியக் கருவிகளும் அதே போல வேகம் பிடிக்கத் தொடங்கின.

விரைந்து வந்த வாகனமொன்று சடுதியாக நிற்க, அவசரஅவசரமாக, பெட்டிபெட்டியாக 'போத்தல் அயிட்டங்களை' தூக்கிக் கொண்டு வீட்டின் பின் கோடியிலிருந்த அறையினுள் வைத்தார்கள்.

எல்லாம் மிக விரைவாக நடந்து முடிந்தன.'போத்தல் அயிட்டங்களை' தூக்கிக் கொண்டு போனவர்கள், சிறிது நேரத்தில் கையில் புகையும் சிகரெட்டுடனும், மெல்லிய சிரிப்புடனும் தள்ளாட்டமாக வெளியே வந்தார்கள்.

அவர்களுக்கு தலைவன் போல ரகு- வாசுகியின் மாமா- கையில் சிகரெட்டுடன் சுழன்று, ஆடி, குதித்தபடி அவர்களை விலத்திக் கொண்டு வெளியே வந்தான். எல்லோரும் ஆரவாரித்தார்கள். கூப்பாடு போட்டார்கள். காதுகள் அடைத்தன.

வாத்தியங்களின் நரம்புகள் முறுக்கேறி, போதையில் மிதக்க....

மேடையின் முன்னால் சிறு கூட்டமே ஆடத் தொடங்கி விட்டது.

இந்த ஆட்டத்தோடு நானும் இரவுச் சாப்பாட்டை முடித்து விட்டேன். மனுசியும் சாப்பாட்டை முடித்து விட்டாள். வாசுகியோடு கொஞ்ச நேரம் தான் கதைக்க முடிந்தது. இந்த நேரத்தில் ரகு தள்ளாட்டமாக ஓடி வந்து, பெண்களோடு கதைத்துக் கொண்டிருந்த தனது மனுசியை பற்றி இழுத்தான். இதை அவள் எதிர்பார்க்கவில்லை.

அவள், அவன் செய்கையைத் தடுத்து நிறுத்துவது தெரிந்தது.

"இங்க..... ஊரில..... வேண்டாம். மரியாதையில்லை. வேண்டாம்."

அவன் விடுவதாக இல்லை. பார்த்துக் கொண்டிருந்தவர்கள் கூப்பாடு போட்டார்கள். அவனை உற்சாகப்படுத்தினார்கள். கடைசியில்.......

ரகு, மனுசியின் இடுப்பைச் சுற்றி வளைத்தபடி ஆடத் தொடங்கினான். அவள் வெட்கப்பட்டாள். தலை கவிழ்ந்தாள். இதோடு கூட நின்ற வெளிநாட்டு உறவினர்களும் தமது மனுசிமாரை தேடிப்பிடித்து, இடுப்பைச்சுற்றி வளைத்து, மார்போடு அணைத்து ஆடத் தொடங்கினார்கள். *(அடுத்தவாரமும் வருவார்கள்)*

## சொற்சிலம்பம் போட்டி இல. 593

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | ■ | 8 | | ■ |
| | ■ | 9 | | 10 | | ■ | 11 |
| ■ | 12 | | ■ | | ■ | 13 | |
| 14 | | ■ | 15 | | 16 | | |
| 17 | | 18 | | ■ | | ■ | |
| | ■ | 19 | | 20 | ■ | 21 | |
| 22 | | | ■ | 23 | | | |

**மேலிருந்து கீழ்**

1. காலையில் கூவி எழுப்பும்.
2. உயர் அதிகாரியை இப்படியும் அழைப்பர்.
3. நூறு செய்யுள் கொண்ட பிரபந்தம்.
4. காடும் காடு சார்ந்த இடமும்.
5. திடம்.
6. உருசித்து அனுபவி.
10. ஏழு நாட்கள் கொண்டது.
11. நான் எனும் எண்ணம்
12. வேலிக்கு இதுவா காவல்?.
13. கழித்தல் குறி.
14. அவமரியாதை செய்.
15. அன்னை.
16. நெருப்பில்லாமல் இது வராதாம்.
18. சுத்திகரிக்கப்படாத எண்ணெய்யை இப்படி அழைப்பர்.
20. சிரார்த்த நாள்.
21. அடியெடுத்து வைத்து முன்னேறுமாறு விடுக்கும் உத்தரவு.

**இடமிருந்து வலம்**

1. இதை ஆழப்படுத்துவது தொடர்பாக சர்ச்சை நிலவுகிறது.
7. கீறுதல்.
8. சோதிடத்தில் இது பன்னிரண்டு.
9. கலைகளுக்கு அரசி.
12. பிரணவ மந்திரம்.
13. கூட்டல் குறியீடு.
14. இந்தியாவில் முற்காலத்தில் காற்ப்பணம் இது.
15. தாமரை.
17. கடும் வைராக்கியம்.
19. மனிதர்களைப் புதைத்த இடத்தில் கட்டப்படும் நினைவுத் தூபி.
21. நவீன.
22. திசை.
23. தயாரிப்பு ஏற்பாடு.

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 593

சொற்சிலம்பம் போட்டி 593ற்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2013 ஆம் ஆண்டு நவம்பர்13ம் ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் முறையே 2013 ஆம் ஆண்டு நவம்பர்20ஆம் மற்றும் நவம்பர் 27ம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

**சுடர் ஒளி யாழ். அலுவலகம்.**
**361. கஸ்தூரியார் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

### சொற்சிலம்பம் போட்டி இல. 591 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1. வைபவம், 2. தேசு, 3. சிந்துதல், 4. கரையடை, 5. கரி, 7. தடி, 9. ஆறுதல், 10. மருமகன், 11. பதிப்பு, 12. லிங்கம், 13. கதே, 14. மகா, 17. பட,

**இடமிருந்து வலம்**

1. வைதேகி, 4. கலகம், 6. பசுந்தரை, 8. துடியன், 10. மறு, 11. பல்லி, 13. கருத, 14. மதி, 15. தேமல், 16. காப்பகம், 18. படம், 19. பன்றி,

### போட்டி இல. 590இல் பரிசு பெற்றோர்

**1ஆம் பரிசு** — திருமதி.மணிமேகலை வரதராஜன், இல B-1 அரச விடுதி, சரவணா றோட், கல்லடி, மட்டக்களப்பு.

**2ஆம் பரிசு** — திருமதி.வஸந்தா பாலசிங்கம், இல 21,நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-06.

**3ஆம் பரிசு** — அ.இ.பாக்கியராஜா, இல 88/1 பசல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-06.

### பாராட்டுப் பெறுவோர்

(1) எம்.ஜே.பெர்னாண்டோ, இல 30/3 சென்ற்.லூசியாஸ் ஒழுங்கை, கொழும்பு-13.

(2) கனகசபை நாகேந்திரன், இல11-1/3, நெல்சன் இடம், வெள்ளவத்தை, கொழும்பு.

(3) கே.இராஜகோபால், அடைக்கலம் தோட்டம், கந்தசாமி கோவிலடி, வட்டுக்கோட்டை.

(4) திருமதி விமலா சித்திரவேல், சந்தை வீதி, வந்தாறுமூலை.

(5) வி.செல்வநாயகம், சிவன்கோயில் வீதி, புத்தூர்.

(6) யோகராசா சிவாஜினி, 'ஜப்னா ரெக்ஸ்', மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(7) வே.கார்த்திகேசு, விபுலாநந்தர் வீதி, வாழைச்சேனை.

(8) த. சாம்பசிவம், B4 -F- 20,புளூமெண்டல் தொடர்மாடி, கொழும்பு-13.

(9) திருமதி எஸ்.பாக்கியநாதன், கொழும்பு தமிழ்ச்சங்கம், 57ஆவது ஒழுங்கை, கொழும்பு-06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்

## என் கேள்விக்கு பதில்

கனவில் ஒரு நாள்
கடவுளைக் கண்டேன்
மனதில் தோன்றிய
கேள்விகள் கேட்டேன்

மனிதன் என்பவன்
யார் எனச் சொல்வீர்
பேசத்தெரிந்த ஓர்
விலங்கே என்றார்

பொன் நகை எதுவென
பொதுவாய் சொல்வீர்
ஏழ்மையின் புன்னகை
வேறெது என்றார்

பாவம் எதுவென்று
பணிவாய்ச் சொல்வீர்
இயற்கையின் பாதையில்
விலகுதல் என்றார்

செல்வம் எதுவென்று
செவியோரம் சொல்வீர்
ஏழைகளுடன் செலவளித்த
நேரம் என்றார்

வெற்றி எதுவென
வெடுக்கெனச் சொல்வீர்
விழுந்த போதெல்லாம்
எழுவது என்றார்

உறவெது என்று உணர்த்தி
நீர் சொல்வீர்
உயிர் விடும் போது
அது உருகிடும் என்றார்

பாசத்தின் உருவத்தை
பதமாய் சொல்வீர்
வேசம் இல்லாத
அன்னையே என்றார்

குழப்பக் கூடாதது
எதுவெனச் சொல்வீர்
குழந்தையின் தூக்கம்
அதுவெனச் சொன்னார்

பதவி எதுவென
பகிடியாய் சொல்வீர்
தன்னலமில்லா கடமையின்
பரிசது என்றார்

சுவையான உணவெது
நாவூறச் சொல்வீர்
பட்டினி போக்க
கிடைப்பவை என்றார்

கடவுளின் வெற்றி
எதிலெனச் சொல்வீர்
பூலோகத்தில் மனிதனைப்
படைத்தல் என்றார்

கடவுள் தோற்றது
எதிலெனச் சொல்வீர்
மனிதன் படைத்த
பணத்தினில் என்றார்

இரசித்துப் பார்த்தது
எதுவெனச் சொல்வீர்
பாறையில் சிந்தும்
அருவியை என்றார்

வெறுத்துப் பார்த்தது
எதுவெனச் சொல்வீர்
வன்முறையில் சிந்தும்
குருதியை என்றார்

சோதிக்க நினைப்பது
எதையெனச் சொல்வீர்
சாதிக்கத் துடிக்கும்
மனிதரை என்றார்

சவாலாய் இருப்பது
எதுவெனச் சொல்வீர்
துப்பாக்கியை தினமும்
தூங்க வைப்பது என்றார்

சாதிக்க நினைப்பது
எதுவெனச் சொல்வீர்
பூமியை அன்பால்
நிரப்புதல் என்றார்

- அஜந்தன், கந்தர்மடம்.





## என் தேடல்

வாழ்க்கையின் அர்த்தம்
புரியவில்லை
நீ தொலைந்து போன
துயரங்களில் இன்று
தேடுவதில் பொருளுமில்லை
நான் தெளிவாக
அறிந்த பின்னும்
தொடரும் இது
நிகழ்கால வேட்கை அல்ல
என் எதிர்கால வாழ்க்கை !

- கோஜி.

## அமைதியிழந்த என் மனது

தூறலே சாரலாய் வந்து போனாய்
கனவுகளில் விழித்திருந்த
இரவுகளில் விமோசனம்
கிடைக்கவில்லை.

பட்டுப் பூச்சி கனவுகளோடு
பத்திரமாய் உன் நினைவை
பொத்தி வைத்துப் பார்த்திருந்தேன்
பொக்கிஷமாய் நினைத்திருந்தேன்

தந்தி வந்து சேதி சொல்லும்
குழந்தையின் நிலை போல
ஏக்கத்துடன் நின்ற என்னை
ஏசி விரைந்து போனவளே!

பார்த்திருந்த பகலிரவை
பார்க்க நீ மறந்து போனாய்
பூத்திருந்த புஷ்பங்களை
புழுதியிலே தள்ளிக் கொண்டாய்

பெண்ணொன்று மீது
நான் கொண்ட காதலால்
பெரும்பாறை வீழ்ந்தது போலின்று
அமைதியிழந்து அலைகிறதே
என் மனது.

- வே.வே.அகிலேஸ்வரன், மருதங்கேணியூர்.

## அன்னையே வாழ்க



கருவறையில் உயிர் கொடுத்து
அருகிருந்து அன்பு காட்டி
உலகினிலே உயர்த்திவிட
உறுதுணையாய் அன்னையவள்

வெற்றிப்படி நாமேற
பற்றுதலாய் கல்வி சொல்லி
அயராது உழைத்திடும்
அன்னையே நீ வாழ்க

சாதனைகள் நாம் புரிய
வேதனைகள் நான் சுமந்து
மண்ணிலே நல்லவராய்
மகிழ்வோடு வாழ வைப்பாள்

- வேல்மகள், புளியம்பொக்கணை.

## அழகு

அனல் அனலாய் வந்தாய்
என் அழகிய காதலி நீ தான்
அமுதத்தில் முத்தம் தந்தாய்
நிலவின் தேவதை நீதான்
அணுஅணுவாய் இரசித்தேனே
என் சிகரப் பூ இதழும் நீ தான்



கடல் அலைகளில் தெரிகின்ற நிலவு
அது உன்னை விட என்ன அழகா
அடி அழகிய பெண்ணே
அதில் அழகிய கண்தான்
அது இரவினில் பூத்த விண்மீன்
என் மனதில் அது ஒரு செம்மீன்.

- லிங்கேஸ்வரன்.

## வலிகள்



போதுமடி நீ தந்த பாச வலிகள்
நான் பார்க்கின்ற பொழுது
நீ பார்க்காதிருப்பதும்....
நான் பேசுகின்ற பொழுது
நீ பேசாதிருப்பதும்... போதுமடி

சின்ன சின்ன வார்த்தை பேசி
செல்லமாக நீ சிரிப்பதுவும்...
கண்களால் சைகைகாட்டி விட்டு
கைகளால் முகத்தை மறைப்பதுவும் போதுமடி

என் வீட்டு சாலையோரம்
எதிரெதிரே சந்திப்பதுவும்...
வானம் பார்த்து பூமி பார்த்து
மணிக்கணக்காய் மௌனிப்பதுவும்... போதுமடி


எனைத்தேடி நீ வர
உனைத் தேடி நான் வர
இருவரும் காணாது
இரவாகிப் போனதும்....
கண்ட இடத்திலுன்னை
கண்டப்டி திட்டிவிட்டு -நான்
கண்கலங்கி உறங்கியதும்... போதுமடி

போதுமடி நீ தந்த பாசவலிகள்
எனக்காக நீயும் உனக்காக நானும்
வலி தாங்கியதுபோதும்
எமக்காக நாம் வாழ்வோம்
எந்தனிடம் வந்துவிடு

- முல்லைத்தீபன், ஒட்டிசுட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அழகான விளையாட்டு முற்றம்"



கதை, நாடகம், வில்லுப்பாட்டு எல்லாம் இரசிச்சீங்களோ? நீங்களும் பிள்ளையளுக்குக் கதை சொன்னீங்களோ தெரியவில்லை. நண்பர்களோடை சேர்ந்து தண்ணி பாவிக் கேக்கை வேறையாற்றையும் கதையள் கதைக் கிறதை விட, நல்ல கூத்துப் பாட்டு, வில்லுப் பாட்டுகளைச் செய்யிறதாலை உங்கடை ஆரோக்கியமும் வளரும். குடிகாரருடனான பிணைப்பும் அதிகரித்து, அடிபாடுகள் குறைஞ்சிடும். வில்லங்கங்களும் குறையும்.

நான் நாடகமாக்கின இன்னொரு சிறு கதையும் இருக்குது. முல்லைக் கோணேஸ் நல்ல ஆளுமையுள்ள ஒரு கலைஞன். ஓவிய மும் வரைவார சிறுகதையும் எழுதுவார். அவரின்ரை சிறுகதையிலை ஒன்று, 'விளையாட்டு முற்றம்'.

சிறுவர்களின்ரை ஒரு பொதுவான இயல்பு விளையாட்டிலை நாட்டம். அது இயற்கைக் கொடை என்றும் சொல்லலாம். மனித இருப் பையே தக்க வைத்ததிலை விளையாட்டு இயல் பூக்கும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது.

விளையாட்டுத்தான் எங்களுக்கு வீரத்தை வழங்கியது. விளையாட்டுத்தான் எங்களுக்கு பாதுகாப்பு நுணுக்கங்களை வழங்கியது. விளை யாட்டுத்தான் வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ளுகின்ற மனப்பாங்கைத் தந்தது. விளை யாட்டுத்தான் விட்டுக் கொடுக் கும் பண்பைத் தந்தது. விளையாட்டுத்தான் சிறந்த தீர்மானங் களை, விரைந்து எடுக்கின்ற திறனைத் தருவது. விளையாட்டுத்தான் எங்களுக்கு மற்றவர்கள் பற் றிய உண்மையான குணாதிசயங்களை அறியச் செய்தது. அதனாற்றான் 'பரமசிவம், விளையாட்டு என்பது வெறும் விளையாட்டல்ல' என்று முன் னரே சொல்லி வைச்சவர்.

முல்லைக்கோணேசின்ர 'விளையாட்டு முற்றம்' சிறுகதையிலை, ஒரு பாடசாலையில் ஒரு புது விளையாட்டு முற்றம் அமைக்கப் படுவதையும், திறப்பு விழாவிற்கு முதல்நாள், புதுப்பெயின்ற் அடிச்ச விளையாட்டு உப கரணங்களிலை, ஆர்வ மிகுதியாலை பிள்ளை கள் ஏறிவிளையாடி, அதனால் ஏற்படு கின்ற விளைவுகளையும், மிக நுட்பமாக எடுத்துக் காட்டியிருந்தார். அதனை வைத்து ஒரு சிறுவர் நாடகத்தை இந்தப் பரமசிவம் உருவாக்கினார்.

அதனை இந்த முறை உங்களுக்குத் தரப் போறன். நீங்கள் பிள்ளைகளை வைத்து உங்களது கற்பனைக்கேற்ற விதத்திலை காட்சி அவதானிப்புச் செய்யலாம். காட்சிப்படுத்தலாம் அதெல்லாம் நெறியாளரின் தனித்துவம்.

சரி நடிக்கப்பண்ண பிள்ளைகள் இல்லை, பெரிய ஆள்கள் இல்லையென்றால், நீங்களே ஒரு மேடையைக் கற்பனையிலை அமைத்து, கதாபாத்திரங்களைக் கற்பனையிலை உருவாக்கி, அவர்களுக்குப் பொருத்தமான வேட உடுப்புப் புனைந்து, இந்தப் பாடல் வசனங்களை அவர் களைப் பேசவிட்டு, மேடையிலை அவர்களை உலா வர விடலாம். அரங்கிலே முன் மேடை, நடுமேடை, பின்மேடை, வலது பக்க நடு மேடை, இடதுபக்க நடுமேடை, நடுநடு மேடை எங்கெங்கு பாத்திரங்கள் உலா வர வேண்டும் என்பதெல்லாம் கற்பனை செய்ப வரின் பூரண சுதந்திரத்துடன் இடம் பெறலாம்.

அதற்கும் வசதியில்லை - கற்பனைப் பஞ்சம் - என்றால், பேசாமல் ரீவியை ஓன் பண்ணிப் போட்டு அதுக்கு முன்னாலை இருங்கோ. அப்படியே வரண்ட மூளை உருவாகட்டும்.

திரை விலகும் போது ஒருவருமோ, எதுவித பொருள்களும் அரங்கில் இல்லை. ஒரு சில நிமிட அமைதியின் பின் பாடசாலை மணி ஒலித்தல்.

"டோய் இன்ரவல் மணி அடிச்சிட்டு" என்ற காட்டுக் கத்தலைத் தொடர்ந்து, மாணவர்கள் சுதந்திர உணர்வோடு மேடைக்குப் பல பாகங் களாலும் ஓடி வருதல்.

பாட்டு ஒலித்தல் (ஆசிரியர், பாடகர் திரு மலைச் சந்திரன் வேறொரு மெட்டுத்தான் இந் தப் பாடலுக்கு அமைத்திருந்தார். ஆனாலும் தலைவாரிப் பூச்சூடி மெட்டுத்தான் தொட்டுக் காட்ட எனக்குச் சௌகரியமாக உள்ளது. வழமை போல நீங்கள் உங்கள் தேவாரப் பாணியிலும்பாடி மகிழலாம். மற்றவர்களை வதைக் காமல் விட் டால் சரி. ஒகே!...நாடகம் தொடங்கப் போகுது.)

பாட்டு:

"அழகான விளையாட்டு முற்றம்
இங்கு ஆடிடும் பிள்ளைகள் அனைவரும் சுற்றம்'
(அழகான விளையாட்டு)
பாடியே ஆடுவம் ஊஞ்சல் உயர்
பரணிலும் ஏறுவோம் அஞ்சேல் அஞ்சேல்.
(அழகான விளையாட்டு)
ராட்டினம் ஆடுவோம் சுழன்று நல்ல
பாட்டுக்கள் பாடுவோம் பயின்று பயின்று
(அழகான விளையாட்டு)
குனிந்து நுழைவோம் விரைவாய்
நன்கு நிமிர்ந்து எழுவோம் புதிதாய் புதிதாய்"
(அழகான விளையாட்டு)

(இப்பாடலின்போது பிள்ளைகள் தங்களை மறந்து ஊஞ்சல் ஆடுவதாகவும், ஒருவர், இருவர் அதனை ஆட்டுவதாகவும், ராட்டினம் ஆடுவது போல கைகோர்த்து தாங்களே விளையாட்டு முற்ற உபகரணங்களாகவும், அதனைப் பயன்படுத்தும் ஆள்களாகவும் விளையாடிக் கொண்டிருப்பர். அப்போது பொறுப்பாசிரியை வந்து சப்தமாக)

**ஆசிரியர்:**

"ஸ்ரொப். பாருங்கோ நாளைக்குத் திறப்பு விழா, அடிச்ச பெயின்ற் காயவில்லை ஏறி ஊஞ்சலாட் டம். ஆட்டம் கூடிப் போச்சுது" (கண்டபாட் டிற்கு ஆத்திரத்துடன் பிள்ளைகளுக்கு அடி போட பலர் சிதறி ஓடுதல். ஒரு பிள்ளைக்கு நல்லாக அடிபட்டுவிடுதல். வேதனை யுடன் அப்பிள்ளையும் ஏனையோரும் வெளி யேறச் சோக கீதமாக 'அழகான விளை யாட்டு முற்றம்' பாடல் பின்னணியில் ஒலித்தல்)

(தண்ணீர்க் குடத்துடன் தாய் வீட்டிற்கு வர பிள்ளை அழுதுகொண்டிருத்தல்)

**தாய் (பதற்றத்துடன்) :**

"ஏனம்மா? என்ன நடந்தது?"

(பிள்ளை தாயுடன் சாய்ந்து கொள்ள, தாய் ஆதரவுடன் பிள்ளையின் தலையைக் கோதி விட அமர்க்களமாகப் பின்னணியில் 'அழகான விளையாட்டு முற்றம்' பாடல் ஒலித்தல். தாய் எவ்வாறாக இயங்க வேண் டும், மகள் எவ்வாறாகத் துலங்க வேண்டும் என்பதெல்லாம் நெறியாளரின் சுதந்திரம் புரியுதோ?. பாடல் ஒலித்து ஓய..

(மூன்று நான்கு பிள்ளைகள் மேடையில் தோன்றுதல்)

**பிள்ளை 1:**

"சுயாவுக்கு நல்ல அடி ரீச்சர். சுயாவுக்குக் காய்ச்சல். அவ இன்றைக்கு விளையாட்டு முற்றத் திறப்பு விழாவிற்கு வரமாட்டா..."

**பிள்ளை 2:**

"பாவம் சுயா. சுயா வராட்டி நாங்களும் ஸ்கூல் போக மாட்டம்...."

**பிள்ளை 3:**

"போய்ப் பார்த்துக்கொண்டு வருவமே?"

**பிள்ளை 1:** 'ஓமோம்'.

(பிள்ளைகள் ஒன்றாக வெளியேறல். பின்னர் ஒன்றாக மேடையில் தோன்றுதல். ஆசிரியர் அரங்கில் வந்து)

**ஆசிரியர்:**

"பிள்ளைகள் இது உங்களுக்கான விளை யாட்டு முற்றம். இன்று பிரதம விருந்தினர் வந்து விளையாட்டு முற்றத்தை உங்களுக் கெனத் திறந்து வைத்துள்ளார். நேற்று நான் கொஞ்சம் அவசரப்பட்டு பிள்ளையளை வெருட்டி அடிச்சுப் போட்டன்..என்ன? உங் களுக்குள்ளை சண்டை பிடிக்காமல் இதிலை நீங்கள் தாராளமாக விளையாடலாம்".

**பிள்ளை 1:**

ரீச்சர் நீங்களும் எங்களோடை சேர்ந்து விளையாட வேணும்.

**ஆசிரியர்:** "ஓ! தாராளமாக..!!"

(அழகான விளையாட்டு முற்றம் பாடல் ஒலிக்க பிள்ளைகளுடன் ஆசிரியரும் சேர்ந்து விளையாடுதல். அந்த விளையாட்டில் சீசோ இல்லாத போதும், அது போன்று பாவனை செய்தும், ஊஞ்சல் இலாத போதும், அது போன்று பாவனை செய்தும், ராட்டினம் போன்றும் குதூகலித்தும் விளையாடுதல்.


திரை மூடுகின்றது 'டொட்டடயங்...'

பம்பனி பரமசிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் 'தெத்துப் பல்' அழகா?

**- சுவாதி**



என் 'தெத்துப் பல் அழகா இருக்கா' என்று இரசிகர்களிடம் கேட்டுள்ளார் சுவாதி.

'சுப்ரமணியபுரம்' படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமான சுவாதி தனது 'தெத்துப்பல்லழகால்' இரசிகர்களின் மனதில் குடிகொண்டார்.

இதனைத் தொடர்ந்து தமிழில் படங்கள் ஏதும் அமையாததால்தான் அறிமுகமான பொலிவூட் உலகிற்கே சென்றுவிட்டார்.

தற்போது ''இதற்குத்தானே ஆசைப்பட்டாய் பாலகுமாரா'' படத்தின் மூலம் தமிழுக்கு மறுபிரவேசம் எடுத்துள்ளார்.

இதனைத் தவிர 'வடகறி' மற்றும் 'அமளிதுமளி' படத்தில் பிசியாக நடித்துக்கொண்டிருக்கும் வேளையிலும் தனது தமிழ்த் திரையுல வாழ்க்கையைக் கொஞ்சம் அழகோடு மனம் திறந்த ஒரு நேர்காணல்.

**கே:- நீண்ட நாளைக்குப்பின் ''இதற்கு தானே ஆசைப்பட்டாய் பாலகுமரா'' படத்தில் நடிக்கக் காரணம் என்ன?**

ப:- இதில் 'ஸ்பெஷலாக' ஒன்றும் இல்லை. முதன்முறையாக என் கதாபாத்திரத்தை அப்படியே காட்டிய படம் அது. கதை கேட்டதும் பிடித்துவிட்டது, இதில் நடித்தேன், இதற்கு நல்ல மதிப்பும் வந்திருக்கிறது.

**கே:- இரண்டு கதாநாயகர்கள் கதைகளைக் கொண்ட படங்களில் நடிப்பதில், கருத்து வேறுபாடு உண்டா?**

ப:- அப்படி எல்லாம் இல்லை. இந்தப் படத்தில், படம் முழுக்க சிரித்துக் கொண்டே தான் வேலை பார்த்திருக்கிறோம். படத்தில் எல்லோருக்கும் சமமாகத் தான் வாய்ப்பு இருந்தது.

என்னைப் பொறுத்தவரை, கதை முக்கியம் தவிர, எத்தனை பேர் என்பது முக்கியம் இல்லை. ஆனால் படத்தின் மதிப்பு மிகவும் முக்கியம்.

**கே:- தமிழ் சினிமாவில் ஏதேனும் மாற்றம் இருக்கிறதா?**

ப:- இப்போது நிறைய மாற்றம் இருக்கிறது. புதுப் புது இயக்குநர்கள், புதுப் புதுப் படங்கள், இரசிகர்களின் இரசனை மிகவும் மாறிவிட்டது.

புதிதாக இருந்தால் வரவேற்புக் கிடைக்கிறது, நிறைய ஊடகங்கள் நல்ல படங்களை மக்களிடம் எடுத்துக் காட்டுகிறார்கள். இது மிகவும் சந்தோஷமான விடயம்.

**கே:- கவர்ச்சியாக நடிப்பீர்களா?**

ப:- இப்போது வரை கவர்ச்சி எதுவரை என்ற விடயம் எனக்குத் தெரியவில்லை. கதைக்கு எவ்வளவு கவர்ச்சி தேவைப்படுமோ, அந்த அளவுக்கு நடிக்க வேண்டியிருக்கும். எனக்கு அதைப்போல் கதை இன்னும் அமையவில்லை. அதனால் அதைப் பற்றி யோசிக்கவில்லை.

***


# U.S.A GREEN CARD VISA

அமெரிக்க GREEN CARD VISA விண்ணப்பிப்பதில் 11 வருட அனுபவமிக்க எமது நிறுவனத்தில் 2015ஆம் ஆண்டுக்கான விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களை ரூபா 15/= முத்திரை யொட்டப்பட்டு சுயமுகவரியிட்ட தபாலுறையை

**Bristol Cyber Cafe**

No,8/3/4, Bristol Street, Colombo-01

என்னும் முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். பதிவிலக்கம் W/A 44843

இதுவரை விண்ணப்பப் படிவங்களை பெறாதவர்கள் உடனடியாக தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் நிறுவனத்திற்கு கிளை அலுவலகமோ அல்லது பிரதிநிதிகளோ இலங்கையில் எந்த ஒரு பாகத்திலும் இல்லை என்பதை அறியத்தருகிறோம்.

011 2393919, 077 4276579 Web: www.bristolcc.biz



ஹரே கிருஷ்ணா

# ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
## சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்

(ஸ்தாபக ஆச்சாரியார்: அருட்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதா)

**ரூபா.3,000/-**

**ஒரு செங்கல்லுக்காக செலுத்தி**

இல. 188, புதுசெட்டித்தெரு, கொட்டாஞ்சேனையில் நிர்மாணித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலய திருப்பணிக்கு உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

செங்கல்லின் முன்புறம் உங்கள் பெயரும், மறுபுறத்தில் ஹரே கிருஷ்ண நாமமும் பதிவு செய்யப்படும். இதனால் ஆலய கட்டடத்தில் உங்கள் பெயரும் இரண்டறக் கலந்து என்றென்றும் நிலைத்திருக்கும்.




**உங்களின் பெயரில் அர்ச்சனையும் செய்யப்படும்.**

அத்துடன் உங்களுக்கும் உங்கள் சந்ததிக்கும் பகவானின் பரிபூரண திருவருட் கடாட்ஷம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

**வங்கி விபரங்கள்**

Hatton National Bank, Kotahena
A/C name: ISKCON
A/C No : 207010000891

Commercial bank, Kotahena
A/C Name: ISKCON Temple Fund
A/C No. : 1120017042

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்:
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்
171, புதுசெட்டித்தெரு, கொழும்பு-13.
தொலைபேசி: 2433325
பெக்ஸ்: 2471099
ஈ-மெயில்: iskcon@slt.lk
www.iskcon.lk



# இந்தியத் திருத்தல யாத்திரை

**தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, பாண்டிச்சேரி ஆகிய நான்கு மாநிலங்களுக்கூடான திருத்தல யாத்திரை.**

**நாட்கள்: 18 + 2 யாத்திரிகர்கள்: 20 பேர்**

**ஆரம்பம்: டிசம்பர் 10ஆம் திகதி தொடக்கம்**

**தரிசிக்கும் ஆலயங்கள்**

மலைக்கோட்டை விநாயகர், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி முருகன், ஏகாம்பரேஸ்வரர், காமாட்சி அம்மன், வரதராஜப்பெருமாள், நவசீரடி பாபா, பொற்கோவில், திருப்பதி, அலமேலுமங்கா, காளகஸ்திரி, திருவண்ணாமலை, சிதம்பரம், நவக்கிரக ஆலயங்கள் 9. ராகு, கேது, சுக்கிரம், செவ்வாய், புதன், சூரியன், சந்திரன், வியாழன், சனி பகவான், வைரவன்பட்டி, குபேரன் கோவில், தஞ்சாவூர், மதுரை மீனாட்சி, சுந்தரேஸ்வரர், திருப்பரம் குன்றம், அழகர்கோவில், பழமுதிர்சோலை, நாகாத்தம்மன், மேல் மருவத்தூர், தோணியப்பர், ஸ்ரீ ரெங்கம், திருவானைக்காவல், சமயபுரம், மாங்காடு, திருவேற்காடு, அஷ்டலெட்சுமி, அறுபடை முருகன் (ஒரே இடத்தில்) பார்த்தசாரதி, கபாலீஸ்வரர், தன்வந்திரி விஸ்ணு, 408 சிவலிங்கங்களை ஒரே இடத்தில் தரிசிக்கலாம், வெக்காளி அம்மன் உட்பட 65 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிக்கலாம். சென்னையில் ஒரு நாள் செப்பிங் செய்யலாம்.

**எமது சேவைகள்:**

இருவழி விமான டிக்கட், காலை காப்பி, தேநீர்பலகாரம், மதிய உணவு சாதம், 4 மணி காப்பி, தேநீர், இரவு காப்பி, பலகாரம், தங்குமிடங்கள் 2,3 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறையுடன் கூடிய அறைகள், யாத்திரை முடியும் வரை A/C வாகன வசதி. இவை அனைத்தும் எமது சேவை. விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் பட முன்பக்க போட்டோ பிரதியும், ஒரு பாஸ்போர்ட் அளவு வர்ண புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். விபரம் கேட்டறிந்து பதிவு செய்க.

மேலதிக விபரங்களுக்கு:
**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**
59, C 3/3, மூன்றாம் மாடி, செட்டியார் தெரு, கொழும்பு -11
T.P: 0777 680102 / 0724 222 989/ 0777 362154

பாஸ்போட் இல்லாதவர்களுக்கு ஒரே நாளில் எடுத்து தர ஒழுங்குகள் செய்து தரப்படும் (நேரில் வரவும்)

| மட்டக்களப்பில் | திருகோணமலையில் | யாழ்ப்பாணத்தில் |
|---|---|---|
| K.ராஜகோபால் | திரு. T.சிவபாலன் | S.பிரசாத். 0212228155 |
| தொ.பே: 0653653719 | | M.குமாரசிங்கம் |
| [illegible] | | 0213206314, 0756149476 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பத்திரிகை கொழும்பு -17, வெள்ளவத்தை, பெரதும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2013 ஒக்ரோபர் 30 ஆம் திகதி வெளியிடப்பட்டது.